# தமிழரசு

செப் 16-1972



40 காசு

# அரசு – மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு –வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

மலர். 3 16-9-72 இதழ். 6



தூத்துக்குடியில்
கப்பலோட்டிய செம்மல்
வ.உ.சிதம்பரனாரின் சிலையை
செப்டம்பர் 5 ஆம் நாள்
முதல்வர் கலைஞர் தலைமையில்
தலைமையமைச்சர்
இந்திரா காந்தி
திறந்து வைத்தார்

வ.உ.சி நூற்றாண்டு
விழாக்களில் கலந்து
கொள்ளத் தமிழகம்
வந்த
தலைமையமைச்சருக்குச்
சிறப்பான வரவேற்பு
அளிக்கப்பட்டது!






திருநெல்வேலி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி,
திருவனந்தபுரம்
ஆகிய நான்கு நகரங்களை
இணைக்கும் புதிய
இருப்புப்பாதை
அமைக்கும் பணி
செப்டம்பர் 6-அன்று
தலைமையமைச்சரால்
தொடங்கி

# முதல்வரின் முத்துக்கள்

பொதுவாக, பத்திரிகை நடத்துபவர்கள் எவ்வளவு பெரிய பணம் படைத்த சீமான்களாக இருந்தாலும், அந்தப் பத்திரிகைக்கான வசதிகள் வாய்ப்புகள் எந்த அளவுக்கு வளம் பொருந்தியதாக இருந்தாலும், பத்திரிகையின் பிரதான தலைமை ஆசிரியர்—தலையங்கம் தீட்டுகிறவர் எவ்வளவு திறமை உடையவராக, அகில உலக அரசியல் விஷயங்களை எல்லாம் தெரிந்தவராக இருந்தாலும் ஒரு பத்திரிகை முழுமை பெற வேண்டுமானால் அது தலையங்கத்தால் மாத்திரம்—கவர்ச்சி மிக்க-வனப்பு மிக்க—அழகு ஓவியங்களால் மாத்திரம்—புகழ் பெற்றுவிட முடியாது. பத்திரிகையின் செய்திகள்-அவைகளை திரட்டித் தருகிற நிருபர்கள் பத்திரிகையின் நாடி நரம்புகளாக இருக்கின்றார்கள்.

• • •

சென்னை மாநகரத்திலே ஒரு பகுதி—நீண்ட நெடுங்காலமாக 'ஜார்ஜ் டவுன்' என்று அழைக்கப்பட்டு வருகிறது. அந்த ஜார்ஜ் டவுன் பகுதியை 'சிதம்பரனார் நகர்' என்று மாற்ற வேண்டுமென்று 1947-ல் இருந்து ஒரு கோரிக்கை இருந்து வருகிறது.

அந்தக் கோரிக்கையும் வெகு விரைவிலே நிறைவேற்றப்பட்டு—சென்னையில் உள்ள ஜார்ஜ் டவுன் சிதம்பரனார் நகராக மாறும் என்கின்ற அந்த அறிவிப்பையும் நம்முடைய பிரதமர் அவர்களுடைய முன்னிலையிலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயர் மாற்றுவதா? இது ஒரு பெரிய அறிவிப்பா என்று கேட்கக் கூடும். இலட்சியங்களுக்காகப் பெயர் மாற்றுவது முக்கியமானது என்பது அண்மையிலே பிரதமர் அவர்கள் சிம்லா மாநாட்டிற்குச் சென்றபோது—அங்கே ஒரு கட்டடத்திற்கு இடப்பட்ட பெயர்-இலட்சிய நோக்கத்தோடு மாற்றச் சொன்னார்கள் என்கின்ற காரணத்தினாலே தான் அவர்களுடைய முன்னிலையிலே இந்தப் பெயர் மாற்றத்தை நான் இங்கே தெரிவிக்கின்றேன்.

வ.உ.சி.யினுடைய பெயர்—என்றும் நின்று நிலவக்கூடிய பெயர்.

வ. உ. சி.—

'வ'—வழக்கறிஞர்.

'உ'—உரிமைக்காக வாதாடிய வழக்கறிஞர்.

'சி'—உரிமைக்காக வாதாடி-சிறை புகுந்த வழக்கறிஞர்.

* * *

மின்சார ரயில்களுக்கு 1985-ம் ஆண்டு வரை மின்சக்தி வழங்கிடத் தமிழக அரசின் சார்பில் நாங்கள் ஏற்கெனவே உத்தரவாதம் அளித்து விட்டோம். முதலில் ஒப்புக்கொண்ட கட்டணமான 8·5 காசு கட்டணம் அல்லாமல் யூனிட் ஒன்றுக்கு 7 காசுகளுக்கு சென்னை-திருவள்ளூர் மார்க்கத்தில் 1975 முதல் 1980 வரையிலான ஆண்டுகளில் மின்சார ரயில் விடத் தேவையான மின்சக்தி வழங்கிடத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் இந்தத் தீர்மானத்துக்குக் காரணம் இந்த மின்மயத் திட்டத்தின் அவசரமும் முக்கியத்துவமுமே யாகும்.

கரூர்—திண்டுக்கல், மதுரை வழியில் புதிய பிராட்கேஜ் இருப்புப்பாதை அமைப்பதும், மதுரை—மணியாச்சி—தூத்துக்குடி மார்க்கத்தில் மீட்டர் கேஜை, பிராட்கேஜாக மாற்றுவதும் மத்திய அரசினரால் கவனித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ள இதர திட்டங்களாகும்.

* * *

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் தமிழிசையைப் பரப்புவதற்கே அரும்பாடு படவேண்டியிருந்தது என்பதற்காக ஒவ்வொரு தமிழனும் வெட்கித் தலை குனிய வேண்டும். தமிழ் நாட்டில் தமிழிசையைப் பாட மாட்டோம் என்று கூறிய தமிழால் தமிழ் நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த சிலர் மத்தியில் தமிழிசையைப் பரப்பச் செட்டிநாட்டார் போன்றோர்களும், பல புலவர் பெருமக்களும் பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதைத் தமிழ் நாட்டில்தான் சொல்லிக்கொள்ள முடியும். அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா போன்ற வெளி நாடுகளுக்கு நாம் போய் நீங்கள் தமிழ் நாட்டில் என்ன செய்தீர்கள் என்று அவர்கள் நம்மைக் கேட்டுத் தமிழ் நாட்டில் தமிழிசையைப் பரப்பினோம் என்று சொன்னால் ''உங்களுக்கு வெட்கமில்லையா?'' என்றுதான் கேட்பார்கள்.

வந்து பார்த்தால்தான் அது எவ்வளவு பெரிய முயற்சி, அதில் வெற்றி பெற எத்தனை இன்னல்களைத் தாங்க வேண்டியிருந்தது என்பது தெரியும்.

தமிழால்-தமிழ்ப் பதங்களால் நடனம், இந்த நாட்டில் கற்பிக்கப்பட்டால்தான் எதற்காகக் கை அசைகிறது, எதற்காக விழி அசைகிறது, எதற்காகத் தலை அசைகிறது என்பதன் பொருள்

முதல்வர் டாக்டர் கலைஞர்

எதிரே இருப்பவர்களுக்கு விளங்கும். அப்போதுதான் உண்மையான அழகை அவர்களால் புரிந்துகொள்ள முடியும்.

* * *

சில பத்திரிகைகள் கண்ணொளி வழங்கும் திட்டத்தைப் பாராட்டுவதற்குப் பதிலாக ஒரு கண்ணாடியின் விலை 15 ரூபாய் என்றால், ஆயிரம் கண்ணாடிகள் வழங்குவதற்கு 15,000 ரூபாய்தான் செலவு; இதற்குப் போய் ஒரு இலட்சம் ரூபாய் செலவா என்று எழுதுகிறார்கள்.

கண்ணாடி என்பது கண் சிகிச்சை முடிந்து ஒரு வாரத்திற்குப்பிறகோ, பத்து நாளைக்குப் பிறகோ இறுதியாக நடைபெறுகிற நிகழ்ச்சியாகும். அதற்கு முன்புஅங்குள்ள நோயாளிகளுக்கு தகுந்த வசதிகள் அளித்து, அவர்களுக்கு உணவு, உறையுள் போன்ற வசதி வாய்ப்புகள் அளித்து, அறுவைச் சிகிச்சை செய்து, அதற்குப் பணியாளர்கள் மற்றும் அங்கு ஊழியம் புரிய அந்தந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற தொண்டர்கள் இவர்களுக்கெல்லாம் ஆகின்ற செலவுகளையும் வைத்துப் பார்த்தால் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ஒரு நோயாளிக்கு 50 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரை செலவாகும் நிலை இருக்கிறது. ஆகவே, ஆயிரம் பேருக்கோ இரண்டாயிரம் பேருக்கோ முகாமில் கண்ணொளி வழங்குவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். ஏதோ வெறும் கண்ணாடி வழங்கி விடுவதால் கண்ணொளி வந்து விடாது. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகுதான் கண்ணாடியைப் பயன்படுத்தமுடியும்.

* * *

இந்த ஆண்டு மேலும் 5,000 ஹயர் கிரேடு ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளம் இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

2,000 இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்களுடைய ஊதியம் வழங்கப்படுகிறது. இதையும் மறந்து விடக்கூடாது.

மருத்துவ வசதி, நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப் படி போன்ற வசதிகளைத் தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் உட்பட அனைவரும் பெறுகின்ற வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியது இந்த அரசு.

பி. டி. ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடை உருவாக்கியது இந்த அரசு.

செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடை உருவாக்கியது இந்த அரசு.

தலைமை ஆசிரியர்களுக்குத் தனிச் சம்பளம் என்பதை இந்த அரசுதான் அறிவித்திருக்கிறது.

தாராளமாகப் பல்வேறு பென்ஷன் வசதிகளை ஆசிரியச் சமுதாயத்திற்கு இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது.

* * *

வேலையின்மைத் துயரைத் தணிக்கும் பொருட்டு ஏற்கெனவேயுள்ள திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ. 438 இலட்சம் செலவில் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றையும் நாம் மேற்கொண்டுள்ளோம். இதில் ரூ. 3 கோடி செலவாகும் கிராமச் சாலைத் திட்டமும் அடங்கும். இதன் மூலம் 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையுடைய கிராமங்கள் அனைத்திற்கும் தார்ச் சாலைகள் வடிவில் எல்லாப் பருவ நிலைக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம் பயிற்சியேதும் பெற்றிராத 15,000 பேர்களுக்கும், பொறியாளர்கள், நிருவாகப் பணியாளர்கள் அடங்கியமேற்பார்வைப் பணியாளர்களுக்கும் வேலையளிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக "மானியம் 21"-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தில் இளைஞர் அணிக்குக் கூடுதலாக 1,450 ஆண் தொண்டர்களையும் 150 பெண் தொண்டர்களையும் சேர்ப்பதும் அடங்கும்.

* * *

தோற்றத்தால்—பிறந்த குடி ஏற்றத்தால் அப்படிப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டாலும் சாதாரண ஏழை எளியவர்கள்— தொழிலாளர்கள் —பாட்டாளிகளிடையே நிரம்ப நம்பிக்கையைப் பெற்றிருக்கிறவர்கள் நாங்கள் என்பதற்கு அடையாளச் சின்னங்கள்தான் ஆங்காங்கே எழுந்திருக்கின்ற அழகழகான வீடுகளாகும்!

ஏழாண்டுகளில் இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டு வேகமான பயணத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற குடிசைமாற்றுத் திட்டமாகும்.

அப்படியென்றால் அங்கெல்லாம் குடிசைகளே இல்லையா என்றால் நிரம்ப உண்டு. ஆனால் அந்தச் சிந்தனை—குடிசைகளை மாற்றிக் அமைக்க வேண்டும் என்ற எண்ணம்—குடிசை வாழ் மக்களுக்கு வசதி செய்து தர வேண்டும் என்ற மனப்பான்மை நமக்கு எழுந்ததால் நம்மால் இப்படிப்பட்ட பணி துவக்கப்பட்டது.

## அடுத்த இதழில் . . . .

- காலத்துக்கு ஏற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு
- சோயா மொச்சை—சிறப்புக் கட்டுரை
- காணவாரீரோ காந்தி இல்லம்!
- சிறுவர் சோலையிலே.........!

இன்னும் சுவையான புதிய செய்திகள்.



# அண்ணன் மார்க்கம்

## கவிஞர் கருணாநந்தம்

தாழை. கள்ளி இரண்டிற்கும் முட்கள் உண்டு;
தாழை மலர் மணம்போலக் கள்ளிக் குண்டோ ?
வாழைகளில் செவ்வாழைப் பழத்தைப் போன்றாய் !
வாழையடி வாழையாகத் தழைத்து வந்தோம் !
மோழைகளும் முழுமனித ராகச் செய்தாய் ;
மோனத்தால் ஞானத்தைப் போதிக் கின்றாய் !
" ஏழைகளின் சிரிப்பினிலே இறைவன் உள்ளான் "
எனுங்கொள்கை ஈடேற்ற வாழ்வோம் யாமே !

படிப்படியாய்ப் பிற்படுத்தப் பட்டோர் மேலும்
பயனுறவே நயந்துபல நலன்கள் செய்யும்
அடிப்படையை உணராதோர். துடிப்புக் கொண்டே
ஆராய முனைகின்றார் குறைகள் நாடி !
இடிப்பாரை வேண்டாமென் றுரைக்க வில்லை !
ஏராளக் காரியங்கள் ஏழ்மை போக்க
முடிப்பதனைக் கண்திறந்து பார்க்க வேண்டும் !
முயல்வதிலே தவறிருந்தால் திருத்திக் கொள்வோம் !

ஆற்றுகின்ற நல்வினைகள் சென்று யாரை
அடையவேண்டும் ? அவரெல்லாம் நல்ல வண்ணம்
போற்றுமாறு. புரிகின்ற வகையில் சொல்லிப்
பூரிக்கச் செய்வதன்றோ உயர்ந்த நோக்கம் !
ஏற்றிவிட்ட ஏணிதன்னை மறக்க லாமோ ?
எல்லாமே ஏழையிட்ட பிச்சை யன்றோ ?
மாற்றமின்றித் தம்பிசெல்லும் அண்ணன் மார்க்கம்
மக்களாட்சி மலர்குலுங்கும் பூக்கா டாகும் !



முத்து

# அஞ்சல் தலையில் அன்னைத் தமிழகம்



'வாணிபத்தின் மூலம் இந்திய நாட்டையே கையகப்படுத்தி, இங்கு ஆதிக்கம் செலுத்திய வெள்ளையரின் ஏகாதிபத்தியம் வேரோடும் வேரடி மண்ணோடும் கல்லியெறியப்பட வேண்டும்; இந்திய நாடு விடுதலை பெற்று விளங்கவேண்டும்' என்று 1906-ல் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்துக் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரை 'இந்தியக் கடல் வாணிபத்தின் தந்தை' என்று குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதேயாகும்.

வ. உ. சிதம்பரனார் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் பிறந்தார். அவரது தந்தையார் உலகநாதபிள்ளை; தாயார் பரமாயி அம்மாள். வ.உ.சி. தனது ஆரம்பக்கல்வியைப் புதியம்புத்தூர் கிராமத்திலும், மெட்ரிக் படிப்பை தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியிலும் படித்துப் பின்னர் திருச்சி சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞரானார். அவர் தலைசிறந்த கிரிமினல் வழக்கறிஞராக விளங்கினார்.

அப்போது, பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டதால், நாட்டு மக்களிடையே தேசிய உணர்ச்சி பீறிட்டெழுந்தது. அப்போதுதான், மேலே கூறியபடி, வ.உ.சி. வெள்ளையர் ஆதிக்கத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் கல்லியெறியவேண்டும் என்ற முடிவோடு, பொது மக்களிடம் பங்கு திரட்டி, 'சுதேசிக் கப்பல் கம்பெனி'யை நிறுவினார். இதற்காக லாவோ, கால்வியா என்ற இரு கப்பல்களும் நீண்டகால வாடகைக்கு அமர்த்தப்பட்டன. இவை தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே சரக்குப் போக்குவரத்துக்குப் பெரிதும் பயன்பட்டன. இதனால், ஆத்திரமுற்ற வெள்ளை ஏகாதிபத்தியம், அவரைச் சூழ்ச்சியால் சிறைப்பிடித்து அவர் மீது பலவித வழக்குகள் ஜோடிக்கப்பட்டு, இறுதியில் இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்பீலில் இது 6½ ஆண்டாகக் குறைக்கப்பட்டது. ஆனாலும் 5 ஆண்டுகளில் 1912 டிசம்பரில் அவர் விக்டோரியாப் பேரரசியார் பட்டமேற்பு விழாவையொட்டி விடுதலை செய்யப்பட்டார்.

வ.உ.சி. இந்த ஐந்தாண்டுச் சிறைத் தண்டனையை நெல்லை, கண்ணனூர், கோவை ஆகிய ஊர்களின் சிறைச்சாலைகளில் கழித்தார். கோவைச் சிறையில் அவர் இருந்தபோதுதான், மாட்டுக்குப் பதிலாக அவரையே செக்கில் மாடாகக் கட்டி இழுக்கச் செய்தார்கள்; கட்டடம் கட்டுவதற்காகக் கல் உடைக்கச் செய்தனர்.

அன்று, வ.உ.சி. சிறையிலே இழுத்த செக்கு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க இப்போது சென்னைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அது, விரைவில் காட்சிப் பொருளாக வைக்கப்பட இருக்கிறது.

அன்று, சிதம்பரனார் கை நோகக் கல்லுடைத்தார். அந்தக் கல் நொறுங்கியதுபோல, அந்நிய ஏகாதிபத்தியமும் இந்திய அடிமைத்தளையும் நொறுங்கிச் சிதறின.

சிறையில், தமிழ் வகுப்பு நடத்தித் தன்னுடனிருந்தவர்களுக்குத் தமிழறிவு புகட்டினார். திருக்குறள் வகுப்புகள் நடத்தினார். அவர் விரும்பியவாறு, இந்தியா சுதந்தரமடைந்து, இன்று தமிழகத்தில் துறைதோறும் செந்தமிழே செழித்து வளரக் காண்கிறோம்.

வ.உ.சி. சிறந்த சீர்திருத்தவாதியாகவும், ஆலய நுழைவு, கைம்மை மணம், ஒன்றாக இருந்து உண்ணல் ஆகியவற்றில் தீவிர வாதியாகவும் விளங்கினார். அரிசனத் துறவி ஒருவரை வீட்டில் சேர்த்து வைத்து உணவு வழங்கியதற்காக வ.உ.சி. யைச் சமூகத்திலிருந்தே தள்ளி வைத்த 'பெருமையுடைய சமுதாயம்', இன்று அவருக்கு நடைபெறும் நூற்றாண்டு விழாவைக் கண்டு மகிழ்கிறது!

வ.உ.சி. அன்று கனவு கண்டபடி இன்று சுதந்தர நாட்டுக் கப்பல் சென்று கொண்டிருக்கிறது. பல துறைகளிலும் அவர் கனவு நனவாகி வருகிறது.

தமிழக அரசு, தமிழகத்தின் தலைநகரில் சீரோடும் சிறப்



VOLTAS

# பருத்திப்பயிர் களுக்குப் பாதுகாப்பளிக்க மிகச் சிறந்தது



## ஜோலோன்®

மூலப் பொருள்

## 'ரோன்-பொலெங்க்'

பாரீஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால்
கண்டுபிடிக்கப்பட்ட போஸலோன்
பூச்சி மருந்து

RHONE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு ரோன்—பொலெங்க் நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப் பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட ஜோலோன் பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயி களுக்கு நோயற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள், வண்டுகள் முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, ஜோலோன் பருத்திப்பயிர்களைக் காய்ப்புழுக்கள் தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் ஜோலோன் பயிர்ச்சிலந்தியை ஈடற்ற முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் ஸல்பரோ அல்லது வேறு எந்தப் பூச்சி மருந்தோ உபயோகப்படுத்தத் தேவையில்லை.

காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு கில்வால் (மூலப்பொருள் வேமிடோதியோன் ஸிஸ்டமிக் (Systemic) பூச்சிமருந்து) மிகச்சிறந்தது.

பாரதத்தின் பசுமைப் புரட்சியைப்
பாதுகாப்பது
**'ரோன்-பொலெங்க்'**
பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரிக்குத்
தயவுசெய்து தொடர்பு கொள்க:
**வோல்டாஸ் லிமிடெட்**
கெமிக்கல்ஸ் டிவிஷன்,
19, கிரஹாம் ரோடு, பெல்லார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.

போடும் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில் அந்தப் பெருமகனுக்குச் சிலையெடுத்துச் சிறப்புச் செய்தது. அண்மையில், சுதந்தர தின வெள்ளி விழாவில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, அன்று சிதம்பரனார் கையும் மெய்யும் நோகச் சிறையிலே இழுத்த செக்கு, இன்று சென்னைக்குக் கொண்டுவரப் பட்டுவிட்டது.

அடுத்து, செப்டம்பர் 5-ஆம் தேதியன்று, அவரது நூற்றாண்டு விழாவையொட்டித் தூத்துக்குடியில் தமிழக முதல்வர் தலைமையில், இந்தியப் பிரதமர், திருமதி இந்திரா காந்தி அவர்கள், வ. உ. சி. யின் முழு உருவச் சிலையைத் திறந்து வைத்துப் பாராட்டினார். திருமதி இந்திரா காந்தி அவர்கள் பேசுகையில், தூத்துக்குடித் துறைமுகத்தில் முதல் கப்பல் கட்டும் துறைக்கு வ. உ. சிதம்பரனாரின் பெயரிடப்படும் என்றார்;

தமிழக முதல்வர் கலைஞர் தமது தலைமை உரையில், சென்னையிலுள்ள ஜார்ஜ் டவுன் வ. உ. சி. நகர் என்று பெயர் மாற்றப்படும் என்று அறிவித்தார்.

இந்த நூற்றாண்டு விழாவையொட்டி, 5—9—1972-ல் இந்திய அஞ்சல் துறை, கப்பலைப் பின்னணியாகக் கொண்ட வ. உ. சி. யின் திருவுருவம் பொறிக்கப்பட்ட 20 காசு விலையுள்ள 30 லட்சம் அஞ்சல் தலைகளை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது. தூத்துக்குடியில், திருமதி இந்திரா காந்தி இதனை வெளியிட்டு, முதல் அஞ்சல் தலையை-அஞ்சல் தலை அடங்கிய ஆல்பத்தைத் தமிழக முதல்வர் கலைஞருக்கு வழங்கினார். இவ்விழாவிற்கு தமிழக ஆளுநர் திரு கே.கே. ஷா தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமையாக்குதல்) சட்டத்தின் மூலம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு போன்ற நிலங்களை உடைமையாக்க முடிந்தது என்பதை மதிப்புக்குரிய உறுப்பினர்கள் அறிவர். இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தும்போது எடுத்துக் கொள்ளப்படும் நிலங்களுக்காக இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காகும் ரூ. 15.1 இலட்சம் செலவிற்கு ''36-வது மானியம்'' வகை செய்கிறது.

*(1972–73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து).*

## உலகத் தமிழ் மாநாடு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இலக்கிய மொழியாகவும், பேச்சு மொழியாகவும் வாழ்ந்து வரும் ஒரே மொழி தமிழ்தான் என்பது மொழி வரலாறு காட்டும் முற்றமுடிந்த முடிபாகும். எனினும் தமிழ் மொழி ஆராய்ச்சியில் உலக மொழி வல்லுநர்கள் பலரும் போதிய அக்கறை காட்டாமலே இருந்து வந்தனர்.

1786-ஆம் ஆண்டில் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வட மொழிக்கும், கிரேக்கம், லத்தீன் போன்ற ஐரோப்பிய மொழிகளுக்கு மிடையே உள்ள ஒற்றுமையைச் சுட்டிக் காட்டினார். அதன் பிறகுதான் இந்திய மொழிகளின் ஆராய்ச்சியில் மேலை நாட்டு மொழி வல்லார் எல்லாரும் ஆர்வம் காட்டத் தொடங்கினர். என்றாலும், வடமொழியை ஆராய்வதே இந்திய மொழிகள் எல்லாவற்றையும் ஆராய்வதற்கு ஒப்பாகும் என்று கருதி விட்டனர். தமிழும் பிற திராவிட மொழிகளும் வடமொழியிலிருந்தே தோன்றியவை என்னும் தவறான நம்பிக்கையிலேயே இப்படிக் கருதித் தமிழ் மொழி ஆராய்ச்சியை ஒதுக்கினர்.

காலப் போக்கில் திராவிட மொழிகளின் தனித் தன்மை இந்த ஆராய்ச்சியாளர்களுக்குப் புலப்பட்டது. உலகின் பல பகுதிகளிலும் தமிழ் பரவியுள்ளதைக் கண்டனர். தனியார்வம் கொண்டு தமிழின் சிறப்புக்களை ஆராயத் தொடங்கினர். தமிழர்களின் தியாகச் சிறப்பினைக் கண்ட காந்தியடிகள் தமிழின் சிறப்பையும் கண்டார்; வியந்து பாராட்டினார்; அதைக் கற்றார்.




அனைவரும் கற்கும்படி கூறினார்.

உலக மொழியியல் அறிவாளர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் 1964-ல் வல்லுநர் பலரால் அமைக்கப்பட்டது. முதல் அனைத்துலகத் தமிழ் மாநாடு 1966-ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்றது. மலேசிய அரசின் ஒத்துழைப்பும், மலேசியப் பல்கலைக் கழகத்தின் ஈடுபாடும் இம் மாநாட்டின் வெற்றிக்குத் துணை நின்றன. இம் மாநாட்டில் 25 நாடுகளைச் சார்ந்த 200 ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968-ஆம் ஆண்டு சனவரி 3 முதல் 10 ஆம் நாள் வரை தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில் நடைபெற்றது. இம் மாநாடு கற்றறிந்த புலவர்களை மட்டுமல்ல, மற்ற மக்கள் அனைவரையும் கூடக் கவர்ந்தது. ஈர்த்துப் பிடித்த இதய நாடிகளில் தமிழின் இன்ப நாதத்தை எழுப்பியது; இனப் பெருமையை இனிதே உணர்த்தியது. தமிழினத்தின் புகழ்மிக்க வரலாற்றை உயிரோவியமாக மக்கள் முன் நிறுத்திய ஒரு மாபெரும் ஊர்வலம், தமிழின் சிறப்பைத் தரணிக்கு எடுத்துக் காட்டிய புலவர் பெருமக்களுக்கு வள்ளுவர் முதல் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வரை அனைவருக்கும் சிலை எழுப்பிச் சிறப்புச் செய்தமை, ஒரு வாரகாலம் சிறப்புச் சொற்பொழிவுகளும், இலக்கியப் பட்டி மன்றங்களும் கவியரங்கங்களும் மக்கள் உள்ளமெல்லாம் தமிழ் இன்பம் பாய்ச்சிப் பரவசப்படுத்திய எழிற் கோலம் ஆகிய அத்துணைச் சிறப்புக்களும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தனிச் சிறப்புக்களாகும்.

இத்தகு சிறப்புப் பெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாகவும், எழில்மிகு தமிழின் ஈடற்ற பெருமையை வையகம் எங்கும் வாரி இறைத்திடவும் உலகமும் கோபுரமும் திருக்குறள் புத்தகத்தின் மேல் அமைந்திருப்பது போல வடிவமைத்து, இந்திய அஞ்சல் துறை 15 காசு விலையுள்ள 20 இலட்சம் அஞ்சல் தலைகளை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

—சாமிபழ







**ஸைதியான்**

## கால்நடைகளுக்கும், கோழி முதலிய பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளிலிருந்து முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு

**மிருகங்கள் புழு பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவு—இலாபமின்மை.**

ஆனால் இப்பொழுது கால்நடைகளுக்கும், பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளற்ற ஆரோக்கியமான வாழ்வளிக்க **ஸைதியான்** இருக்கிறது.

மிகவும் அபாயக்குறைவான இந்த பூச்சிக் கொல்லி கெடுதலற்று கையாளக் கூடியது. உபயோகிக்கச் சிக்கனமானது.

மிருகங்களின் மேலும் அவற்றைச் சுற்றியும் **ஸைதியான்** தூவுவதன் மூலம், அவைகளுக்கு ஈடுசெய்ய முடியாத கெடுதல் விளைவதைத் தடுக்கலாம்.

**ஸைதியான் ஸயனமைட் தயாரிப்பு.**

**ஸைதியான்**

## 90 வெவ்வேறு வகையான பயிர்களைத் தாக்கும் 100 வகை புழுபூச்சிகளைப் பயனுள்ள முறையில் கட்டுப்படுத்துகிறது

**புழு பூச்சிகளால் உங்கள் தானியப் பயிர்கள் நாசமாகிவிடக்கூடும்.**

**உங்கள் இலாபமும் கூட.**

இப்பொழுது உங்கள் பயிர்களை புழு பூச்சிகளினின்று சக்திவாய்ந்த முறையில் பாதுகாக்க

**ஸைதியான் உபயோகியுங்கள்.**

அபாயக் குறைவான, சக்திமிக்க பூச்சிக் கொல்லியான **ஸைதியான்** பட்டதும் பூச்சிகள் நசித்துவிடுகின்றன. எனவே, இது பயிர்களுக்கு சொல்ல முடியாத சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கிறது.

உபயோகிக்கக் கெடுதலற்ற, திறன் மிக்க, சிக்கனமான **ஸைதியான்** அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு உபயோகிக்கப்படலாம். இதனால் முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கு ஒரு விதமான கெடுதலும் விளைவதில்லை.

**ஸைதியான் ஸயனமைட் தயாரிப்பு.**

**ஸைதியான்**

## 5 வெவ்வேறு வகையான 50 காய்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் தாக்கும் 75க்கு மேற்பட்ட புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது

**உங்கள் காய்கறி மற்றும் பழப் பயிர்களுக்கு புழு பூச்சிகளால் ஆபத்து விளையும்போது, சேதத்தைத் தவிர்க்க ஒரே ஒரு வழிதான் உள்ளது**

**அதுவே ஸைதியான்.**

கையாளுவதற்கு அபாயக் குறைவான, சக்திமிக்க பூச்சிக் கொல்லியான **ஸைதியான்** பட்டதும் புழு பூச்சிகள் மடிந்துவிடுகின்றன. சொல்ல முடியாத சேதம் தவிர்க்கப்படுகிறது.

பயிர்களின் மீது கெடுதலான விளைவுகள் எதுவுமின்றி, அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு **ஸைதியான்** உபயோகிக்கலாம்

**ஸைதியான் ஸயனமைட் தயாரிப்பு.**




# ஸைதியான்

பூச்சிகொல்லி

ரிஜிஸ்டர்ட் டிரேட். ஸைதியான்

விவசாயப் பிரிவு,
ஸயனமைட் இந்தியா லிமிடெட்,
த.பெட்டி எண் 9109, பம்பாய்-25.

CYANAMID

உலகெங்கும் விவசாயத்திற்குப் பணிபுரிகிறது

ITA'S-CR-374 TAM



# கற்புத்திறத்தில் கண்ணகி திறம்

கோவை இளஞ்சேரன்

பெண்ணின் பெருமை கற்பிலே தொடங்கிக் கற்பிலேயே நிறைவடைகின்றது. அவளது சிறுமைக்கும் கற்பே கட்டளைக் கல். கற்பு ஒரு வியப்பான மின்னாற்றல். ஒரு காளை ஒரு கன்னியை உள்ளத்தால் தொட்ட அளவில் அவள் கற்பு என்னும் மின்னாற்றல் பெற்றவள் ஆவாள்; தங்கக் கம்பியாய்த் தகதகத்து நிற்பாள். அவளைப் பற்றிய காம நினைவு மற்றொருவனது நெஞ்சத்தில் பட்ட அளவிலே அவளது மின்னாற்றல் வழிந்து போகின்றது; இந்நிலையில் தகரத் தகடாய்த் தரையில் கிடப்பாள். ''கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்'' என்பது தமிழ் மரபு.

கற்பின் திறத்தைக் கணவன் இறப்பிலே கண்டனர் தமிழர். கணவன் இறந்ததும் '' தன்னுயிர் கொண்டு அவன் உயிர் தேடினள் போல் '' இயற்கையில் இறப்பது ''தலையாய கற்பு'' எனப்பட்டது. கணவன் இறப்புடன் நிறை நெஞ்சோடு நெருப்பில் இறங்கியோ, மலையிலிருந்து வீழ்ந்தோ மடிவது "இடையாய கற்பு'' எனப்பட்டது. கணவன் இறப்பால் வெம்பி நைந்து கைம்பெண்ணாய் முடிவது ''கடையாய கற்பு'' எனப்பட்டது.

சிலப்பதிகாரம் இம்மூன்றையும் காட்டும். பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்ததும் உடன் இறந்த கோப்பெருந்தேவிபால் தலையாய கற்பினைக் காண்கின்றோம். கொலைக்களப்பட்ட சங்கமன் என்பானது மனைவி நீலி என்பாள் மலைமேலிருந்து வீழ்ந்து மடிந்தாள். இக்கதையை மதுராபதித் தெய்வம் கூறுவதில் இடையாய கற்பைக் கேட்கின்றோம். கோவலன் இறந்ததும் துறவை மேற்கொண்டு கைம்பெண்ணாகி முடிந்த மாதவிபால் கடையாய கற்பைக் காண்கின்றோம்

இவற்றையெல்லாம் மீறியதாய்ச் ''சீறிய கற்பு'' ஒன்றினைச் சிலம்பு செம்மையாய்க் காட்டுகின்றது.

### சீறிய கற்பு

கோவலன் கொலையுண்டதும் சீறி எழுந்தாள் கண்ணகி. இச்செயலால் முன்னர் குறிக்கப்பட்ட மூன்று வகைக் கற்பையும் ''ஆறிய கற்பு '' என்றாக்கினாள் கண்ணகி, '' சீறிய கற்பு '' என்றொரு தனித்தன்மையைத் தோற்றுவித்தவள் ஆனாள். அச்சீறிய கற்பே சிலப்பதிகாரம் ஆயிற்று.

இது என்ன? கற்பிலேயும் உயர்வு தாழ்வா? அதில் தரம் வேறா? திறம் வெறா? இவ்வாறு எண்ணத் தோன்றும். இவ்வினாக்கள் அமைதி காணத்தக்கவை. அதற்கு உளவியல் வழி செல்ல வேண்டும். கற்புக்கு ஆணி வேர் அன்பு. அன்பின் அடித்தளம் உள்ள உணர்வு. அன்பு தோன்றுவதற்கும், வளர்வதற்கும், நிறைவு பெறுவதற்கும் அதன் அடித்தளமான உணர்வின் காரணமும் வலிமையானதாக வேண்டும். அவ்வுணர்வு வண்ணமாய் வளர வேண்டும் ; திண்ணிதாய் நிலைக்க வேண்டும். இந்நிலைகளைக் காதல் உணர்வால் காணக் கூடும்..

ஆண் பெண் ஒருவரையொருவர் காணாத நிலையில் பண்பு நலங்களைக் கேட்டு உணர்வு ஊறப்பெறுவர் ; அவ்வுணர்வால் அன்பு உயிர்க்கும். உயிர்த்த அன்பால் நினைவு ஒன்றுவர். பின்னர் ஒருகால் நேரே கண்டு அன்பில் தோய்வர். 'நீயே நான் ; நான் இன்றேல் நீ இல்லை' என் உணர்வு ஒன்றுவர்; ஈருயிரும் ஓருயிர் ஆகும். இவ்வன்பு 'உயிர் ஒன்றிய அன்பு'.

உயிர் ஒன்றிய அன்பு , ஓர் உயிர் போனால் ஒன்றிய மற்றைய உயிரையும் போகச் செய்யும். இந்நிலை தலையாய கற்பு எனப்பட்டது.

ஒருவரையொருவர் கண்ணால் கண்டு தோற்றப் பொலிவாலும் மாற்றமில்லாத குண நலன்களாலும் அன்பு தோன்றப் பெறுவர். ஒருவருக்கொருவர் இன்றியமையாதவராய் அமைவர். 'உன்னோடு நான் ; என்னோடு நீ' என்று உணர்வு பொருந்திய அன்பு ஆழமாய்ப் பாயும். இவ்வன்பு 'ஆழ்ந்த அன்பு'.

ஆழ்ந்த அன்பு, ஒருயிர் பிரிந்தால் மற்ற உயிர் பிரிவுத் தவிப்பால் உடலில் உலவ விரும்பாமல் போக்கிக்கொள்ளும். இஃது ' இடையாய கற்பு ' எனப்பட்டது.

பெற்றோராலோ மற்றவராலோ ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டு, உடல் உறவாலும், பழக்க ஆர்வத்தாலும் அன்பு பிறக்க நிற்பர். நின்று, ' ஒருவருக்கு ஒருவராய் ' 'உனக்கு நான்; எனக்கு நீ' என்று உணர்வு கூட அன்பு இணையும். இவ்வன்பு ' இணைந்த அன்பு '.

இணைந்த அன்பு, ஓர் உயிர் பிரிந்தால் மற்றைய உயிர் பிற கடமைகளின் நினைவால் பிரிவுத் துன்பத்தைத் தாங்கச் செய்யும். செய்து, உடலை உலவவைக்கும். இது கடையாய கற்பு எனப்பட்டது.

இம்மூன்றிலும் தலையாய கற்பு, இடையாய கற்பு ஆகிய இரண்டால் ஓர் உயிரோடு மறு உயிரும் போகும். இவை இரண்டும் அன்பு ஆற்றிய கடமை. எனவே இவை இரண்டும் '' அன்புக் கடன்'' (அற்புக் கடன்) என்று கூறப்பட்டன.

கடையாய கற்பு மன வலிமையால் நோன்பு வாழ்வை மேற்கொள்வது. இது ‘கைம்மை நோன்பு’ அல்லது ‘வாழ்வுத் தவம்’ எனப்பட்டது.

கணவன் இறந்ததும், அவன் இறப்பு பழியால் நேர்ந்திருப்பின் சீறி எழுந்து அதனைத் துடைத்துப் பழி தீர்த்தல் கற்புடைய மனைவியின் கடமை ஆகின்றது. இவ்வாறு கற்பை வெளிப்படுத்துவது ‘‘கற்புக் கடன்’’ எனப்பட்டது. சீறி எழுந்து கற்புக் கடன் ஆற்றியவள் கண்ணகி.

முன்னையவை அன்புக் கடனாய் மிளிர்வன. சீறிய கற்புதான் ‘‘கற்புக்கட’’னாய் ஒளிர்வது. இதுகொண்டுதான்,

‘‘கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்’

—என்று கவுந்தியடிகளால் குறிக்கப்பட்டாள் கண்ணகி. மணிமேகலைக் காப்பியமும்,

‘‘அற்புக் கடன் நில்லாது, நற்றவம் (கைம்மை) படராது
கற்புக் கடம் பூண்டு’’

—என்று கண்ணகியைக் குறிக்கின்றது.

அற்புக் கடனிலும் கற்புக்கடனே சிறந்தது என்பதை அச்சொல்லே சொல்லுகின்றது. ‘ஆம், மேம்பட்டதே’ என்று மணிமேகலைக் காப்பியம் மாதவி வாயிலாகப் பின்வருமாறு விரிவாகப் பகர்கின்றது.

‘மணிமேகலையைக் கணிகையர் குல ஒழுக்கத்தில் பரத்தையாக்கக் கூடாது; துறவறத்தில் செலுத்த வேண்டும்’ என்பது மாதவியின் கருத்து. அவள் தன் கருத்துக்குக் காரணம் ஒன்றைக் கூறுகின்றாள். மணிமேகலை தன் வயிற்றில் பிறந்திருந்தாலும் அவளைத் தன் மகளாகக் கூறிக்கொள்ள அவள் விரும்பவில்லை. ஏன் எனில், தான் ஒரு ஆடவனுடன் வாழ்ந்தாலும் கணிகையர் தொழிலாகிய ஆடல் பாடலை மேற்கொண்டவள். எனவே, தன் மகள் என்றால் அவளும் அத்தகையவளாகக் கொள்ளப்படுவாள் என்று கருதுகின்றாள். அதனால் மணிமேகலையைக் கண்ணகியின் மகள் என்று பேசுகின்றாள். அதனையும் ‘‘மாபெரும் பத்தினி மகள்’’ என்று குறிக்கின்றாள். கண்ணகி எவ்வாறு பத்தினிகளில் மிகச் சிறந்தவள்—‘‘மாபெரும் பத்தினி’’—



என்பதை மாதவி வாயிலாகச் சீத்தலைச் சாத்தனார் கூறும் விளக்கம் வருகிறது:

பத்தினிப் பெண்டிர் காதலர் இறப்பின்,
‘‘இன்னுயிர் ஈவர் (தலையாய கற்பு); ஈயார் ஆயின்,
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர் (இடையாய கற்பு);
நளியெரி புகாஅர் ஆயின், நோற்றுடம்பு படுவர் (கடையாய கற்பு);
அத்திறத் தாளும் அல்லள் எம் ஆயிழை (கண்ணகி);
கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்;
கண்ணீராடிய கதிரிள வனமுலை
திண்ணிதில் திருகித் தீயழல் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி பூட்டிய
மாபெரும் பத்தினி’’

—என்பது அது. எனவே, சீறிய கற்பு ஆறிய கற்பைவிட மேம்பட்டது; தனித் தன்மை கொண்டது. தனித்தன்மைக்கு இலக்கியமாகிய கண்ணகியது கற்பைச் சிலப்பதிகாரம் தனித்த தன்மையிலேயே போற்றுகின்றது. அதனையும் காண்பாம்:

### அருந்ததிக்கு உவமை கண்ணகி

கற்பின் திறத்திற்கு வடக்குத் திக்கில் தோன்றும் விண்மீனும் (வடமீன்) அருந்ததியின் திறத்தை உவமையாகக் கூறுதல் ஒரு மரபு. இம்மரபில்,

‘‘சாலி (அருந்ததி) ஒருமீன் தகையாள்’’—என்றும் ‘‘அருந்ததி அன்னாள்’’—என்றும் சிலப்பதிகாரம் கண்ணகியைக் குறித்துக்காட்டுகின்றது. இவ்வாறு பின்னர் குறிக்கும் சிலம்பு கண்ணகியை அறிமுகப்படுத்தும்போது இதற்கு மாறாக ஓர் உவமையாக அமைக்கின்றது. வடமீனும் அருந்ததியின் கற்புத் திறத்திற்குக் கண்ணகியின் கற்புத் திறத்தை உவமையாகக் காட்டுகின்றது. இது கூர்ந்து நோக்கத் தக்கது.

‘‘தீதிலா வடமீனின் திறம் இவள் (கண்ணகியின்) திறம்’’—என்று தனித்தன்மை கொடுத்துப் போற்றுகின்றது. அருந்ததிபால் நேராத மனத்திண்மையைக் கண்ணகிபால் காண்கின்றார் இளங்கோவடிகளார்.

‘‘கற்பென்னும் திண்மை’’ என்றார் திருவள்ளுவர், இதற்குக் கற்பு என்னும் கலங்கா நிலை’’ என்று உரை வகுத்தார் பரிமேலழகர். இக்கலங்கா நிலையோடு எழுந்தவள் கண்ணகி. எழுந்து தன் கணவன் கோவலனுக்குக் களங்கம் சொன்னவனைக் கலங்க வைத்தவள் கண்ணகி.

திருவள்ளுவர் கற்புடைய மகளிரைப் ‘‘பெண்ணிற் பெருந்தக்க யாஉள’’ என்று வியந்து கூறினார். சிலப்பதிகாரத்தில் மதுராபதித் தெய்வம் இக்குறளை நினைந்து பேசுவது போன்று கண்ணகியை,

‘‘பெருந்தகைப் பெண்’’ என்று வியந்து அழைக்கின்றது.

### வடுவில்லாக் கற்பு

கற்புக்கும் நெருப்புக்கும் நெருங்கிய தொடர்பு இலக்கியத்தில் உண்டு. கம்பராமாயணச் சீதை,

‘‘தீயைச் சுட்டதோர் கற்பெனும் தீயினாள்’’—எனப்பட்டாள்.

நளவெண்பாத் தமயந்தி,



'' சீறு (சீறி) விழித்தா'' ளாம்; ''சிலை வேடன் அவ்வளவில் நீராய் விழுந்தா'' ளும். கண்ணகி,

'' ஊர்தீ யூட்டிய ஒருமகள் '' ஆனாள்.

கண்ணகியுடன் தமயந்தியையும் சீதையையும் தொடர்பு படுத்தச் சிலம்பு சிறிதளவு இடந்தருகின்றது.

மனைவியுடன் காட்டுப் பயணங்கொண்ட வகையில் இராமனும் நளனும் கோவலனோடு பொருத்திக் காட்டப்பட்டுள்ளனர். இவ்விருவரையும் சொல்லிக் காட்டிக் கோவலனுக்கு ஆறுதல் கூறுகின்றார் கவுந்தியடிகள். இராமனும் நளனும் காட்டுப்பயணத்தில் மனைவியைப் பிரிந்தவர்கள்;

''அனையையும் அல்லைநீ ; ஆயிழை தன்னைப்
பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே''

—என்றார். அவர் கூற்றுப்படி மனைவியைப் பிரியாத நிலையில் கோவலன் மற்றைய இருவரினும் மேம்படுகின்றான்.

இத் தொடர்பில் சீதையும் தமயந்தியும் கண்ணகியோடு மதிப்பீட்டிற்கு உரியவராகின்றனர். சீதையும் தமயந்தியும் அவரவர் மரபிற்கேற்ப மேம்பட்ட கற்பினரே. ஆயினும், அவர் கற்பு வாழ்வில் ஏற்பட்ட இடையீடு கண்ணகி வாழ்வில் நேரவில்லை. சீதை இராவணனது நெஞ்சில் புகுந்தாள்; அல்லது புகுத்தப்பட்டாள். இது சீதையினது கற்புவாழ்வில் நேர்ந்த இடையீடு; தமயந்தி கற்பிலும் பாம்பின் வாயிலிருந்து அவளைக் காப்பாற்றிய வில்வேடன் ''பைந்தொடி, நீ என் மனைவியாக வா'' என்று அழைக்கப்பட்டாள். தமயந்தியது கற்பில் நேர்ந்த இடையீடு இது. '' கற்புடை மகளிர் பிறர் நெஞ்சு புகார்'' என்னும் தமிழ் மரபுப்படி இவ்விருவரும் இவ்விடையீடுகளால் பிறர் நெஞ்சு புகுந்தவர் இக்காரணத்தால் சிறு வடுவுடையவர் ஆகின்றனர். கண்ணகி இவ்வடுவும் பெறாதவள் இதுகொண்டே போலும்.

''வடுநீங்கு கற்பின் மனைவி''— எனப்பட்டாள்.

## சொல்லை மறுக்காத கற்பு

'' கற்பெனப்படுவது சொல் திறம்பாமை'' என்றனர். கணவன் சொல்லுக்கு எதிர் மாற்றம் சொல்லாமல் அப்படியே ஏற்பதே கற்பு என்றனர். (அக்கால மரபைக்கொண்டே இவ்விடத்தில் கற்பு மதிப்பிடப்படுகின்றது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்) கண்ணகியின் சொல் திறம்பாத திறத்தையும் காணலாம்.

புகார் நகரில் கண்ணகி கொடுத்த சிலம்பைக் கோவலன் பெற்றுக்கொண்டு 'இழந்த பொருளை ஈட்டுவேன்; என்னோடு நீயும் மதுரைக்கு எழுக' என்றான். பொருளீட்டும் பயணத்தில் மனைவி உடன் செல்லல் வாணிகர் குலமரபு அன்று; இதைக் கண்ணகி அறிந்தவள். அறிந்திருந்தும் அம்மரபையும் மீறிக் கணவன் சொல்லுக்கு மாற்றம் சொல்லாமல் உடன் புறப்பட்டாள். இதனைக் குறிக்கும் வகையில்,

''கற்புக் கடம் பூண்டு கணவன்பின் போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழியான்
கண்டீர்''

—என்று பாடப்பட்டது.

இவ்வாறு மறுக்காது புறப்பட்டதன் காரணத்தைப் பின்னர் கண்ணகியே கூறுகின்றாள். மாதரி வீட்டில் கண்ணகி சமைத்துப் படைத்த உணவைக் கோவலன் உண்டு தம்பலம் பெற்றான். அப்போது அவன் கண்ணகியை விளித்து, 'எழுக என்றதும் எழுந்தாயே' என்றான். அதுபோது கண்ணகி 'நீர் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்; ஆயினும், நும் சொல்லில்,

''யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலில்
ஏற்றெழுந்தனன் யான்'' என்று கூறிக்காட்டினாள்.

கொலைக்களத்தில் உயிர்பிரியும் நிலையில் கோவலன் கண்ணகியின் கண்ணீரைத் துடைத்து அவளைப் பார்த்து (இருப்பாயாக) ''இருந்தைக்க'' என்று கூறி மறைந்தான். இச்சொல்லையும் கண்ணகி பொருள் பொதிந்ததாகக் கொண்டு '' பொருளுரையோ'' என்று புகன்றாள். புகன்று அவனுடன் விடாமல் ''இருப்பாயாக'' என்று அவன் சொன்ன சொல்லுக்கேற்ப இருந்தாள். பாண்டியனைப் பழி வாங்கினாள். வாங்கிய பின்னரும் ''இருந்தைக்க'' என்னும் சொல் அவள் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அச்சொல்லுக்குத் திறம்பாமல் உயிருடன் நின்றாள். ''இருந்தைக்க'' என்று சொன்னவனை எதிர்நோக்கிநின்றாள். சிதைந்து குருதி கசியும் மார்புடன் 14 நாட்கள் நெடுங்குன்றின்மேல் வேங்கைக் கானலில் நின்றாள். இறுதி மூச்சுள்ள வரை சொல் திறம்பாத கற்பினள் ஆயினள் கண்ணகி.



# டோக்® E-25 உபயோகித்து உங்கள் வயல்களில் தோன்றும் களைப்பயிரை அகற்றி உயர்ந்த விளைச்சலைப் பெறுங்கள்.

ஆறு இந்திய விவசாயப் பல்கலைக்கழகங்களின் பண்ணைப் பரிசோதனைகள் சர்வதேச ஆராய்ச்சியின் நிருபணங்களை ஆதரித்து டோக் E-25 அநேக களை கொல்லி மருந்துகளைவிட உயர்ந்தது என உறுதி கூறியுள்ளன.

டோக் E-25 களைகள் மண்ணில் தோன்றியபின் களைமேல் பிரயோகிக்கவும் அவைகள் முளைப்பதற்கு முன் நிலத்தின் மேல் பிரயோகிக்கக் கூடியதும், அநேக வகை தான்யப் பயிர்களிலும், பழத்தோட்டங்கள், காய்கறிப்பயிர், மற்றும் புஷ்பச் செடிகளுடன் வளரும் அகன்ற இலை, புல் இன வகையைச் சார்ந்த பல களை பயிர்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்த வல்ல ஓர் சக்தி வாய்ந்த களை கொல்லி மருந்து.

டோக் E-25 களை கொல்லி மருந்தின் பிரயோகம் மிகவும் சிக்கனமானதாகவும், பயனுள்ளதாகவும் கருதப்படுகிறது. டோக் E-25 சிபாரிசு செய்யப்பட்ட அளவுகளில் பிரயோகித்து சிறந்த பலன் பெறுங்கள்.

**இண்டோக்பில் கெமிகல்ஸ் லிட்.,**
பம்பாய்-25.

® டோக் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனி, ஃபிலடெல்ஃபியா, பா., அவர்களின் ட்ரேட் மார்க்குகள். யூ. எஸ். பேட்டன்டு ஆபீஸிலும் இதர நாடுகளிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

முட்டைக்கோசு, காலிஃப்ளவர், கிழங்குகள், நிலக்கடலை, கோதுமை, நெல், உருளைக்கிழங்கு, பட்டாணி, வெங்காயம், பூண்டு, சீரகம், காரட், அவரை, ஸோயா பீன்ஸ், பீட்ரூட், ஸ்ட்ராபெர்ரி, திராட்சை, அன்னாசி, காட்டு மரங்களின் சிறு செடிகள், நாற்றங்கால்களில் தோன்றும் களை, புல், களைச் செடிகளை கட்டுப் படுத்துங்கள்.











**இண்டோக்பில் கெமிகல்ஸ்—பசுமை நிறைந்த வருங்காலத்திற்கு**

நாடு விடுதலை பெற்ற காலத்தில் சுமார் 33 இலட்சம் டன் உணவு உற்பத்தியைக் கொண்டு விளங்கிய தமிழகம் 1967வரை அதாவது சுமார் இருபது ஆண்டுக் காலத்தில் 55 இலட்சம் டன் உற்பத்தி இலக்கினைத் தான் எட்டிப் பிடிக்க முடிந்தது. அதாவது இருபதாண்டுக் காலத்தில் இருபத்திரண்டு இலட்சம் டன் உணவு உற்பத்திக் கூடுதலைத் தமிழகம் முயற்சியின் அறுவடையாகப் பெற்றது. பற்றாக்குறை மாநிலமாகத் திகழ்ந்து வந்தது.

ஆனால் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 1967-க்கும் 1972-க்கும் இடைப்பட்ட காலத்தில்—அரசின் சிந்தையில் மலர்ந்த, சிந்தையைக் கிளறும் சீரிய திட்டங்களாலும், விவசாயிகளின் ஒத்துழைப்பான ஒற்றுமையான கடின உழைப்பாலும் ஊக்கத்தினாலும் தமிழகத்தின் உணவு உற்பத்தி சென்ற ஆண்டே 73 இலட்சம் டன்னையும் மீறி விட்டது. தற்போது 75 இலட்சம் டன் உற்பத்தி இலக்கினைநோக்கி நமது மாநிலம் வீறுநடை போடுகிறது. பற்றாக்குறை என்ற பாரச்சுமையைத் தாங்க முடியாமல் திண்டாடிய நமது மாநிலம் இன்று தன்னிறைவு பெற்று விளங்குவதோடு அடுத்த மாநிலங்களுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு முன்னேறி இருக்கிறது என்பது நாம் பெருமைப்படவேண்டிய ஒன்று. ஐந்தாண்டுக் காலத்தில் 20 இலட்சம் டன் உற்பத்திக் கூடுதல் என்பது வியப்பிற்குரிய சாதனை மட்டுமல்ல ; விரும்பி வரவேற்றுப் பாராட்ட வேண்டிய சாதனையும் ஆகும். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' 'முயற்சி திருவினையாக்கும்' என்ற ஆன்றோர்களின் கூற்றுகளுக்கு எடுத்துக்காட்டாக இதைக் கூறலாம். இவ்வளவு பெருமுயற்சி செய்தும் தமிழகத்தில் உழவிற்குப் பயன்படும் நிலங்கள் அத்தனையும் கலப்பையின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டனவா என்றால் இல்லையென்றே பதில் சொல்ல வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். நாடும் இருக்கிறது.

தமிழகத்தில் உள்ள மொத்த நிலப்பகுதி 325 இலட்சம் ஏக்கர் அவற்றில் 184 இலட்சம் ஏக்கர் நிலந்தான் உழவு செய்யப் பயன்படக்கூடியவை. அதிலும் சுமார் 63 இலட்சம் நிலந்தான் நிரந்தரமான நீர்ப்பாசன வசதி பெற்றிருக்கிறது. அதாவது பாசனம் செய்யத் தகுந்த நிலத்திலும் சுமார் மூன்றில் இரண்டு பகுதிக்கும் கூடுதலான அளவில் 'வானம் பார்த்த' பூமியாகவே இருக்கிறது.




நமது மாநிலத்தில் எல்லா வகையிலும் கிடைக்கும் நீரின் அளவைப் பார்க்கும் போது பாசனவசதி பெறாத நிலங்கள் நிரந்தரமாகப் பாசன வசதி பெறுமலே போய்விடுமோ என்றும் அஞ்ச வேண்டியிருக்கிறது.

சிறிய ஆறுகள், பெரிய ஆறுகள், கால்வாய்கள், கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் இப்படிப்பட்ட வகையிலே நமக்குக் கிடைக்கும் நீரளவு ( Surface Water ) மொத்தம் 336·41 டி. எம். சி. என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதில் ஏற்கெனவே 293·42 டி. எம். சி. அளவிற்கு நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வகையில் நோக்கின் நிலப்பகுதியின் மேல் பாகத்தில் கிடைக்கும் நீரில், இன்னும் 42·93 டி.எம். சி அளவு நீர்தான் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதை விரைவில் பயன்படுத்துவதற்கு வகையில்லை, வழியில்லை என்று அந்தத் துறை வல்லுநர்களால் கருதப்படுகிறது.

**எதிர்காலத் தேவை**

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கள் தொகை 410 இலட்சத்தை மீறுகிறது, மக்கள் தொகைப் பெருக்கம் இதே அளவில் வேகத்தில் சென்றால் இதன் எண்ணிக்கை கி. பி. 2000-ம் ஆண்டில் 7 கோடியாக உயர்ந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. தற்போது வளர்ச்சி பெற்ற மேலைநாடுகளில் தனி மனிதன் உட்கொள்ளும் சராசரி உணவு சக்தி 3,050 கலோரியாகும். இதை அடிப்படையாகக் கொண்டு கி. பி. 2000-ம் ஆண்டில் தமிழகத்தின் உணவுத் தேவை 310 இலட்சம் டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது தமிழகத்தில் மொத்த உணவு உற்பத்தி சுமார் 75 இலட்சம் டன்களாகும். அப்படியாயின் கி. பி. 2000-ஆம் ஆண்டு அளவில் நமது மக்களும் மேலை நாட்டினர் இன்று உட்கொள்ளும் உணவுச் சத்தைச் சாப்பிட வேண்டுமானால் இன்றுள்ள உணவு உற்பத்தியை நான்கு மடங்காகக் கூட்டியாக வேண்டும். இதை அதிக நிலங்களை நிரந்தரப் பாசனத்தின் கீழ்க் கொண்டு வருவதின் மூலம், தற்கால அறிவியல்வழியில் உழவு செய்யும் முறையை விரிவுபடுத்தி வளர்ச்சி செய்வதின் மூலமும் தான் சாதிக்க முடியும்.

தமிழகத்தில் கிடைக்கும் நீரின் அளவு இன்றைய நீர்ப்பாசனத் தேவைக்கே போதுமானதாக இல்லை. இதிலிருந்து தமிழகமும் உணவு உற்பத்தியில் முன்னேற வேண்டுமானால் குறைந்த அளவுநீரைக் கொண்டு அதிக நிலப்பரப்பை நீர்ப்பாசனம் செய்யும் முறை போற்றி வரவேற்கப்படவேண்டிய ஒன்று. இந்த வகையில் தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் ( Springler Irrigation ) நமது மாநிலத்திற்கு ''வாராது வந்த மாமழை போல்'' ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது.

**தெளிப்பான் முறை நீர்ப்பாசனம்**

சிக்கனமாக, சீராக நீரைப் பயன்படுத்த வேண்டிய கட்டாய இக்கட்டான சூழ்நிலையில் தமிழ் நாடு இருக்கிறது. இந்த வகை

பில் தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் நமக்கு ஆபத்தில் கை கொடுத்து உதவும் உற்ற நண்பனாகத் திகழ்கிறது. வாய்க்கால் வழியாக ஓடித் தானாகப் பாயும் நீர்ப்பாசனத்திற்கு (Flow Irrigation) தேவைப்படும் அளவு நீரில் அதே அளவு நிலப் பரப்பைப் பாசனம் செய்யச் சரி பகுதி நீர் இருந்தால் தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் மூலம் உழவு செய்யலாம்: செய்ய முடியும்.

தெளிப்பான் முறை நீர்ப்பாசனத்தால் இன்னொரு இலாபமும் உண்டு. உயர்ந்த ரக வித்துக்களை விவசாயம் செய்ய இந்த முறை மற்றெந்த முறையையும் விடச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. பயிர்களின் குருத்தின் மேல் நீர் விழுந்தால் பயிர்கள் விரைவில் செழித்து வளர்ந்து, அதிக அளவு விளைச்சலைக் கொடுக்கும். என்பது விவசாயிகளின் அனுபவம் முதிர்ந்த நடை முறை உண்மைக் கருத்தாகும் கணிப்பாகும் அதனால்தான் ஆற்று நீர்ப்பாசனம் பெற்றுள்ள விவசாயிகள் கூட ''வானம் பெய்யாதா?'' என்று ஏங்குவார்கள். இந்தக் குறைக்குத் தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் முற்றுப் புள்ளி இடுகிறது. தெளிப்பான் முறை நீர்ப்பாசனத்தால் நீரைப் பயிர்களின் மேல் மழை பெய்வது போல் பெய்ய வைப்பதால் பயிர்கள் குருத்தில் நீர் பட்டு, விரைவான வளர்ச்சி பெற்று, அதிகமான பலனும் தருகின்றன.

மேலும் இப்போது நடைமுறையில் இருக்கும் நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய நீரின் அளவின் பாதி அளவு நீர்தான் தெளிப்பான் முறைநீர்ப்பாசனத்தின் மூலம் பயிரிடத் தேவைப்படுவதால் உழவர்களுக்கு பணச் செலவு குறைகிறது. ஆனால் அவர்கள் ஆதாயம் பெருகுகிறது.

இம்முறையால் நாட்டின் பொதுவான பொருளாதாரமும் பெருமளவு பயன் அடைகிறது. குறைந்த அளவு நீரைக்கொண்டு அதிக அளவு நிலப்பரப்பு பாசனம் செய்ய வழிவகை ஏற்படுவதால் நாட்டின் உணவு உற்பத்தி இரட்டிப்பாகிறது; தண்ணீர் பற்றாக்குறையின் கடுமை தணிகிறது. நீரிறைக்கப் பயன்படுத்தப்படும் உந்து சக்தியான மின்சக்தி மீதமாகிறது. இதனால் அதிக அளவு நீரிறைக்கும் மின் குழாய்களுக்கு மின்வசதி செய்து கொடுக்க முடியும். இப்படிப் பலவாறாகப் புதிய தெளிப்பான் முறை நீர்ப்பாசனம் குறிப்பாக உழவர்களுக்கும், பொதுவாக நாட்டிற்கும் பயன்படுகிறது. பலன் தருகிறது.

### புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனம்

தமிழகத்தை வற்றாத வளங்கொழிக்கச் செய்யும் அன்னை காவிரியின் தென்கரையில்புகளூர் உள்ளது. அங்கிருந்து ஒரு கல் தொலைவில் தெற்கே உள்ள வரலாற்றுப் பெருமை மிக்க புகளி மலையைக் கொண்டு இவ்வூர் அப்பெயர் பெற்றது. செங்கரும்பிற்குப் பெயர் பெற்ற கொங்கு நாட்டின் ஒருபகுதி இவ்வூர்.

புகளூர் காவிரிக் கரையின் அருகிலிருந்தும் இவ்வூரின் வட பகுதிதான் காவிரி அன்னையால் முப்போக விளைச்சல் பெற்று வளம் பெற்றுத் திகழ்கிறது. இந்தப் பகுதிக்கு மைய ஊராக விளங்கும் வேலாயுதம்பாளையத்தின் தெற்குப் பகுதி முழுவதும் வானம் பார்த்த பூமியாகவே இருக்கிறது இப்பகுதி நில[illegible] [illegible] விளைச்சலும். பொய்த்துவிடும். அதனால் இந்தப் பகுதி உழவர்கள் பெரும் அவதிக்கு அடிக்கடி உள்ளாவது இயற்கை.

இந்த இழிநிலையைத் துடைக்க ஏற்பட்டதுதான் புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனக்கூட்டுறவுச் சங்கம் இவ்வமைப்பு அந்தப் பகுதிக்கே நடுநாயகமாக விளங்கும் வேலாயுதம்பாளையத்தில் இருந்து செயல்படுகிறது. இச்சங்கம் 28—11—1968 அன்று பதிவு பெற்று, 6—3—1969-ஆம் தேதியிலிருந்து செயல்பட்டுவருகிறது. 14 தனித்தனித் திட்டப் பகுதிகளை (Units) உள்ளடக்கியது இந்தச் சங்கம்.

இச்சங்கம் ஒவ்வொரு திட்டப்பகுதிக்கும் ஒரு இயக்குநர் (Director) என்ற முறையில் 14 இயக்குநர்கள் கொண்ட குழுவொன்றால் நிருவாகிக்கப்படுகிறது. இயக்குநர் குழுத் தலைவராக இயல்பாகவே நல்லிதயமும் நன்னோக்கும் கொண்ட ரத்தினவேல் இருந்து வருகிறார். இந்த அதிகாரப் பற்றற்ற குழுவிற்குப் பொருளீட்டுத் துறையில் உதவி செய்ய துணைப் பதிவாளர் திரு சீனிவாசன் அவர்கள் தலைமையில் ஒரு அலுவலகமும், திட்டத் துறையில் செயல்புரிய பொதுப் பணித்துறையினர் குழுவொன்றும் இங்கு இருக்கின்றன.

#### வரலாறு

இச்சங்கத்தில் 14 தனித்தனி திட்டப் பகுதிகள் இருக்கின்றன. இந்தத் திட்டப் பகுதிகள் ஒவ்வொன்றும் 1960-ஆம்ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் தனித்தனி நபர்களால் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வந்தன ஆனால் இந்தத் [illegible] -குதிகளில்



நிலங்களுக்குத் தேவையான நீர் காவிரியிலும் அதை அடுத்துள்ள காவிரிக் கரை கால்வாயிலும் இருந்து எடுக்கப்பட வேண்டி இருந்ததால் அரசாங்கத்தின்முன் அனுமதி பெற வேண்டியிருந்தது. அரசின் அனுமதி பெறுவதற்காக 1967-ம் ஆண்டு வரை பெரு முயற்சி செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஓரத்தை முத்துசாமி, கரப்பாளையம் சீரங்கசாமி ஆகியோராவர்.

### தலைவரின் பணி

1967 ஆம் ஆண்டு புதிய திருப்பம் ஏற்பட்டது. இன்றைய இச் சங்கத்தின் தலைவராகத் திகழும் திரு வை. இரத்தினவேலு இத்திட்ட விஷயத்தில் ஈடுபாடு கொண்ட பின் தான் தனித்தனியாகப் பிரிந்து செயல்பட்டு வந்த 14 திட்ட அமைப்புகளும் ஒருங்கிணைந்து ஒன்றாக ஒரே அமைப்பின் கீழ் செயல்படும் திட்டம் உருவானது. அவரே இத் திட்டத்தின் மூலையாகவும், மூல சக்தியாகவும் விளங்குகிறார் என்றால் அது மிகைபடக் கூறியதாகாது. அதன் பலனாகத்தான் இன்று 14 திட்டங்களும் ஒருங்கிணைந்து புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் உருவானது.

### இந்தியாவில் முன்னோடித் திட்டம்

இத்திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே கூட்டுறவு நீர்ப் பாசனச் சங்கங்களின் மாதிரியாகவும், முன்னோடியாகவும் திகழ்கிறது. பெருமளவில் உள்ள புன்செய் நிலங்களைப் பாசன வசதி பெறச் செய்து, பயிர் விளைவித்து, உணவுப் பொருட்களைப் பெருக்கி, பசுமைப் புரட்சியினை மலரச் செய்வதற்காகக்கூட்டுறவு முறையில் நடத்தப்படும் ஒரு வெற்றி மிகு துணிகரத் திட்டமாகவும் இது கருதப்படுகிறது.

இப்பகுதியில் புகளூர் கால்வாயின் வலது கரையில் பெரும் பகுதியான புன்செய் நிலங்கள் மேட்டுப் பகுதியில் இருப்பதால் அவை பாசன வசதி பெறாமலே இருந்து வந்தன. ஒரு சில பொருளாதார பலம் பெற்றிருந்த வேளாண்மையாளர்கள் அரசினரிடமிருந்து அனுமதி பெற்று நீரேற்று இயந்திரங்கள் மூலம் தண்ணீரை ஆற்றிலிருந்தும் கால்வாயிலிருந்தும் எடுத்துச் சென்று பாசனத்திற்குப் பயன்படுத்த முனைந்து வெற்றி கண்டனர்.

இதனால் தூண்டப்பட்ட திருக்காட்டுத் துறை, சேமங்கி போன்ற சிற்றூர்களைச்சார்ந்த பல வேளாண்மையாளர்கள் ஒன்று சேர்ந்து அரசினரிடமிருந்து அனுமதி பெற்று நீரேற்று இயந்திரங்கள் மூலம் பாசன வசதி பெற்றுக் கூட்டு முறையில் பலனடைந்து வருகின்றனர்.

இதைக் கண்ணுற்ற பல பண வலிமையற்ற சிறு வேளாண்மையாளர்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து பாசன வசதி பெறுவதற்கும், பண உதவி கிடைப்பதற்கும் ஒரு கூட்டு நிறுவனம் தேவையென்று உணர்ந்ததன் காரணமாகப் புகளூர் நதி நீர் ஏற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் சிறு சிறு ஊர்கள் ஒருங்கிணைந்த 14 ஊர்களில் உள்ள நிலங்களுக்கு காவிரி, நொய்யல், புகளூர் கால்வாய் போன்றவற்றிலிருந்து தண்ணீர் எடுத்துப் பாசனம் செய்யத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்திருந்தது. இந்த 14 ஊர்களும் தற்போது சங்கத்தின் 14 திட்டப் பகுதிகளாக (Units) இருந்து வருகின்றன.

பதினான்கு திட்டங்களில் புங்கோடை காளிபாளையம், ஓரம்புப் பாளையம், முத்தனூர், கவண்டர்புதூர் 1, கவண்டன்புதூர் 2, நடையனூர், கரப்பாளையம், புஞ்சைப் புகளூர், வேட்டமங்கலம், வெள்ளியம்பாளையம், மரவாபாளையம் ஆகிய திட்டங்களுக்குக் காவிரியிலிருந்து நேரிடையாகத் தண்ணீர் எடுக்கப்படுகின்றது.

கோவிந்தம்பாளையம், தளவாய்பாளையம், ஓரத்தை ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் புகளூர் கால்வாயிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

மரவாபாளையம், தென்னிலை கிழக்கு ஆகிய திட்டங்கள் நொய்யல் ஆற்றின் நீரைக் கொண்டு செயல்படுத்தப்படஇருக்கின்றன.

இப்பதினான்கு திட்டங்களிலும் அடங்கியுள்ள சங்கத்தின் 1,383 நில உடைமையாளர்களுக்குச் சொந்தமான 3,680 ஏக்கர் நிலங்களுக்குச் சுமார் 1·25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழாய்கள் மூலம் நடைநீர் பாசன வசதியளிக்க அரசு அனுமதியளித்தது.

தற்பொழுது மேற்கூறிய 3,680 ஏக்கர் நிலங்களுடன் மேலும் 3,680 ஏக்கர் நிலங்களைச்சேர்த்து அனைத்துப் பகுதிக்கும் தெளிப்பான் முறை மூலம் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டு அளவில் பாசன வசதியளிக்க அரசின் ஆலோசனைக்கிணங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சுழல் நீர் தெளிப்பான் முறை எளிமையும் ஏற்றமும் மிக்கதோடு, சிக்கனமும், சேமிப்பும் வாய்ந்ததாகவும், தண்ணீரைச் சேமித்து பயிர் வளத்தைப் பெருக்குவதாகவும் உள்ளது.



மேலும் நடைமுறைப் பாசனத்தின் மூலம் பாசன வசதி பெறும் நிலப் பரப்பைப் போன்று இருமடங்கு நிலம் அதே அளவு தண்ணீரால் தெளிப்பான் முறை மூலம் பாசன வசதி பெற இயலும் என வும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பாசன முறை மூலம் கரும்பு, கடலை, கம்பு சோளம், புளிச்சிக் கீரை, அகத்தி போன்ற புன்செய்ப் பயிர்களை வளமுடன் விளைவிக்க முடியும்.

**நிதிகள்**

திட்டங்களை நிறைவேற்று வதற்குரிய நிதிகள் அனைத்தும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கியிலிருந்து கரூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கி மூலம் சங்கத்திற்கு அளிக் கப்பட்டு வருகிறது.

**பணிகள்**

பதினொன்கு பகுதிகளும் திட் டம் நிறைவேற்றப்படுவதில் மூன்று கட்ட வேலைகளாகப் பிரிக்கப்பட்டு முதல் கட்ட வேலையில் 5 பகுதிகளும், 2-ஆவது கட்ட வேலையில் 5 பகுதிகளும், மூன்றாவது கட்ட வேலையில் 4 பகுதிகளுமாக எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப் பட உள்ளன.

முதல் கட்டமாகப் புஞ்சைப் புகளூர், ஒரத்தை, நடைய னூர், தளவாபாளையம், கோவிந் தம்பாளையம் ஆகிய திட்டங் கள் எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த ஐந்து பகுதி களும் 53,86,500 இலட்சம் மதிப்பீட்டில் 1,098 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி யளிக்கவிருக்கின்றன.

**சங்கப் பணி முன்னேற்றம்**

முதல் ஐந்து திட்டப் பகுதி களான புஞ்சைப் புகளூர், ஒரத்தை, நடையனூர், தளவா பாளையம், கோவிந்தம்பாளையம், ஆகிய திட்டங்களில் குழாய்கள் பதிக்க வாணிகள் வெட்டப்பட்டு உள்ளன. ஒரத்தை, தளவா பாளையம் நடையனூர் ஆகிய பகுதிகளில் மூழ் கிணறு (Sump well) வெட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன. நீரேற்று மின் இயந்திரங்கள் அமைப்ப தற்கு நிலம் வாங்கப்பட்டு கட்டுமான பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

**கடன் பெறுதல்**

அனுமதிக்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ. 53,96,500-ல் இதுவரை ரூ. 3,15,675 கரூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கி மூலம் பெறப்பட்டுள் ளது. இத்தொகை திட்ட

செலவு முழுவதையும் சங்கமே ஏற்றுக்கொண்டு பணிபுரிய பயன் படுத்தப்படுகிறது. அதுவன்றி ஒவ்வொரு விவசாயிக்கும் ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 600 வீதம் நிலத்தை மேடுபள்ளம் திருத்தி பதப்படுத்தவும் தரப்படுகிறது. இதனல் விவசாயிகள் பெரும் பாரமாகக் கருதி வந்த பணத் தொல்லை அவர்களை விட்டகன் றது.

குழாய்கள் பதிப்பதற்கான புதை குழிகள் வெட்டும் வேலை யும் நீரேற்று இயந்திர அறை அமைத்தல், இறைவைக் கிணறு தோண்டுதல் ஆகிய பணிகள் ஒப்பந்தக்காரர்களின் வாயிலாக சீரியமுறையில் வளர்ந்து வரு கின்றன. தேவையான குழாய் களில் பெரும்பகுதி தருவிக்கப் பட்டு விட்டன. இயந்திரங்களும் சாதனங்களும் தருவிக்கப்படும் தறுவாயில் உள்ளன. இவை நீங்கலாக உள்ள 9 பகுதிகளில் நில மட்ட அளவு எடுத்தல், மதிப்பீடு தயாரித்தல் போன்ற களப்பணிகள் செவ்வனே செயல் பட்டு வருகின்றன.

> மாலைக்கு முதற் பொருள் மணமுள்ள மலர். அதுபோலப் பேச்சுக்கு முதற் பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.
>
> —அண்ணா.

**அரசு உதவி**

அரசு சங்கத்தின் நிருவாகத் தைக் கவனிப்பதற்கு ஒரு துணைப் பதிவாளர், இரு கூட்டுறவு உப-பதிவாளர்கள் ஒரு முதுநிலை ஆய்வாளர், மற்றும் களப் பணியை நிர்வகிக்க ஒரு (பொதுப்பணித்துறை) உதவிப் பொறியாளர், மற்றும் இரு பொதுப்பணித்துறை மேற் பார்வையாளர்கள் போன்றோர் களின் பணியை இனமாக அளித்து வருகிறது.

மேலும் தற்போது அரசு ஒரு பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகத்தை நிறுவி அதற் குரிய அலுவலர்களையும் ஒரு நிருவாகப் பொறியாளரையும் நியமித்து சங்கத்தின் திட்டங் களை விரைவில் செவ்வனே முடிக்க ஆவன செய்துள்ளது. இவர்களின் ஒரு நிர்வாகப்

பொறியாளர். ... உதவிப் பொறியாளர்கள், 8 இளநிலைப் பொறியாளர்கள், 2 மேற்பார்வையாளர்கள், ஒரு வரைவாளர், 2 உதவியாளர் கள் ஆகியோர் தற்பொழுது கோட்ட அலுவலகத்தில் பணி புரிந்து வருகின்றனர்.

மற்றும் சங்க உபயோகத் திற்குப் பொறியியக்கக் கருவி (Jeep) வாங்குவதற்கு அரசு ரூ. 35,500 கடனுதவி அனு மதித்துள்ளது.

புளிச்சக் கீரை பணப்பயிர் களிலேயே பணங் கொழிக்கும் பயிர்களில் ஒன்ருக இருப்ப தால் இப்பகுதியில் கூட்டுறவுக் காகித ஆலை ஒன்றை நிறுவும் உத்தேசம் தமிழ்நாடு அரசிடம் இருந்து வருகிறது. திட்ட வேலை கள் அனைத்தும் 1972 டிசம்பர் மாதத்திற்குள் முடிவு பெறு வதற்கான அனைத்து முயற்சி களும் தற்பொழுது எடுக்கப் பட்டு வருகின்றன.

இத்திட்டம் சீரிய முறையில் செயல்பட்டு வந்தாலும், நீர்ப் பாசன முறை விவசாயிகளுக் குப் புதியதாகவும், புதிரான தாகவும் இருப்பதால் ஒரு சில விவசாயிகள் இடையே அச்ச உணர்வு தோன்றி இருப்பதாகத் தெரிகிறது. அச்சந் தவிர்த்து அரசின் உதவியால் இச்சங்கம் செய்யும் நவீன விவசாய நீர்ப் பாசனத் திட்டங்களுக்கு திட் டத்தால் பயனடையும் விவ சாயிகள் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தங்கள் செயல்முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய செயல் அவர்களின் வழக்கை யில் வளத்தையும் வளர்ச்சியை யும் சேர்ப்பதோடு தமிழக அர சின் விரைவான, விவேகமான உணவு உற்பத்தித் திட்டங் களுக்குப் பெரும் உதவி புரிவ தாகவும் இருக்கும் என்பதை அந்தப் பகுதி உழவர்கள், உழைக்கும் பெருமக்கள் உணர வேண்டும்.

'நாடு நமக்காக என்ன செய் தது என்பதைவிட நாட்டிற் காக நாம் என்ன செய்தோம்' என்ற கென்னடியின் பொன் மொழிக்கிணங்க அப்பகுதியில் வசிக்கும் ஒவ்வொரு குடிமக னும் செயல்பட வேண்டும்; செயல்படுவார்கள் என்றே நம்புகிறோம்.

எல்லாத் தரப்பினரின் ஒருங் கிணைந்த ஒத்துழைப்பு இருந் தால் விரைவில் அத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு நாடும், நாட்டு மக்களும் விரும்பும் நல்ல பலன்கள் கைவரப்பெறும் என்பதே நமது திண்ணிய கருத் தும், விருப்பமுமாகும்.

— இராமு



# அண்ணா மொழி கேளீர்!

பாட்டாளிகளுடைய கடமை சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்தமாதிரி முயற்சி எடுத்துக்கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

* * *

''மூழு வயிறு காணுதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணுர், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர்—இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய்க் கொடிமரமாய்ப் பாதையாய்ப் பகட்டுக்களாய், அமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவுபெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

வியர்வை பணமாகிறது—வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிகள் வரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை, எத்தனை ஏழ்மை இடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றனர் என்பதனை மாணவர் உணர்ந்திடின் அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும். ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே இத்தனையும் தந்திடும் ஏழை மக்களுக்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்''.

* * *

''எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, தீது இது, மரபு இது, மருள் இது என்பதனை ஆராய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மரபினைப் பெற்றிடச்செய்வதற்கும்,ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திடவேண்டும்.''

• • •

''எங்கோ ஏற்பட்ட கீறல்களிலிருந்து சிக்கல் எழுவது போன்ற தன்மை வாய்ந்ததல்ல, நமது பிரச்சினை. அவ்விதம் இருக்குமாயின், அந்தப் பிரச்சினையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது.

ஆனுல், நமது பிரச்சினைகள் இதயத்தில் ஏற்படும் மண் அரிப்புப் போன்ற செயலால் ஏற்படும்.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போக வேண்டிய அவசியமில்லை—இருக்கிற வயலில் உரம் போட்டு—உழவு செய்யும் நிலைமையில் இருக்கிறோம்.

ஆம்; தத்துவங்களைத் தேடிச் செல்லவேண்டிய அவசியமில்லை—அதை விடக் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். இருக்கின்ற தத்துவங்களை வகைப்படுத்தித்—தொகைப்படுத்தித் - தணிக்கைபடுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக் கூடுகளை அகற்றிக் கலந்துவிட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

கண்ணிய மிக்க எல்லாவற்றிற்கும் காவலர்கள் நாம்.

சுருங்கச் சொன்னுல், நாம் நம்மையே கண்டு கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். நமது சிந்தனைக் கட்டடத்தை மீண்டும் சீர் திருத்திக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

• • •

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய மாணவர்கள் இந்தச் சமுதாயத்தை வளப்படுத்தும் பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் அவர்கள் காணும் வெற்றியில்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.''

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனைக் குடிசையில் வாழும் சாமானிய மனிதனை, தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் மாணவர் சமுதாயம் ஈடுபட வேண்டுகிறேன்.

# தமிழகத்தில்

# எலக்ட்ரானிக்-ரசாயனத் தொழில்கள் பெருகும்

“தொழில் ஆயிரம் மாளிகை புறச் செய்வோம்” என்று சொன்னார் பாரதியார்; விடுதலை பெற்ற இந்தியாவில் உள்ள மாநிலங்களிடையே நமது ‘தமிழகம்’ தொழில் துறையில் இப்போது மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை பெருந்தொழில்களும் சிறு தொழில்களும் தொய்வில்லாமல் தொடர்ந்து பல்வேறு இடையூறுகளுக்கிடையேயும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. எனினும் சிலவகையான தொழில்களில் தமிழகம் உரிய வளர்ச்சி பெறவில்லை—குறிப்பாக இரசாயனம் எலக்ட்ரானிக் போன்ற துறைகளில் நாம் மிக மிகப் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, புதிய துறைகளான இரசாயனம், எலக்ட்ரானிக் தொழில்களில் நாம் சற்று முனைப்பாக ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி ஈடுபடும்போது, தொய்வும் துவள்தலும் ஏற்படாத வண்ணம் திட்டங்கள் தீட்டிச் செயற்படுவது இன்றியமையாததாகிறது.

பொதுவாக எலக்ட்ரானிக் துறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மாறும் தன்மை உடையது. அறிவியல் துறையில் ஏற்படும் சிறு மாற்றமும் எலக்ட்ரானிக் துறையில் பெரிய சலனத்தை—சலசலப்பை உண்டாக்குந்தன்மையது. மக்களின் மாறுபட்ட விருப்பத்திற்குத் தக்கவாறு மாறுபட்ட பொருட்களையும் எளிதில் தயாரிக்கக் கூடிய அளவில் எலக்ட்ரானிக் தொழிற்சாலைகளின் கட்டுமானம் இருக்க வேண்டும். இத்துறையில் தயாரிக்கப்படும் எந்த ஒரு பொருளும் இரண்டொரு ஆண்டுகளுக்கு மேல் நிலையான மார்க்கெட் பெற்றிருப்பதில்லை. நேற்று ரேடியோ, இன்று டிரான்ஸிஸ்டர் — நாளை டெலிவிஷன் — அதற்கு அடுத்து என்னவோ என்ற நிலையில் விரைவான மாற்றங்களைப் பெற்றிருப்பது இத்துறை. இத்துணை நுட்பத்தையும் உள்ளடக்கி, எலக்ட்ரானிக் துறை வளர வேண்டியுள்ளது. அதனால் இதற்குக் கன்சல்ட்டன்சி முறை கிடையாது. நிலையான ஒரே வகையான பொருட்களைத் தயாரிக்க எந்த எலக்ட்ரானிக் தொழிற்சாலை முனைந்தாலும் அது விரைவில் தோல்வியையே தழுவிக் கொள்ள வேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

இந்தத் துறையில் தமிழகம் வளர்ச்சி பெறத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியிருக்கிறது. சிட்கோ இதற்கென்று வல்லுநர் குழு ஒன்றை நிறுவியுள்ளது. அக்குழு மாதமொரு முறை கூடி விவாதிக்கும்.

தற்போது தமிழகத்தில் இரசாயனத் தொழிற் கூடங்கள் [illegible]காக ஆறு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (1) சென்னை—அதன் சுற்றுப்புறம், (2) கோவை—மேட்டுப்பாளையம் புறநகர்ப்பகுதி, (3) மேட்டூர்—அதன் சுற்றுப்புறம்: (4) தூத்துக்குடி — சாகுபுரம் பகுதிகள். (5) நெய்வேலி—பண்ணுருட்டிப் பகுதிகள், (6) காரைக்குடி — மானாமதுரைப் பகுதிகள். இந்த ஆறு இடங்களிலும் ஆங்காங்கே உள்ள தொழிற் சாலைகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, அந்தப் பகுதிகளில் உள்ள தொழிலகங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களைத் தயார் செய்யக்கூடிய இரசாயனத்தொழிற்சாலைகள் தொடங்குவது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிந்து செயல்பட ‘சிட்கோ’ (Small Industries Development Corporation) திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வருகிறது. இந்த ஆறுதிட்டங்களுக்கும் கன்சல்ட்டன்சி (Consultancy) ஏற்படுத்தப்பட்டு விட்டன. ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட திட்டங்கள் ஒரே கன்சல்ட்டன்சி நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டால் அதற்காகப் பொருள் அளவில் சில சலுகைகள் உண்டென்பதால் இந்த ஆறு திட்டங்களும் ஒரே ஒரு கன்சல்ட்டன்சியிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டங்கள் சிறந்த முறையில் செயல்பட 14 வல்லுநர்கள் அடங்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அகில இந்திய அளவில் இரசாயனத் துறையில் உள்ள பல உள்துறைகளிலும் சிறப்புற்று விளங்குபவர்களும் அதிகாரப் பற்றற்றவர்களும் இடம் பெற்றுள்ளனர். இக்குழு இரண்டு திங்களுக்கு ஒரு முறை கூடி, அதுவரை எடுக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டவைகளின் மீதும், மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சிட்கோவுக்கு அறிவுரைகள் கூறும்.

மேற்குறித்த புதிய ஏற்பாடுகளால், தமிழகத்தில் இரசாயனம், எலக்ட்ரானிக் தொழில் வளம் பெரிதும் வளர்ந்து பெருகுவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

—சாமி


**‘தமிழரசு’ சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு.**

16-9-72 இதழிலிருந்து ‘தமிழரசு’ தமிழ் இதழுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 10 அரையாண்டுச் சந்தா ரூ. 5 ஆக மாறுவதால் பழைய சந்தாதாரர்களுக்கு 1-9-72 வரை அனுப்பிய இதழுக்கு 35 காசு வீதம் கணக்கிட்டு மீதமுள்ள சந்தாவுக்கு 40 காசு வீதம் 16-9-72 இதழிலிருந்து இதழ் அனுப்பப்படும்.

**ஆங்கில இதழ் சந்தாதாரர்களுக்கு.**

மாதம் இருமுறையாக வெளிவந்த ஆங்கில இதழ் 1-9-72 இதழிலிருந்து மாத இதழாக மாற்றப்படுகிறது. ஆங்கில இதழுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 5 அரையாண்டுச் சந்தா கிடையாது. ஆதலால் பழைய சந்தாதாரர்களுக்கு 1-9-72 வரை அனுப்பிய இதழ்களுக்கு 35 காசு வீதம் கணக்கிட்டு மீதமுள்ள சந்தாத் தொகைக்கேற்ப இதழ் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சந்தாவை உடன் புதுப்பித்தால் இதழ் அனுப்பப்படும். சந்தாவைப் புதுப்பிக்கும்போது, சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதவும்.

**நிருவாகி,**
**தமிழரசு அலுவலகம்,**
**சென்னை-2.**

# செய்தியே சித்திரமே


இந்த ஆண்டு தமிழ்நாட்டில் இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்தில் சூரிய காந்தி பயிரிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
சூரிய காந்தி எண்ணெயில் தயாரித்த மிட்டாய்கள் முறுக்கு உருளைக் கிழங்கு வறுவல் கிடைக்கும்


தமிழ்நாடு அரசின் நன்கொடையாக மொரிஷியஸ் தீவிலுள்ள மக்கள் படிக்கப் பத்தாயிரம் தொடக்கப் பள்ளி தமிழ் நூல்களைப் பாடநூல் வெளியீட்டு நிறுவனம் அனுப்பியுள்ளது.
மொரிஷியஸ் தீவு

முயற்சி திருவினையாக்கும்

பன்னிரண்டு
ஆண்டுகளில் வருவாய்
இரட்டிப்பாக
தமிழக மாநிலத் திட்டக்
குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய
அமைப்பை
உருவாக்கும்
அரசின்
பணிகள்
செயல்திட்டங்கள்.

இப்படி
எங்கு
நோக்கினும்
நமது
நல்வாழ்வுக்காக
புதியபுதிய
திட்டங்கள்

இன்னும்
ஐந்தாண்டுகளில்
தமிழ்நாட்டில்
பேருந்துவழித்
தடங்கள்
அனைத்தும்
நாட்டுடைமை.

இவைகளால் புதுவாழ்வு
மலர நாம் ஆற்றவேண்டிய
கைம்மாறுதான்

# அளவான குடும்பம்!

பெருகிடும் மக்கள்தொகையே இன்றையப்பெரும் பிரச்சினை?

## குடும்ப நலத்திட்டம்

- நமக்கும் நல்லது
- நாட்டுக்கும் நல்லது !

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.

அதிக உரமேற்று அமோக விளைச்சல் தரும் நெல் வகைகள் விரும்பத்தக்க பயிரின் அமைப்பு, ஒரே சமயத்தில் சீராகப் பூத்து விளையும் தன்மை, உறுதியான தூர்கள் மற்றும் ஒளி நிலைக்கு ஏற்ற தோற்றம் ஆகிய மேம்பட்ட குணங்களை உடையதாக இருக்கின்றன. இந்த நெல் வகைகளின் வயது 105 முதல் 145 நாட்கள் வரையாகும். அமோக விளைச்சல் தரும் நெல் வகைகளின் மகசூல் கொடுக்கும் திறன், அவைகளுக்கு ஏற்ற பட்டம், ஆகியவற்றை நிர்ணயிக்கும் பொருட்டு, ஐ.ஆர். 8, ஐ. ஆர். 20, ஐ.ஆர். 22 ஆகிய நெல் வகைகள், கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நெல் ஆராய்ச்சிப் பிரிவில் 15 நாட்களுக்கு ஒரு முறை விதைத்துப்,பிறகு நடவு செய்து, ஒரு ஆண்டு முழுவதும் பரிசீலனை செய்யப்பட்டது.

### ஐ.ஆர். 8

“ அதிசய நெல் ஐ.ஆர். 8 ” அமோக விளைச்சல் கொடுக்கும் நெல் வகைகளில் தலை சிறந்தது. ஜூன் மாதம் இரண்டாவது வாரம் முதல் ஆகஸ்டு மாதம் முதல் வாரம் வரை விதைத்து நடவு செய்தால் ஒரே சீராக ஹெக்டேருக்கு 6,500 முதல் 7,500 கிலோ வரை மகசூல் கொடுக்கவல்லது. ஆனால் செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாற்று விட்டு, ஐ.ஆர். 8 பயிர் செய்தாதால் மகசூல் குறைந்து, ஹெக்டேருக்கு 1,000 கிலோ வரை கிடைப்பதைத் தவிர, பயிரின் வயது 135 நாட்களிலிருந்து 148 நாட்களாக அதிகரிக்கின்றது. ஆகவே, ஐ.ஆர். 8 நெல் வகையானது பின் பட்டத்திற்கு ஏற்றது அல்ல என்று நிரூபிக்கப்படுவதுடன் இவ் வகைக்குக் குளிர் பருவத்தைத் தாங்கும் தன்மை இல்லை என்று தெளிவாகிறது.

முதல் பட்டத்தின் பிற்பகுதியில் அல்லது காலதாமதமாக நாற்று விட்டுப் பயிர் செய்த ஐ.ஆர். 8 நெற் பயிர் குருத்துப் பூச்சி, இலைச் சுருட்டும் புழு போன்ற பூச்சி வகைகளாலும், இலைக் கருகல் நோய் (பிளாட்), இலைப் புள்ளி நோய் போன்ற நோய்களாலும் தாக்கப்படுகிறது. குலை நோயை அல்லது கொள்ளை நோயை ஓரளவு இவ் வகை தாங்கும் தன்மை படைத்துள்ளது.

நவரைப் பட்டத்தில் அதாவது கோடைப் பட்டத்தில் (ஜனவரி அல்லது பிப்ரவரி விதைப்பு) இவ் வகை ஹெக்டேருக்கு 7.5 முதல் 8.2 டன் வரை அமோக விளைச்சல் தரவல்லது. அப்பட்டத்தில்தான் கிணற்றுப் பாசனத்தில் — சிறப்பாகக் கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் இவ் வகை பெருவாரியான நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது.

### ஐ.ஆர். 20

முதல் பருவத்தில் (ஜூன்—ஜூலை) விதைத்துப் பயிர் செய்யப்படும், ஐ.ஆர். 20 என்ற தரமான நெல் வகை ஹெக்டேருக்கு 5.5 முதல் 6.00 டன் வரை நிலையான மகசூல் கொடுக்கிறது. அதன் வயது 127 முதல் 147 நாட்களாகும். ஏப்ரல் மாதத்தில் விதைத்துப் பயிர் செய்ததில் உச்ச அளவு மகசூலாக 7.7 டன் கிடைத்திருக்கிறது. இவ் வகை நெல், குருத்துப் பூச்சியையும், கொள்ளை நோய், இலைக் கருகல் நோய் ஆகியவற்றையும் தாங்கும் சக்தி வாய்ந்ததாக இருப்பதால் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நாற்று விட்டுச் சாகுபடி செய்ய ஐ.ஆர். 20 நெல் ஐ.ஆர். 8-ஐ விட மிகவும் சிறந்தது. மேலும், நீர்ப்பாசன வசதியுள்ள ஆயக்கட்டுப் பகுதிகளில் எல்லாப் பருவத்திற்கும் பல்வேறு சூழ்நிலையில் கையாளுவதற்கு ஏற்ற ரகமாகும்.

### ஐ.ஆர். 22

இதுவும் ஐ.ஆர். 20 வகையைப் போல ஒரு தரமான நெல் வகையாகும். ஏப்ரல் மாதத்தில் நாற்று விட்டு சாகுபடி செய்தால் ஹெக்டேருக்கு 7.0 டன் வரை மகசூல் கொடுக்க வல்லது. இதன் வயது 118 நாட்கள் முதல் 139 நாட்கள் வரையாக உள்ளது. முதல் பட்டத்தின் துவக்கத்தில் (அதாவது ஜூன்—ஜூலை விதைப்புகள்) ஹெக்டேருக்கு 2.9 டன் மகசூல்தான் கொடுக்கிறது. நவரைப் பட்டத்தில் அதாவது, கோடைப் பட்டத்தில் இதனுடைய விளைச்சல் நிலையாக இருக்கும் காரணத்தால் பாசன வசதியைப் பொறுத்தே, பரிந்துரைக்கப்படுகிறது.

அமோக விளைச்சல் வேண்டுவோர் அதிசய நெல் ஐ.ஆர். 8 நெல் வகையைத் தேர்ந்தெடுக்கலாம்!

தரமான அரிசியை விரும்புகின்றவர்கள் ஐ.ஆர். 20 அல்லது ஐ.ஆர். 22 நெல் வகைகளைப் பயிரிடலாம்.

* * *

அமோனியம் குளோரைடு அமோனியம் சல்பேட்டைப் போன்று ஒரு சிறந்த தழைச் சத்தைக் கொடுக்கும் இரசாயன உரம் என்று கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து தெரியவந்தது. அமோனியம் குளோரைடில் 25 சத தழைச் சத்து உள்ளது. ஆனால், அமோனியம் சல்பேட்டில் 20 சத தழைச் சத்து மட்டுமே உள்ளது. அமோனியம் குளோரைடு அமோனியம் சல்

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்



# புதிய கண்டுபிடிப்புகள்!

பேட்டை விட விலையும் மலிவானது. அமோனியம் குளோரைடு போடப்பட்ட நிலத்தில் அறுவடைக்குமுன்புஎடுத்துப் பரிசோதித்த மண்ணில் குளோரைடு அயனிகள் அடர்த்தி குறைந்து காணப்பட்டது இவ்வுரத்தின் இன்னொரு முக்கிய சிறப்பாகும்.

எனவே, இந்த உரத்தை உழவர்களுக்குப் பரிந்துரைக்கும் முன்பு, சோதனை நிரூபணங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் உழவர்களின் நிலத்தில் சோதனை, செயல் விளக்கங்களை நடத்தத் திட்டமிட்டுக் கீழ்க் கண்டவர்களின் வயல்களில் செயல் விளக்கங்கள் அமைக்கப் பட்டன.

(1) திரு எஸ். பாண்டுரங்கம், சேசங்கனூர், கண்டமங்கலம் வட்டாரம், தென்ஆர்க்காடு மாவட்டம்.

(2) திரு பரந்தாமன், பி.கே புரம், கே.வி. குப்பம் வட்டாரம், வடஆர்க்காடு மாவட்டம்.

(3) திரு பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி (வடக்கு) வட்டாரம், கோவை மாவட்டம்.

(4) திரு குமாரசாமி, நெய்க்காரப்பட்டி, பழனி வட்டாரம், மதுரை மாவட்டம்.

(5) திரு ஏகாம்பரம், சில்லவட்டம், மதுராந்தகம் வட்டாரம், செங்கற்பட்டு மாவட்டம்.

(6) திரு ஏ.பாலகிருஷ்ணன், குட்டியன்குண்டு, திருப்பரங்குன்றம் வட்டாரம், மதுரை மாவட்டம்.

இந்த உழவர்களின் நிலத்தில், கேழ்வரகு (ராகி) பயிரில் நடத்திய சோதனையில் அமோனியம் குளோரைடு உரமானது அமோனியம் சல்பேட்டை விட 2.73 சதம் முதல் 38.29 சதம் வரை அதிக விளைச்சல் கொடுத்துள்ளது. அதாவது அமோனியம் குளோரைடு சராசரியாக 20.74 சதம் அதிக மகசூல் கொடுத்துள்ளது.







இந்தச்சோதனை நிரூபணத்தின் முடிவிலிருந்து அமோனியம் குளோரைடு கேழ்வரகு பயிருக்குத் தலைசிறந்த தழைச் சத்தை கொடுக்கக்கூடிய இரசாயன உரமாகப் பரிந்துரைக்கப்படுகிறது. இதைத் தவிரக் குறைந்த செலவில், அமோனியம் சல்பேட்டை விட, அதிக மகசூலைக் கொடுக்க வல்லது எனவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:—100 கிலோ அமோனியம் சல்பேட் விலை ரூபாய் 63.70. 100 கிலோ அமோனியம் குளோரைடு விலை ரூபாய் 52.00.

* * *

சப்போட்டா சற்றுக் கடினத் தன்மையுள்ள ஒரு பழ வகையாகும். கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பல்லாண்டுகளாக 13 சப்போட்டா ரகங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவற்றில் 'கிரிக்கெட் பந்து' (Cricket Ball) என்ற ரகம் அதனுடைய பெரிய அளவிற்குப்(பருமன்)பெயர்பெற்றது. ஆனால் பழத்தின் தரம் மற்றவைகளுக்கு ஒப்பானதாக இல்லை. 'ஓவல்' என்ற ரகம், சுவையுள்ள பழத்தையும், அதிக மகசூலையும் கொடுக்க வல்லது. ஆனால், பழத்தின் பருமன் மிகச் சிறியது என்ற ஒரு குறை மட்டும் உள்ளது.

அதிக மகசூலையும், பழத்தின் பருமனையும் ஒருங்கிணைத்து ஒரு ரகம் கண்டுபிடிக்கக் 'கிரிக்கெட் பந்து', 'ஓவல்' ஆகிய இரு ரகங்களையும் ஒட்டுச் சேர்த்து, ஒரு புதுரகத்தை உருவாக்க 1953ஆம் ஆண்டிலிருந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒட்டுகளில் தலைசிறந்த ஓர் ஒட்டு ரகத்திற்குக் ''கோ. 1 சப்போட்டா'' என்று பெயரிடப்பட்டது.

கோ:—1 வீரிய சப்போட்டா ரகமானது 'கிரிக்கெட் பந்து' ரகத்தின் பழப் பருமனையும், 'ஓவல்' ரகத்தின் தரத்தையும் கொண்டுள்ளது. இந்த ஒட்டு ரகம் நான்காவது ஆண்டிலேயே பலன் தர ஆரம்பித்து விடும். அதனுடைய பழமானது நடுத்தரப் பருமனும், முட்டை வடிவமும், கவர்ச்சியான செம் பழுப்பு நிறச் சதையும் கொண்டது. சராசரியாக ஒரு மரத்திற்கு 40 கிலோ பழம் 1971-ஆம் ஆண்டில் கொடுத்திருப்பினும், சில மரங்கள் 84 கிலோ பழங்களைக் கொடுத்துள்ளன. மரத்தின் வயது அதிகரிக்கும்போது அதிகமாக மகசூல் எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த வீரிய ரகத்தின் ஒட்டுகள் 1973-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கோவை கல்லூரிப் பழத் தோட்டத்திலிருந்து பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

(தகவல்: தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூர்-3.)




தமிழக அரசின் சீரிய திட்டங்களில் ஒன்று இளைஞர் அணித் திட்டம். படித்துப் பட்டம் பெற்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் சமுதாய மறு மலர்ச்சிக்கு உதவுவதும் இதன் அடிப்படைத் திட்டமாகும்.

தற்போது தமிழகமெங்கும் 1,643 இளைஞர் அணி ஆண் தொண்டர்களும், 194 மகளிரும் உள்ளனர். இவர்கள் மக்கள் நலத் துறை உதவியுடன் கிராமங்களில் அம்மை ஊசிகள் போடுகின்றனர். குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடுகின்றனர்.

இளைஞர் அணியில் சேர்ந்துள்ள மகளிர், அரசு மருத்துவ மனைகளில் மருத்துவர்களுக்கும், நோயாளிகளுக்கும் உதவி வருகின்றனர். இவையன்றி, மாவட்டங்கள் தோறும் முதியோர் கல்வி வகுப்புகள் நடத்தல், இளைஞர் மன்றம் அமைத்தல், கிராமப் புறங்களில் கழி பிறைகள் அமைத்தல், வேளாண்மைக்குப் புதிய கருவிகளைப் பயன்படுத்துவது குறித்து உழவர் குடிமக்களுக்கு எடுத்துரைத்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இளைஞர் அணிக்குக் கூடுதலாக 1,450 ஆண் தொண்டர்களையும், 150 பெண் தொண்டர்களையும் சேர்க்கும் திட்டம், அரசின் சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டத்தில் அடங்கும்.

பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலவாக்கம், பெருங்குடி, வேங்கை வாசல், ஒட்டியம்பாக்கம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் இளைஞர் அணியினரின் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு ஆகஸ்டு, 1971 முதல் ஜூன் 1972 முடிய, பாலவாக்கத்தில் 37 பேரும், பெருங்குடியில் 25 பேரும், வேங்கை வாசலில் 20 பேரும், ஒட்டியம் பாக்கத்தில் 12 பேரும் வயது வந்த பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கும் திட்டத்தின் கீழ்ச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

அது போல இவ்வாண்டு முதியோர் வகுப்பில் 4 ஊராட்சிகளிலுமாக 45 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கான 136 வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

நான்கு ஊராட்சிகளிலுமாக மொத்தம் 33 கழிவு நீர்ப் பிறைகள் (கக்கூசுகள்) அமைக்கப்பட்டுள்ளன. இதில், கிராம மக்களுக்குப் போதுமான பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

கிணற்றுச் சுற்றுப்புறங்களைச் சுத்தப்படுத்தும் திட்டத்தின் கீழ் 18 கிணறுகளின் சுற்றுப்புறங்கள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

பொது இடங்களைச் சுத்தம் செய்யும் திட்டத்தின் கீழ் 20 இடங்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

நான்கு ஊராட்சிகளிலுமாக 36 வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 5 கோழிப் பண்ணைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறு சேமிப்புத் துறையில் 22 பேர் சேர்க்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆங்காங்கு இளைஞர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, 62 இளைஞர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டுக்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டுவருவதோடு, சமூக ஒப்புரவு நெறியும் கற்பிக்கப்பட்டு வருகிறது.

கிராம மக்களுக்கு முக்கியமான செய்திகளை அறிவிப்பதற்கும், முக்கியமான பிரச்சினைகளில் அவர்கள் பரிகாரம் காண்பதற்குமாக இளைஞர் அணியின் சார்பில் 21 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

அண்மையில் கடந்த 3–6–1972-ல் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் விழாவையொட்டி, மேற்குறிக்கப்பட்ட 4 ஊராட்சி மன்றங்களிலும் இளைஞர் அணித் தொண்டர்களின் அரு முயற்சியால் விளையாட்டுப் போட்டிகளும், குழந்தை வளர்ப்புப் போட்டிகளும் நடத்தப் பெற்றன. மேலும், பலருக்கு அம்மை தடுப்பு ஊசியும், குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன.

பாலவாக்கம் கிராமத்தில் எழுச்சூர் முதல்நிலை நல்வாழ்வு நிலையப் பணியாளர்கள் 360 பேர்களுக்கு மறு முறையாக அம்மைத் தடுப்பு ஊசிகளும் 9 பேருக்கு முதல் தடவையாக அம்மைத் தடுப்பு ஊசிகளும், 31 பேர்களுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன.

பெருங்குடி, ஒட்டியம்பாக்கம் கிராமங்களில் வேளச்சேரி முதல் நிலை நல்வாழ்வு நிலையப் பணியாளர்களால் அம்மைத் தடுப்பு ஊசியும், முத்தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன. பெருங்குடி கிராமத்தில், 345 பேருக்கு மறு முறையாக அம்மைத் தடுப்பு ஊசியும், 130 பேர்களுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போட்டனர்.

ஒட்டியம்பாக்கம் கிராமத்தில் 233 பேர்களுக்கு மறு முறையாகவும், 6 பேர்களுக்கு முதன் முறையாகவும் அம்மைத் தடுப்பு ஊசிகளும், 60 பேர்களுக்கு முத்தடுப்பு ஊசிகளும் போட்டனர்.

வேங்கைவாசல் கிராமத்தில், போரூர் முதல்நிலை நல்வாழ்வு நிலையப் பணியாளர்களால் 367 பேர்களுக்கு மறு முறை அம்மைத் தடுப்பு ஊசியும், 14 பேர்களுக்கு முதல் முறை அம்மைத் தடுப்பு ஊசியும் போடப்பட்டன.

இவ்வாறு தடுப்பு ஊசிபோட்டுக் கொள்வதற்காகக் குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதிலும், இன்ன பிற வகைகளிலும் இளைஞர் அணித் தொண்டர்களின் ஈடற்ற பணியைக் மக்கள் பாராட்டுகிறார்கள்.

—பழ.

நாட்டின் வளமும்
உங்கள் நலனும்
எங்கள் விருப்பம்

# கரூர் வைஸ்யா பாங்கு லிட்.,

தமிழகத்தின் தலைசிறந்த வங்கி

உங்களுக்குச் சேவை செய்யக் கீழ்க்கண்ட கிளைகள் விரைவில் திறக்கப்படவிருக்கின்றன.

**1. பேங்களூர் 2. சித்தூர் 3. கடலூர் 4. தாம்பரம்**

G. S. அண்ணுசாமி,
சேர்மன்.



FDSIC/753TMB




# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்களுக்கு 1968-69-ம் ஆண்டில் ஏற்றுமதியில் சிறப்புற்று விளங்கியதற்காக இந்திய அரசின் பாராட்டு இதழ் கிடைத்துள்ளது.

தரம், நீண்டகால சேவை, பாறை போன்ற உறுதி ஆகிய சிறப்பு அம்சங்கள் பொருந்திய சங்கர் சிமெண்ட் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயைப் பெருக்குவதிலும் முன்னணியில் நிற்கிறது.

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

தன் பில்டிங், சென்னை 2

25 ஆண்டுகள் நிலைத்து, இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது!

இலவசத் தொழில் நுட்ப ஆலோசனைக்கு:
சிமெண்ட் சர்விஸ் பீரோ, குரோவ்,
சென்னை-18




**த**ற்கொலை!

தற்கொலை என்பது கோழைத் தனத்திலும் கடைந்தெடுத்த கோழைத்தனமாகும். வாழ்க்கையில் எல்லா நிலைகளையும் கடந்து வாழ்பவன்தான் உண்மையில் மனிதன். எனவே, வாழ்க்கையைக் கற்கண்டு என்று தவருக எடை போட்டுவிட்ட சிலருக்கு இந்தச் சக்தி இருப்பதில்லை. அதனுல்தான் அவர்கள் கோழைகளாகித் தம்மைத் தாமே அழித்துக் கொள்கிருர்கள்.

இதோ ஒரு சோகக் கதை!

ஆனுல், இது உண்மைக் கதை!

மாலை மணி 6.

வாழ்க்கையில் வெறுப்படைந்த—அதாவது மேற்சொன்ன வகையைச் சேர்ந்த ஒருவர்—தான் குடியிருக்கும் வீட்டில்—தமது அறைக்குள்ளே ....

மாலை மணி 6.05

"ஹலோ ......... — ...."

தொலைபேசியில் பேசியவருக்கு டயல் நெ. 100-லிருந்து பதில் வருகிறது.

குட்மார்னிங் சார், எமர்ஜென்சி போலீஸ். ரெடி டு—சர்வ் யூ.

"ஹலோ! — ........ நான் திருமாவளவன் தெருவிலிருந்து பேசுகிறேன் ..... எங்கள் வீட்டில் ஓர் ஆள் ... ஆமாம், ஓர் ஆள் தூக்குப் போட்டுக் கொள்ள .. — — ..... —"

'டயல் நெ. 100. போலீஸ் வேன்' காற்ருய்ப் பறக்கிறது.

மணி 6.10.

'தடதட'வென்று காவலர்கள் அந்த அறையின் கதவை உடைத்து உள்ளே நுழைகிருர்கள்.

அங்கே—

தொங்கிய கயிறு.

அந்தக் கயிற்றில் தலையை நுழைக்கும் நேரம்!

உடனே ஆளைப்பிடித்துக் கீழே இறக்கிவிடுகிருர்கள் காவலர்கள்!

பிரியப்போகும் ஓர் உயிரைக் பிணமாகப் போகும் ஒரு மனிதரை, அந்த இக்கட்டான சமயத்தில் விரைந்து வந்து காப்பாற்றி விடுகிருர்கள் காவலர்கள்.

அந்தச் சமயத்தில் காவலரின் இத்தனை விரைவும், துடிப்பும், தக்க நடவடிக்கையும் மட்டுமே நாம் அறிகிருேம். ஆனுல், புகார் வந்ததற்குப் பிறகு பின்னணியில் என்ன நடக்கிறது என்பதை அறிவோமா?

"அவசரப் போலீஸ் உதவிக்கு டயல் நெ. 100-க்குப் போன் செய்யுங்கள்"

இந்த அறிவிப்பை நாம் பல இடங்களில் பார்த்திருக்கிருேம்.

இந்த டயல் நெ. 100 வண்டியை நகரத் தெருக்களிலும் அடிக்கடி கண்டிருக்கிருேம்.

**நகரின் எங்கோ ஒரு மூலையில்** சண்டை நடக்கிறது; சச்சரவுகள் ஏற்படுகின்றன; கலகங்களும், போராட்டங்களும் நிகழ்கின்றன; பொதுமக்கள் அவதிக்குள்ளாகின்றனர்; நிலைமை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மோசமாகிறது.

உடனே ஒருவர், தொலைபேசியில் நெ. 100-க்குப் புகார் கொடுக்கிருர்.

சில நிமிடங்களில் போலீஸ் வேன், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து வருகிறது!

இது எப்படி நடக்கிறது?

அது ஒரு கதை.

அவசரப் போலீஸ் உதவிக்கு டயல் நெ. 100-க்குப் புகார் செய்யும் போது, எழும்பூர் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திலுள்ள 'கண்ட்ரோல் அறையின்' (control room) காவலர்கள், உடனே புகாரைப் ஒரு புத்தகத்தில் பதிவு செய்து கொள்கிருர்கள்.

கண்ட்ரோல் அறையில் 'டயல் நெ. 100' பொருத்தப்பட்ட தொலைபேசிகள் மொத்தம் ஏழு இருக்கின்றன; அதாவது இந்த ஏழு தொலைபேசிகளும் நெ.100-க்காகப் பணியாற்றுகின்றன.

ஒரே சமயத்தில் பல இடத்திலிருந்து வரும் புகார்களைக் கவனிக்கவே இத்தனைத் தொலைபேசிகளும் இங்கே பொருத்தப் பட்டிருக்கின்றன.

புகார் வந்ததும் போலீசார் என்ன செய்கிருர்கள்?

புகார் வந்ததும் ஒரு காவலர் அந்தப் புகாருக்கு ஒரு தொடர் எண் கொடுத்துப் புத்தகத்தில் எல்லா விவரங்களையும் பதிவு செய்து கொள்கிருர். பிறகு 'மாஸ்டர்' கண்ட்ரோல் அறை (Master control room) யிலுள்ளவர்களுக்குத் தகவல் தருகிருர். அவர்கள் நகரத்தின் பல பகுதிகளில் சுற்றிக் கொண்டிருக்கும் 'டயல் நெ. 100' வண்டியோடு தொடர்பு கொண்டு இந்த இடத்தில், இன்ன சம்பவம் நடக்கிறது என்ற தகவல் தருவார்கள். உடனே அந்த வண்டி இரண்டு மூன்று நிமிடங்களில் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று தக்க நடவடிக்கை எடுக்கும். இந்த வண்டியில் ஒரு தலைமைக் காவலர், மூன்று காவலர்கள், ஒரு ஓட்டுநர் இருப்பார்கள். அனைவரும் கையில் கேடயம் வைத்திருப்பார்கள்.

புகார் வந்த சமயம், இங்குள்ள தொடர்பகத்தின் மூலம் சம்பவம் நடந்த வட்டத்தின்

காவல் நிலையத்துக்கும் தகவல் தருவார்கள். அவர்களும் அந்த இடத்திற்கு வருவார்கள்.

சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற போலீஸ் வேனில் உள்ளவர் அங்குள்ள நிலைமைகளை வண்டியில் இருந்து கொண்டே கண்ட்ரோல் அறைக்குத் தெரிவிக்கிறார். கண்ட்ரோல் அறையில் பொருத்தப்பட்டிருக்கும் ரேடியோ அத்தகவல்களை ஒலிபரப்புகிறது. நகரத் தெருக்களில் எந்த மூலை முடுக்கில் சென்றாலும், ஓடும் வண்டியிலிருந்து கொண்டே கண்ட்ரோல் அறைக்குத் தகவல்களைத் தரமுடியும்; அதேபோலக் கண்ட்ரோல் அறையிலிருந்தும் வண்டியோடு தொடர்பு கொள்ளமுடியும்.

சம்பவம் நடந்த இடத்திற்குப் போனதும் போலீசார் என்ன செய்கிறார்கள்?



நெ. 100 லாரி, சம்பவம் நடந்த இடத்துக்குப் புறப்படத் தயாராகிறது.

1. 'போக்கு வரத்து விபத்து' சம்பந்தமாக இருந்தால், போக்கு வரத்துப் போலீசார் உதவியோடு, விபத்து நடந்த இடத்தை 'மார்க்' செய்துவிட்டுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் வசதி செய்வார்கள். பிறகு போக்குவரத்துப் போலீசாரிடம் பொறுப்பை ஒப்படைப்பார்கள். விபத்தில் யாருக்கேனும் காயம் ஏற்பட்டிருந்தால் அவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதும் டயல் நெ. 100 போலீசாரின் கடமையாகும்.

2. களவு, கொள்ளை போன்ற சம்பவங்கள் நடந்தஇடத்திற்குச் சென்றதும், சம்பவம் பற்றிய விசாரணைகள் நடத்துகிறார்கள்; விசாரணையில் கிடைத்த தகவல்களைப்பெரிய போலீஸ் அதிகாரிக்குத் தெரிவிக்கிறார்கள். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், அந்த இடத்தைத் துப்புத் துலக்கவும் துப்பறியும் நாய்கள் அவசியமானால் அனுப்புவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். அது சம்பந்தமாகப் புலன்விசாரணைகளைக் கவனிக்க குற்ற இலாகா (crime Department) பொறுப்பேற்றுக் கொள்கிறது.

மாஸ்டர் கண்ட்ரோல் அறை நெ. 100 லாரிகளைக் கண்காணிக்கிறது.



3. சட்டம், ஒழுங்கு, (Law and Order) இவைகளை மீறுவதாயிருந்தால், போலீசார் முதலில் அங்கு அமைதியை உண்டாக்கப் பாடுபடுகிறார்கள். அப்படியும் அமைதிக்குப் பங்கம் ஏற்படுமானால் — தங்களால் சமாளிக்க முடியாது போனால்— கண்ட்ரோல் அறையுடன் தொடர்புகொண்டு, பெரிய வேன் மூலம் மேலும் போலீஸ் உதவியைக் கோருகிறார்கள்.

இப்படி மூன்று வழிகளில் 'டயல் நெ. 100' செயலாற்றுகிறது.

ஒரு நாளைக்குச் சுமார் 25 அல்லது 30 புகார்கள் வருகின்றன. தேர்தல் போன்ற காலங்களில் அதிகப் புகார்கள் வரும். இரவும் பகலும் 24 மணி நேரமும் இந்தப் பிரிவு மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறது. நாள்தோறும் மூன்று ஷிப்டுகள் பணியாற்றுகின்றன. ஒரு ஷிப்டில் 22 பேர் பணி புரிகின்றனர். பன்னிரண்டு வண்டிகள் (Petrol Vehicles) நகரத்தில் சுற்றிக் கொண்டே இருக்கின்றன.

***கிணற்றில் விழுந்துவிட்டாரா?***



டயல் நெ. 100 வானொலிப் பணிமனை.

குழந்தை காணாமல் போய் விட்டதா ?

பாம்பு வீட்டில் புகுந்து விட்டதா? களவாடல் செய்து விட்டார்களா?

எல்லாவற்றுக்கும் இந்த 100 நமக்கு உதவி செய்ய ஓடி வருகிறது !

தனிப்பட்ட நபர்களுக்குள் சண்டை சச்சரவு ஏற்பட்டால் 'டயல் நெ. 100' என்ன செய்யும்?

சம்பவம் நடந்த இடத்திலேயே விசாரணை செய்து, அந்த வட்டக் காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்டவர்களை ஒப்படைக்கிறது.

இவை மட்டுமா ?

கண்ட்ரோல் அறையிலிருந்து காவல் நிலையங்களுக்குத் தகவல்களைத் தரவும், அங்கிருந்து தகவல்களைச் சேகரிக்கவும் போலீஸ் எக்ஸ்சேஞ் (Police Exchange) தொலைபேசிகள் இருக்கின்றன. இதனால் புகார்களை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்ய மிக்க உதவியாக இருக்கிறது.

சிறையிலிருந்து கைதி தப்பி விடுகிறான்.

போலீஸ் காவலிலிருந்து கைதி ஓடிவிடுகிறான்.

அப்போது அவனை எங்கிருந்தாலும் கண்டுபிடிக்க நகரத்தின் எல்லாக் காவல் நிலையங்களுக்கும் 'ஒரே நேரத்தில்' தகவல் தர வேண்டும். அது முடியுமா ?

அதற்கும் கண்ட்ரோல் அறையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. (Telephone Broadcast) என்னும் கருவி இந்த வேலையை எளிதில் செய்து முடித்து விடுகிறது.

வீடு தீப்பற்றி எரிகிறது. டயல் நெ. 101-க்குத் தெரிவிக்கிறார் ஒருவர்.

தீயணைப்புத் தலைமை நிலையத்தின் ஆணைப்படி தீயணைக்கும் படையினர் விரைகின்றனர். உடனே தீயணைக்கும் பிரிவு அதிகாரி, டயல் நெ. 100-க்கும் இந்தத் தகவல்களைத் தருகிறார். தகவல் கிடைத்ததும் 'டயல் நெ. 100' சம்பவம் நடந்த இடத்திற்கு விரைகிறது. அங்கு போலீசாரின் கடமை என்ன தெரியுமா ?

1. தீப்பிடித்த வீட்டிலிருந்த பொருள்கள் கொள்ளை போகாமல் பாதுகாத்தல்.

2. கலவரம் ஏற்படாமல் அமைதி உண்டாக்குதல்.

3. மருத்துவ மனைக்குத் தகவல் தருதல் ; தீயினால் காயம் அடைந்தவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு போதல், ஆம்புலன்ஸ் வண்டியை வரவழைத்தல். அவசரச் சமயங்களில் இந்த வண்டிகள் சிவப்பு விளக்குடனும், அபாயச் சங்கு ஒலியுடனும் செல்லும்.

மேலும் கொலை, கொள்ளை, விபத்துகள், கல்லெறி போன்ற வன்முறைச் சம்பவங்களின் போது இங்கிருந்து புகைப்படக்காரர்களும் அனுப்பப்படுகின்றனர்.

கண்ட்ரோல் அறையிலும், ஆணையாளர் அறையிலும் சென்னை நகரப் படம் வரையப்பெற்ற ஒரு பலகை இருக்கிறது. அதில் சிறு சிறு மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஓர் இடத்தில் தீயோ, அல்லது கார் திருட்டோ நடந்தால் அது எந்த வட்டத்தில் நடந்திருக்கிறது என்பதை இப்பலகை விளக்கு எரிவதன் மூலம் காட்டுகிறது.

மேலும், ஒரு நாளைக்கு எத்தனை புகார்கள் வருகின்றன? அந்தப் புகார்களைக் கவனித்து நடவடிக்கைகள் எடுக்க எவ்வளவு நேரங்கள் ஆயின? என்பதையும் இது காட்டுகிறது. அதாவது ஒரு நாளையப் புகார்களும், அவற்றுக்காக ஏற்பட்ட சராசரி நேரமும் இந்தப் பலகையில் நாள் தவறாமல் குறிக்கப்படுகிறது.

புகார்கள் எந்த நேரத்தில் வந்தன ? எந்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டன என்பதெல்லாம் அவ்வப்போது கண்காணிக்கப்படுகின்றன. காவல் துறை உதவி, துணை ஆணையாளர்கள் வெளியில் செல்லும் போது, தம்மை யாரென்று காட்டிக் கொள்ளாமல் நெ. 100-க்குப் போன் செய்வார்கள். கண்ட்ரோல் அறை சரியாக இயங்குகின்றனவா என்பதை அறியவே இப்படிப் பரிசோதனை செய்வது வழக்கமாம். வானொலிப் பணிமனை (Radio workshop) இதோடு இணைந்திருக்கிறது. கண்ட்ரோல் அறை சரிவர இயங்கவும், வயர்லஸ் பொருத்தப்பட்ட சுமார் 80 ஊர்திகளைக் கண்காணிக்கவும், பழுது பார்க்கவும் இப்பிரிவு துணை செய்கிறது. மற்றும் சாலைப் போக்குவரத்தில் ஊர்திகளின் வேகத்தைக் கணக்கிடும் 'ராடார்' என்னும் கருவியைப் பயன்படுத்துவதும் இப்பிரிவின் வேலையாகும்.

'' ஹலோ ! ஹலோ ! நான் தான் பேசறேன் ! இங்குக் கலாட்டா உடனே வாருங்கள் ! ''

டயல் நெ. 100 வண்டி விரைந்து போகிறது. அங்கே கலாட்டாவுமில்லை. கத்தரிக்காயுமில்லை !

விளையாட்டுக்காக், வேலையற்ற ஒருவர் தந்த பொய்ப் புகாரினால் காவலருக்கு ஏற்படும் கால விரயமும், தொந்தரவும் தான் எத்தனை ! எத்தனை ! ! இதனை உணர்பவர்கள் இப்படிப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வார்களா ?

—பி.வி.ஜி

# பருத்தி விவசாயிகள் கவனிக்கவும்.



5 A/152 (760)

உங்கள் பயிரை சார் உறுஞ்சி நாசம் விளைவிக்கும் பூச்சிகளிலிருந்து

பாதுகாக்க **மெடாஸிஸ்டாக்ஸ்**

கடித்து மென்று பயிருக்கு தீங்கிழைக்கும் பூச்சிகளை

## ::பாலிடால்

சிறந்த முறையில் கட்டுப்படுத்துகிறது.

காய்ப் புழுக்-

களுக்கு ஏற்றது விசேஷ பூச்சி மருந்து

## மெடாஸிட்காம்பி

அடைப்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் உபயோகிக்கும் முறை
களின் படி ..பாலிடால், மெடாஸிஸ்டாக்ஸ்,
மெடாஸிட்காம்பி மருந்துகளை என்றும் உபயோகியுங்கள்.

பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகளி-
னால் ஏற்படும் நஷ்டத்திற்கு முடிவு
காணவும். பண விரயத்தை தவிர்க்க

BAYER ®

பாயரின் தரமான
பூச்சி மருந்துகள்

# பார்த்தோம் படித்தோம்







### அரிய விருந்து

தமிழரசில் வெளிவந்த கண்ணகிக் கோட்டம், கண்ணகியே மங்கலதேவி முதலிய ஆராய்ச்சிக் கட்டுரை தமிழன்பர்களுக்கு அரிய விருந்து. தொடர்ந்து இது போன்ற அரிய கட்டுரைகளைத் 'தமிழரசு' வெளியிட்டுத் தமிழுலகுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

—பி. கிருஷ்ணகுமாரி. கும்பகோணம்.

### பாராட்டுகள் ஏராளம்

அரவிந்தர் வாழ்க்கை வரலாற்று நூலை இலவச இணைப்பாகத் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறை வெளியிட்டிருப்பதை என்னுடைய வங்காளி நண்பர்களுக்கு எடுத்துரைத்து நூலைப் படித்து வங்காளியில் எடுத்துரைத்தேன். தமிழக அரசின் பணியினை எல்லாரும் பாராட்டினார்கள்.

—ஆர். ஆர். கோபால். கல்கத்தா.

### பெருமையுண்டு

நாமக்கல் கவிஞர் கடைசியாக எழுதிய கவிதை தமிழரசில் வெளியாகியது என்ற பெருமை தமிழரசுக்கு உண்டு! இறுதிக் காலம் வரை அவருக்கு உதவிய பெருமை தமிழக அரசுக்கு உண்டு.

—முத்து, செல்லப்பன். சேலம்.

### கவரும் முகப்பு

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரின் படத்தை கண்ணைக் கவரும் வகையில் தமிழரசு அட்டையில் வெளியிட்டிருந்தீர்கள். இதுபோன்று பெரிய அளவில் அட்டையில் படங்களை வெளியிடுங்கள். சிறிய படங்களாக வெளியிடுவது எடுப்பாக இல்லை.

துரை. கோவிந்தன். திருச்சிராப்பள்ளி.

### அறிவூட்டும் ஆசான்

விடுதலைத் திருநாள் வெள்ளி விழா மலர் இளைய தலைமுறையினருக்கு அறிவூட்டும் ஆசான் என்றே சொல்ல வேண்டும். யோகி சுத்தானந்த பாரதியார் கட்டுரையிலிருந்து விடுதலைப் போராட்ட தியாக வரலாற்றில் இதுவரை தெரிந்து கொள்ளாத செய்திகளை அறிந்து கொண்டோம்.

எஸ். எஸ். தேவநாதன். மதுரை.



# குறளோவியம்

**முதல்வர் கலைஞர்**

காலை அரும்பியதும் பூந்தாது உண்டு, மாலை விரிந்த தாழையினுள்ளே மாலைத் துயில் கொண்டு, மெய்யின்பம் நுகரும் கருவண்டு—

அதுபோல்,

காதலனோடு; பூம்பொழிலாம் மதிமுக மங்கையின் பேருருவம் கண்டு; குழலும் யாழும், அமிழ்தும் குழைத்த அவளது மழலைக் கிளவி கேட்டு; தொட்டு, மூவா மருந்தாம் அந்தத் தேவாமிருத இதழ்களைத் தேனென உண்டு, அகிலின் புகைக்கு நறுமணம் சேர்க்கும் "கருப்பு நீர்வீழ்ச்சியாம்," அவளது கூந்தலை முகர்ந்து; ஐம்புலனையும் அனுபவிக்கிறான்; இன்பத்துப் பாலுக்குப் புதியதொரு இலக்கியம் சமைக்கிறான்! கண் நிறைந்த காரிகையின் கூட்டுறவால் மண் திணிந்த ஞாலத்தில் பிறந்ததன் பயனையே அறுவடை செய்கிறான்!

அய்யகோ! அந்தப் பேரின்பத் திருவூற்றின் கண்களைப் "பிரிவு" என்னும் பொடி மணல், சரிந்து தூர்க்கிறது. நிலம் வீழ்ந்ததொரு மீனாய்—கலம் பறி கொடுத்ததொரு வணிகனாய்க் காதலன் ஓலமிடுகிறான்! கோதையைப் பிரிந்த காலமெல்லாம் அவனுக்கு ஒரே வாதைதான்!

ஓசை சிறிதுமின்றி ஊர்ந்து செல்லுமே நச்சரவு, அதைப்போல இரவு நடந்த இன்பக் காட்சிகள் அவன் நினைவிலே ஊர்கின்றன "நஞ்சிலும் அதிகமாய்க் கொடுமை செய்கிறதே இந்த நங்கையின் நினைவு"—என்று சஞ்சலப் படுகிறான்.

வேங்கையைத் தழுவுவேன்; இனிமேல் என் விழி நிறைந்தவளைத் தழுவுவேன்—என்று சொல்லத் தோன்றும் அளவுக்கு அவனது விரகதாபம் மேலிட்டெழுகிறது.

தங்கச் சிலையின் அங்க அசைவுகள் ஒவ்வொன்றும் மின்னல் கொடி போல் தோன்றி மறைந்து மீண்டும் இன்னல் தருகிறது.





என்னதான் செய்வான், அவன்? ஆசை வல்லியைக் கண்ட மாத்திரத்தில் அகண்டு மலர்ந்த விழிகளும் 'அவளைத் தவிர வேறெதையும் பாரேன்' என்று தொடடாற் சுருங்கியைப் போல் ஒடுங்கி விடடதே!—எது செய்வதென்பதறியாது நிலை தடுமாறுகிறான், ஏதேதோ சொல்லி உள்ளம் புகுந்தவளைத் திட்டித் தீர்க்கிறான்!

"இன்ப உலகிற்கு வழி கேடடு வந்த என்னை வாரி அணைத்தாய்; பின் பிரிந்தாய்; இப்போது திசைதவறித் தடுமாறுகிறேன்"—என்று வசை பாடுகிறான்.

"குடுமி கோதி, முத்தம் ஈந்தாய்; இதழ் பிரிந்த என் இதழ்கள் இப்போது கருகி விடடனவே—" என்றும் புலம்புகிறான்.

சோமகனின் குளிர்பபிடியிலே அடைபடடுக் கிடந்த அவளது மலை நிகர்த்த மேனி எரிதழல்போல் தகிக்கிறது. "நெருங்கியபோது குளிராய், பின் நீங்கியபோது பெரும் நெருப்பாய் விளங்கும் இதுபோன்ற புதுமையை நீ எங்கிருந்து பெற்றாய்?" என வியக்கிறான்.

அந்த வியப்பை—விரகதாபத்தின் வேகத்தை இதோ வள்ளுவர் விளக்குகிறார்; பாருங்கள்

நீங்கின் தெறூஉம்
குறுகுங்கால் தண்ணென்னும்
தீ யாண்டுப் பெற்றாள் இவள்?

அவன்தான் இப்படி! அவள் மட்டும் என்ன, பிரிவினால் இன்பமா துய்க்கிறாள்? இல்லை; இல்லை;

நெருபபு தன்னைத் தொடடால்தான் சுடும்; காதல் நோய் போல் இது தன்னை விட்டு நீங்கிய போது சுடவல்லதாகுமோ?—என்று சொல்லிக் கடிந்துகொள்கிறாள்.

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ!





# விஞ்சு புகழில் - விளங்கக் காணபாரே !




இவரியா ரேன்குவை யாயின் இவரே
தொண்டைநந் நாட்டின் துறைதோறும் கலங்கள்,
ஆடி அசைந்து பாடிடு கடல்மேல்
அணிஅணி யாக அண்டிடு படகில்
வந்து குவியும் மணிபொன் செந்நெல்
முத்துத் தந்தம் முதிர்மலைத் தேக்கு
நிறைத்துப் பொருளை நிறைத்துப் புகழைத்
தமிழக மிருந்தே தடங்கடல் தாண்டி
உலகுக் களித்த ஒப்பிலாப் பல்லவர்
ஆண்ட காஞ்சி அளித்த அண்ணா !
தென்னகம் ஆண்ட முன்னாள் முதல்வர் !
உலகம் வியக்கும் ஒப்பிலா அறிஞர் !
பிறர்வாய் அடக்கும் பேச்சிற் பெரும்புலி !
வள்ளுவர் குறளின் உள்ளுறை உவமம் !
சங்க இலக்கியத் தீந்தமிழ்ச் சாறு !
குறுந்தொகை மெய்ப்பொருள் கூட்டும் தென்றல் !
தம்பியர் கண்ட தானைத் தலைவர் !

வரியைக் குறைத்து வறுமை குறைத்து
நெறியோ டாண்ட நீள்புகழ் மன்னர்
வளர்த்த சங்கத் தமிழின் மாண்பை
உலகத் தமிழர்க் குணர்த்திய செம்மல்!
இனியர்! எளியர்! எவர்க்கும் என்றும்
பணிவுடன் இன்சொல் பகரும் மேதை!
வான்தோடு மலையும், மலையின் சாரல்
மானை வீழ்த்த வாங்கிய சிலையின்
கால்வழி செந்தேன் பாயப் பழுக்கும்
கனிமரத் தோப்பும் கதிர்முனை சாய்ந்த
செந்நெல் வயலும் செழுமலர்க் காடும்
புன்னை மணக்கும் நெய்தற் போருளும்
தன்னகம் கோண்ட தமிழக அரசை
உலகம் புரக்கும் பரிதியை ஒப்ப
முன்னாள் காத்த முதல்வர்! அண்ணா!
அமைச்செனப் பட்டது நினதே அத்தை!
தமிழகம் வாழும் தம்பியர் மக்கள்
நெஞ்சம் திறப்போர் நின்னுரு
விஞ்சு புகழில் விளங்கக்காண் பாரே!

கவிஞரேறு
# வாணிதாசன்



திணை - பாடாண் திணை    துறை - இயன்மொழி வாழ்த்து





# செய்திகள்!

நமது மாநிலத் திட்டக்குழு, மாவட்ட திட்டச் சிறு குழு என்று மாவட்டந்தோறும் திட்டச் சிறு குழுவை அமைத்து ஆங்காங்குள்ள வாய்ப்புகளுக்கு ஏற்ப அடித்தளத்திலிருந்து திட்டங்களை வகுத்திருக்கிறது ; ஆசிய நாடுகளிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில்தான் இப்படி அமைக்கப்பட்டுள்ளது என்று பொருளாதார வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

• • •

உலகத்திலே மிக அழகான கடல் பசிபிக் பெருங்கடல் தான். பிலிபைன்ஸ் பகுதியில் மிக அதி



கமான பசிபிக் பெருங்கடலின் ஆழம் 36,198 அடி.

அட்லாண்டிக் பெருங்கடலின் மிக அதிகமான ஆழம் 27,498 அடி.

இந்து மாக்கடலின் மிக அதிகமான ஆழம் 26,400 அடி.

ஆர்ட்டிக் பெருங்கடலின் மிக அதிகமான ஆழம் 17,850 அடி.

• • •

உலகிலேயே மிகப் பெரிய அளவு பரப்பளவு கொண்ட நாடு சோவியத் ரஷ்யாதான்; தென் அமெரிக்காக் கண்டத்தைவிடச் சோவியத் ரஷ்யா பெரியது.

உலகிலேயே பெரிய நகரம் டோக்கியோதான். இங்கு வாழும் மக்களுக்கு இணையான மக்கள் தான் ஆஸ்திரேலியா கண்டம் முழுவதும் வாழ்கிறார்கள்.

பூமத்தியரேகையைக் கணக்காக வைத்து, உலகத்தின் சுற்றளவைக் கணக்கிட்டால் 24,901·8 மைல் ஆகும்.

தென் துருவத்திற்கும் வட துருவத்திற்கும் உள்ள தொலைவு 7,900 மைல்.

• • •

டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் சீவக சிந்தாமணியையும், சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் அச்சேற்றி, நூலாக வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தவர், சேலம் இராமசாமி முதலியார் அவர்கள். அவர் தான் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களின் கையெழுத்துப் படிகளைச் சாமிநாதய்யருக்குக் கொடுத்தார்.

"அவருடைய தூண்டுதல் இராவிட்டால் சிந்தாமணியை அச்சிடுவது எங்கே ? சங்க நூல்களின் பெருமையை உணர்ந்து இன்புற்று வெளிப்படுத்தும் முயற்சிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"—என்று டாக்டர் உ. வே. சாமிநாதய்யரே எழுதியுள்ளார்.

• • •

அண்ணல் காந்தியடிகளைவிட வயதில் மூத்தவர் மோதிலால் நேரு.

• • •

சக்திதாசன், காளிதாசன் என்ற பெயர்களில் 1916–ஆம் ஆண்டு முதல் 1921-ஆம்ஆண்டு வரை ஏராளமான கட்டுரைகளை பாரதியார் எழுதியுள்ளார்.

• • •

தமிழ்நாட்டில் இரயில் பாதை இல்லாத மாவட்டம் என்று இதுவரை அழைக்கப்பட்டது கன்னியாகுமரி மாவட்டம். செப்டம்பர் ஆறும் நாளிலிருந்து அந்தக் குறையை அகற்றிடும் முயற்சி தொடங்கிவிட்டது. ஆமாம், அகன்ற ரயில்பாதை போடும் பணியைத் தலைமை அமைச்சர் துவக்கி வைத்து விட்டாரே.

• • •

காச நோயைக் குணப்படுத்தும்; கண்ணில் ஏற்பட்டிருக்கும் புகைப் படலத்தைக் கலைத்து, நல்ல சுத்தமான பார்வையைத் தரும்



புண்களை ஆற்றிடும்; உடலில் ஏற்பட்டுள்ள வீக்கம் வாடி விடும்; விஷத்தை முறித்து விடும்; பித்த சம்பந்தமான வியாதிகள் குணமாகும்.

சிறு கீரை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மையைத்தான் ஒரு மருத்துவப் புத்தகம் மேற்கண்டவாறு விவரிக்கிறது.

தொகுப்பு—செய்திக்கினியன்.

# மாணவர் அரங்கம்

## செந்தமிழ்ச் செம்மல்கள்

நமது தமிழ் நாட்டு அரசின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை எழுதியவர் பேராசியர் சுந்தரம் பிள்ளை அவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அருந்தமிழ் வளர்த்த அறிஞர் பெருமக்களில் ஒருவர் ஆவார்.

இப்பொழுது கேரள மாநிலத்திலுள்ள ஆலப்புழையில் 1885-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சுந்தரம் பிள்ளை பிறந்தார். இவருடைய பெற்றோர் திரு பெருமாள் பிள்ளையும் மாடத்தி அம்மையாரும் ஆவர்.



சுந்தரம் பிள்ளையின் முன்னோர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஆலப்புழையில் குடியேறினவர்கள் : ஆலப்புழையில் பெருமாள் பிள்ளை பெரிய துணி வணிகராகத் தொழில் செய்து வந்தார்.

சுந்தரம் பிள்ளை ஆலப்புழையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் படித்து முடித்தவுடன் திருவனந்தபுரம் சென்று மகாராஜா கல்லூரியில் பி.ஏ. கல்வி கற்று பி.ஏ. பட்டப் படிப்பில் முதல்வராகத் தேர்வு பெற்றார்.

அக் கல்லூரியில் முதல்வராக இருந்த ரோஸ் என்பார் சுந்தரம் பிள்ளையைத் தம் கல்லூரியிலேயே பேராசிரியராகச் சேர்த்துக் கொண்டார்.

1877-ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் ஓர் ஆங்கிலத் தமிழ்க் கல்விக் கூடம் அமைந்தது. திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி முதல்வர் ரோவின் பரிந்துரையால் சுந்தரனார் அவ்வுயர்நிலைப் பள்ளியின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவ்வாண்டில் தான் சுந்தரனார் சிவகாமி அம்மையாரை வாழ்க்கைத் துணை நலமாக ஏற்றுக் கொண்டார்.

சுந்தரனார் பெரும் முயற்சியால் அந்த உயர்நிலைப் பள்ளி இடைநிலை வகுப்புகளை உடைய இரண்டாந்தரக் கல்லூரியாக உயர்ந்தது. அதன் முதல்வராகப் பணியாற்றினார் சுந்தரனார். அக் கல்லூரிதான் இன்று திருநெல்வேலியில் புகழுடன் விளங்கும் இந்துக் கல்லூரி.

1879-ஆம் ஆண்டு வரை சுந்தரம் பிள்ளை திருநெல்வேலியில் பணியாற்றினார். அவ்வாண்டில் மீண்டும் திருவனந்தபுரம் கல்லூரியில் பேராசியர் பதவி கிடைத்ததால் அங்குச் சென்று பணியாற்றினார். 1880-ஆம் ஆண்டில் சுந்தரனார் எம்.ஏ. பட்டம் பெற்றார்.

திருநெல்வேலிக்கு மேற்கே எட்டு மைல் தொலைவில் பொருநையின் வட கரையில் கோடகநல்லூர் உள்ளது. அவ்வூரில் சுந்தர முனிவர் என்ற அறிஞர் பெருமகன் வாழ்ந்து வந்தார். சுந்தரனார் விடுமுறைக் காலங்களில் எல்லாம் சுந்தர முனிவரிடம் சென்று ஞான நூல்களைக் கற்றார். சுந்தரம் பிளளைதான் சுந்தர முனிவருடைய "நிசானந்த விலாசத்"தை அச்சியற்றி வெளியிட்டார்.

மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் முதலியன சுந்தரனார் எழுதிய சிறந்த நூல்களாகும். நூற்றொகை விளக்கம் 1888-ஆம் ஆண்டிலும் மனோன்மணீயம் 1891-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

பத்துப் பாட்டிலுள்ள திருமுருகாற்றுப்படை முதலிய மூன்று பாடல்களை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருப்பதோடு பத்துப் பாட்டைப் பற்றி ஆங்கிலத்தில் ஓர் சிறந்த ஆராய்சிக் கட்டுரையையும் எழுதியிருக்கிறார்.

மாணவர் அரங்கம் பகுதியில், அருந்தமிழ் வளர்த்த அறிஞர்களின் வரலாறு, 'செந்தமிழ்ச் செம்மல்கள்' என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும்.

சுந்தரனார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள திருஞான சம்பந்தர் காலம் என்ற நூலும் திருவிதாங்கோட்டுப் பண்டைய அரசர் காலம் பற்றிய ஆராய்ச்சியும் இவருக்கு F. R. H. S. (Fellow of the Royal Historical Society) என்ற பட்டத்தையும் M. R. A. S. (Member of the Royal Asiatic Society) என்ற பட்டத்தையும் அளித்தன.

சுந்தரனார் 1891-ல் சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினரானார். 1896-ல் இவருக்கு இராவ்பகதூர் பட்டம் கிடைத்தது.

சுந்தரனார் அவர்கள் இளமையில் தமிழ் கற்ற நாகப்பட்டினம் புத்தகக் கடை நாராயணசாமிப் பிள்ளை அவர்களிடமே நிறை தமிழ் ஆய்ந்த மறைமலை அடிகளாரும் தமிழ் படித்தார்கள்.

# பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

இச் செய்தியைச் சுந்தரனாருக்கு மறைமலை அடிகள் எழுதித் தெரிவித்ததால் மிகுந்த மகிழ்வுடன் அவரையும் தம் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையையும் திருவனந்தபுரத்திற்கு அழைத்து விருந்தோம்பினர்.

திருவனந்தபுரத்திலேயே மறைமலை அடிகள் தமிழாசிரியராகப் பணியாற்ற உதவினர் சுந்தரனார்.

இவர் மறைமலை அடிகளுக்கு அளித்த சான்றிதழினாலேயே சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் மறைமலை அடிகளாருக்குத் தமிழ்ப் பேராசியர் பதவி கிடைத்தது.

தமிழிலும் வரலாற்றிலும் அறிவு நூலிலும் தேர்ந்து சிறந்த பணியாற்றிய பேராசியர் சுந்தரனார் தமது நாற்பத்திரண்டாவது வயதிலேயே 2–4–1897-ல் புகழுடம்பெய்தினார்.

# வெண்பாப் போட்டி-43.

**ஈற்றடி :**

**கொலுவிருக்கும் அன்றே குவிந்து.**

**முடிவு நாள் : 3–10–1972.**

பரிசு : ஓராண்டு ''தமிழரசு'' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

எனினும் காலத்தால் அழியாத சுந்தரனாரின் தமிழ்ப் பணிகளால் என்றும் தமிழ் கூறும் நல்லுலகு முழுதும் அவர் பெயர் நிலைத்து நிற்கும்.

—நம்பியின் தம்பி

# வேளாண்மைத் தொழிற் கழகத்தின் வழியாக டிராக்டர் பெறுவது எப்படி?

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தின் மூலம் டிராக்டர் வாங்க விரும்புகின்றவர்களுக்கு 10 ஏக்கர் புன்செய் அல்லது 5 ஏக்கர் நன்செய் நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின், டிராக்டர் பெற விரும்புகின்றவர்கள், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தில் ரூபாய் 10 செலுத்தி மனுத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மனுத்தாள்களைக் குறையின்றிப் பூர்த்தி செய்ய வேண்டும். மனுதாரர் தம் விருப்பத்திற்கேற்ற 3 வகை டிராக்டர்களை, மனுத் தாள்களில் குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிடும் 3 வகை டிராக்டர்களில் ஏதேனும் ஒன்றை மனுதாரர் பெற்றுக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

மனுதாரர், அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் தன் பெயரில் 1,000 ரூபாய்க்குச் சேமிப்புக் கணக்குத் துவங்கி, சேமிப்புக் கணக்குப் புத்தகத்தைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தின் சம்பந்தப்பட்ட மண்டலப் பொறியாளர் பெயருக்கு மாற்ற வேண்டும். இத்தொகையை டிராக்டர் பெற்றுக் கொள்ளும் பொழுது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்த மனுத்தாள்களைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்திற்கு அனுப்ப வேண்டும். அத்துடன், மாவட்ட வேளாண்மை அலுவலர் அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களிடமிருந்து 'மனுதாரர் ஓர் உழவரே என்றும், அவர் வாங்கவிருக்கும் டிராக்டர் அவருடைய சொந்த வேளாண்மை வேலைகளுக்கே தேவைப்படுகிறது என்றும்' ஒரு சான்றிதழ் பெற்று தொழிற் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

குறையேதும் இல்லாத மனுக்களை பதிவு செய்து கொண்டு மனுதாரர்களுக்கு வேளாண்மைத் தொழிற் கழகம் தகவல் அனுப்பும்.

மனுதாரர் முழுத் தொகையையும் செலுத்தி விட்டு, டிராக்டரைப் பெற்றுக்கொள்ளலாம்.



தவறு செய்வது மனித இயல்பு. செய்த தவற்றை உணர்ந்து திருந்தி விடுபடுவதும் மனித இயல்பிற்கு அப்பாற்பட்டதல்ல. வறுமையில் உள்ளோர், ஆதரவற்றோர், அனாதைகள், சூழ்நிலையால் வாழ்க்கைப் பாதையிலிருந்து வழிதவறிச் சென்றுவிடுவதுண்டு; அவர்களை இச்சமுதாயம் வாழாவெட்டியாக்கி விடுகிறது; சமுதாயத்தோடு இணங்கி இணைந்து வாழ முடியாதவர்களாக்கிவிடுகிறது. தடம் புரளும் ரயிலைக் கூட மீண்டும் ஓடவைக்கும் மனித இயல்பு, ஏனோ சூழ்நிலையில் வாழ்க்கைத் தடத்தில் வழி தவறிச் சென்று விட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க மறுக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்து மீண்டும் அவர்களை வாழும் மனிதர்களாக உலாவ விடுவது தனி மனிதனின் கடமைமட்டுமல்ல; நல்ல அரசின் தவிர்க்க முடியாத பணியுமாகும்.

கணவனை இழந்த கைம்பெண்கள், பருவ வயதில் எண்ணத்தில் கோளாறு கொண்ட பெண்கள், ஏழ்மை, ஆதரவின்மை இவற்றால் தவிக்கும் பெண்கள், தங்களின் முறை கடந்த செயல்களால் தங்கள் வாழ்க்கையை முடமாக்கி இருளடையச் செய்து கொள்கிறார்கள். காரிருளை நீக்கக் கதிரவன் வருவதுபோல், வாழ்க்கையில் தவறித் திக்குத் தெரியாமல் தவிக்கின்ற பெண்களின் வாழ்வில் ஒளியேற்ற வகை செய்ய வேண்டாமா? மறுமலர்ச்சி ஏற்பட முயல வேண்டாமா?

தவறியோர் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பாகவும், செய்வதற்கு ஒரு தொழில் கற்றுத் தருவதற்காகவும், வாழ்வில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு எதிர் காலத்தில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகத்தான் வேலூரில் அரசினர் மகளிர் சீர்திருத்தப்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது.

வாழ்வுக்கு வழி காட்டவும் இப்பள்ளி தன் சீரிய சிறப்பான பணியினைச் செய்து வருகிறது. இப்பள்ளியில் பெண்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் பெண்களின் கைவண்ணமும், தொழில் திறமையும் பாராட்டப்பட வேண்டியவர்களால் பாராட்டப்பட்டுள்ளன.

இங்குத் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள் சிறப்பானவை மட்டுமல்ல; சிக்கனமானதாகவும் இருக்கின்றன. அத்தோடு பலதிறப்பட்ட பல நோக்குடைய மக்களின் பலவித ஆவலைத் தூண்டி இழுத்துக் கவரும் வண்ணம் பலவித எழிற் கோலங்களில், விதவிதமான அமைப்புகளில், விதவிதமான ஆடை வகைகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் தயாரிப்புகள் இருந்தும், விற்பனைக்குப் போதுமான ஏதுக்கள் இல்லாததால் இந்த இல்லத்தில் தயாரிக்கப்படும் ஆடைகளின் அருமை பெருமைகள் இதுவரை குடத்திலிட்ட விளக்காகவே இருந்து வந்தன. அந்தக் குறையைத் தீர்க்கவும், தங்களின் தயாரிப்புகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து வெளி உலகைக் கவரவும் இப்பள்ளியின் துணை அங்கமான விற்பனை அங்காடி ஒன்று கடந்த 2—7—1972 அன்று திறக்கப்பட்டது.

சீர்திருத்தப்பள்ளி மாணவிகள் பயிற்சிக் கூடத்தில் தயாரிக்கப்படும் பொருள்களை விற்க, விற்பனை அங்காடி ஒன்றை, வேலூர் அண்ணா கலையரங்கின் எதிரில் உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 2—7—1972 அன்று மாலை 5-00 மணி அளவில் திறந்து வைத்துப் பொருட்களைப் பார்வையிட்டார். கண்காட்சியைத் திறந்து வைத்து அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

“இத்திட்டம் இப்பெண்களின் வாழ்வுக்கு வழிகாட்டும் சிறந்த ஏற்பாடாகும். இதன் மூலம் பெண்களுக்குப் பாதுகாப்பான தொழில் கிடைக்கிறது. இலாபத்தைக் கருதாமல் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஏழைப் பெண்கள்-வாழ்க்கையில் வழியற்றுப் போனவர்கள் ஆகியோருக்கு இத்தொழிலும் அங்காடியும் உதவியாக அமையும்.

### பள்ளியின் வ்ரலாறு

தமிழ் நாட்டிலுள்ள சீர்திருத்தப் பள்ளிகள், மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணி இல்லங்கள், பெண்டிர் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றில் தங்கள் பயிற்சிகளை முடித்துவிட்ட, தாய் தந்தையற்ற, மற்றும் ஆதரவற்ற பெண்களுக்குப் பாதுகாப்பளித்துப் பயிற்சி அளித்து, மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் வேலூரில் மகளிர் பிற்காப்பு இல்லம் அமைக்கப்பட்டது. முதலில் இப்பயிற்சி நிலையம் தொழில் வணிகத் துறையினரால் நிறுவப்பட்டுப் பின்னர் சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் நிருவாகத்திற்கு மாற்றப்பட்டது.

தமிழ்நாடு முழுவதிலும் பெண்கள் மறுவாழ்வுக்கென்று தையற் கலைப் பயிற்சி அளிக்கும் இத்தகைய நிலையம் வேலூரில் மட்டுமே உள்ளது; வேலூர் மகளிர் பிற்காப்பு இல்லத்துப் பெண்களுக்கும், பர்மா, இலங்கை நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய பெண்கள் சிலருக்கும், மற்றும் வேலூரிலும்



சுற்று வட்டாரங்களிலுள்ள தகுதி வாய்ந்த சில பெண்களுக்கும் இங்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 60 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களில் முப்பது முப்பது பேர்களாக இரு கூறுகப் பிரிக்கப்பட்டு மார்ச்சு மாதம் முதல் தேதி முதல் ஒரு பிரிவினருக்கும், ஆகஸ்டு மாதம் முதல் தேதி முதல் மற்ருெரு பிரிவினருக்கும் இரு பயிற்சிப் பிரிவு வகுக்கப்பட்டு, இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்த மாணவிகளில் 25 சதவிகிதம் பர்மா, இலங்கை அகதிப் பெண்களுக்கென்று அரசினரால் ஒதுக்கப்படடுள்ளது.

இப்பயிற்சிக்கென்று பெண்களைத் தேர்வு செய்வதில், கைம்பெண்கள், கணவர்களால் கைவிடப்பட்ட மனைவிகள், வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவர்கள், வேறு வகையில் வாழ வழியற்ருேர் போன்ற இக்கட்டான நிலையிலுள்ள பெண்களுக்குத் தனிச் சலுகைகள் காட்டப் படுகின்றன.

இங்கு உணவு, உடை, பயிற்சி அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. அத்துடன் பயிற்சி பெறும் பெண்களுக்கு ஓர் ஆண்டுப் பயிற்சிக் காலம் முடிய மாதம் ரூ. 30 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. பர்மா, இலங்கை அகதிப் பயிற்சிப் பெண்களுக்கு மட்டும் 18 மாதக் காலப் பயிற்சிக்கும் மாதம் 55 ரூபாய் வீதம் உதவிப் பணம் வழங்கப்படுகிறது. செயல் முறைப் பயிற்சிக்குத் தேவையான துணிகள் இலவசமாக வழங்கப்பட்டு அவற்றின் மூலம் தைக்கப்பட்ட ஆடைகள் விற்பனை செய்யப்பட்டு அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப் படுகிறது.

இந்த நிலையம் சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப் பணியின் நிருவாகத்தின் கீழ் வந்தபின்னர் பயிற்சித் திட்டம் முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி 5 முதல் 8 வகுப்பு வரை கல்வி கற்றுள்ள பெண்களைக் கொண்ட இளநிலைப் பயிற்சிப் பிரிவு ஒன்றும், 8-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் கற்றுள்ள பெண்களைக் கொண்ட முதுநிலைப்பயிற்சிப் பிரிவு ஒன்றும் என இரண்டு பயிற்சி நிலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்குப் பெண்களுக்குத் கருத்தியல் திட்டம், செயல்முறை இரண்டின் மூலம் தையற்கலை நவீன முறையிலும் திட்டமிட்ட முறைப்படியும் தொழில் நுணுக்கத்துடனும் கற்றுத் தரப்படுகிறது. இதற்கெனப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தக்க மேற்பார்வையின் கீழ் போதனை நடத்துகின்றனர்.

பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பின்னர் மாணவிகளுக்குத் தனித்த விரிவான செயல் முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது பிற்காப்பு இல்ல மாணவிகள், பர்மா, இலங்கை அகதிப் பெண்கள் ஆகியோருக்கு ஆறு மாதக் காலத்திற்கும், மற்ற மாணவிகளுக்கு மூன்று மாதக் காலத்திற்கும் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் மாணவிகள் பலவிதமான ஆடைகளைத் தொடர்ந்து பல முறை தைப்பதற்கான வாய்ப்பினைப் பெறுகிருர்கள். அதனல் அவர்கள் தொழில் திறன், செய்திறன் சீர்மையும் நேர்மையும் பெறுகின்றன.

ஓராண்டுக் காலப் பயிற்சி முடிந்தவுடன் நிலையத்திலேயே கருத்தியல் திட்டம் செயல் முறைத் திட்டம் இரண்டிலும் விரிவான தேர்வுகள் நடத்தப் படுகின்றன. தேர்வில் வெற்றி பெறும் மாணவிகளுக்கு இத் தொழிற் துறையினரால் பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன.

இங்குப் பயிற்சி பெறும் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன், நிலையத்தோடு இணைந்த ஒரு உற்பத்திப் பிரிவு ( Production Wing ) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற 10 பெண்கள் கூட முறைப்படி உற்பத்திப் பிரிவில் இங்கு அமர்த்தப்படுவார்கள். இதனுல் அப் பெண்களுக்கு வாழ வகை ஏற்படுவதுடன் அரசுக்கு வருவாயும் கிடைக்கிறது.

இதுவரை 318 பெண்கள் பயிற்சி பெற்று வெளியே அனுப்பப் பட்டுள்ளார்கள். தற்பொழுது 85 பெண்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் திருமணங்களும் செய்விக்கப்படுகின்றன. யாருமற்ற அனதைப் பெண்களுக்குத் திருமணம் செய்து அனுப்புவதுதான் சிறந்த மறு வாழ்வாக அமைகிறது.

இப் பெண்களின் திருமணம், மகளிர் பிற்காப்பு இல்லத்தில் தான் நடைபெற வேண்டுமென்ற நியதி உண்டு. இத் தம்பதிகளுக்கு 250 ரூபாய் அன்பளிப்பாக அரசினரால் வழங்கப் படுகிறது. இத் தொகை மணமக்களின் இல்லற வாழ்விற்குத் தொடக்க முதலாகவும், அடிப்படையாகவும், அமைந்து விடுகிறது.

நமது மாநிலத்திலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் அரசு அலுவலர்கள் மற்றும் பிரமுகர்கள் பலர் இப்பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்து இதன் பயிற்சி முறையையும், பணிகளையும் பார்வையிட்டுள்ளனர். அவர்கள் யாவரும் இப்பயிற்சி நிலையம் சமூகச் சீரமைப்பில், குறிப்பாக ஆதரவற்ற நிலையில் உள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் புரிந்துவரும் தொண்டினைப் பாராட்டியுள்ளனர்.

இப்பள்ளியில் பெண்களைச் சீர்திருத்துவதுடன், பயிற்சி அளித்துப் பக்குவத்தை ஏற்படுத்தி, வாழ வழி காட்டுகிருர்கள். இருள் சூழ்ந்த இப் பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்றுவதும் இப்பள்ளியே!

வாழ்வில் வெறுப்படைந்த உள்ளங்களுக்கும், வாழ்வில் நம்பிக்கை ஒளி இழந்தவர்களுக்கும் விடிவெள்ளியாக இப்பள்ளி செயல்படுகிறது. எம். எச்

### கடனீட்டுப் பத்திரங்களுக்குக் கூடுதல் முதலீடு

மத்திய நிலவள வங்கி வெளியிட்டுள்ள கடனீட்டுப் பத்திரங்களுக்குத் தொகை அளிக்கும் வகையில் ஒரு கோடி ரூபாயைக் கூடுதலாக அரசு முதலீடு செய்துள்ளது. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகமும் உலக வங்கியும் அளித்து வருகின்ற நிதி உதவியைக் கொண்டு கடன் வழங்கும் திட்டத்தை மத்திய நிலவள வங்கி பெருமளவில் முனைப்பாகச் செயல்படுத்திவரும் இச்சமயத்தில், இப்போது செய்துள்ள முதலீடானது, வங்கி இன்னும் செவ்விய முறையில் செயல் படுவதற்குப் பேருதவியாக இருக்கும்.

[1972—73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து.]

## மக்கள் தொகையே காரணம்!

**அ**ண்மையில் எடுக்கப்பட்ட மக்கள் தொகையின்படி இந்தியாவில் 38 கோடி 60 இலட்சம் பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

எழுத்தறிவுள்ளவர்களின் எண்ணிக்கை 1951-ல் 16·6 சதவிகிதமாக இருந்தது. 1961-ல் இது 29·3 சதவிகிதமாக உயர்ந்தது. ஆயினும் இருபது ஆண்டுகளில் எழுத்தறிவில்லாதவர்களின் தொகை 8 கோடியே 80 இலட்சம் உயர்ந்திருக்கிறது. மக்கள் தொகைப் பெருக்கமே இதற்கு முக்கியக் காரணம் என்று கூறப்படுகிறது.

• • •

## கம்ப்யூட்டர் கை!

**மு**ன் கையின் உட்புறமாக வைக்கக் கூடிய அளவில் இலண்டனில் ஒரு புதிய கம்ப்யூட்டர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கையிழந்தவர்களுக்கு வைக்கப்படும் செயற்கைக் கையின் உள்ளே இந்தக் கம்ப்யூட்டரை வைத்தால் அசல் கையின் இயக்கங்களைப் போலவே இதனையும் இது இயக்கக்கூடியது.

நினைத்தவுடன் கட்டை விரலைக் கொண்டு எந்தப் பொருளையும் பிடிக்கலாம்; மற்ற விரல்களைத் தனித் தனியே மடக்கி நீட்டலாம்; எல்லா விரல்களையும் சேர்த்து ஒரு பொருளைப் பிடிக்க வேண்டுமானால் அதுவும் முடியும். மருந்து சீசாவைக் கையில் வைத்துப் பிடித்துக் கொண்டே சாப்பிட முடியும். பாட்டிலைக் குலுக்கவும் முடியும். இவ்வளவு இயக்கங்களும் அசல் கையில் எப்படி நிகழ்கின்றனவோ அதே போல் நிகழும்; இயக்குவது உள்ளே இருக்கும் கம்ப்யூட்டர்.

• • •

## தமிழில் அரசியல் சட்டம்

**அ**ரசியல் சட்டத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலை முடிந்து விட்டது. இது போல், மலையாளம், தெலுங்கு, மராட்டியம், பஞ்சாபி, குஜராத், அசாமி ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. இவற்றை அச்சடிப்பதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அச்சடிக்கும் வேலை முடிந்ததும் இவை வெளியிடப்படும்.

• • •

## ஆறாவது சரணாலயம்

**கோ**யம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனை மலையில், வன விலங்கு சரணாலயம் அமைக்கப்படுகிறது. அக்டோபர் 1-ஆம் நாள் முதல் பொது மக்கள் இந்தச் சரணாலயத்தைப் பார்வையிடலாம். 300 சதுர மைல் பரப்பில் இந்தச் சரணாலயம் இருக்கும்.

காட்டுப் பகுதியில் வன விலங்குகள் சுதந்தரமாகத் திரிவதை இங்கு நேரில் பார்க்கலாம். இதற்காகக் காட்சிக் கோபுரங்கள் பல அமைக்கப்படும். பயணிகள் தங்குவதற்கு விடுதியும் கட்டப்படும். காட்டில் சுற்றிப் பார்க்க ஊர்தி வசதியும் இருக்கும்.




ஆனைமலை வனவிலங்கு சரணாலயத்தில் காட்டு யானைகள், காட்டெருமைகள், மான்கள் முதலியவை உள்ளன. இது தமிழ் நாட்டில் ஏற்படும் ஆறாவது சரணாலயமாகும்.

* * *

## 'கல்' உருவாகக் காரணம் என்ன?

**செ**ன்னைப் பல்கலைக் கழகத்தின் உயிரியல்—இரசாயனத் துறையினர் ஆராய்ச்சியில், சிறுநீர்க் குழாயில் 'கல்' உருவாவதற்கான காரணத்தைக் கண்டு பிடித்துள்ளனர். பைரிடாக்சின் (பி. 6.) என்ற உயிர்த்தாது பற்றாக்குறையாக இருப்பதால், சிறுநீரகத்திலிருந்து சிறுநீர் செல்லும் குழாயில் 'கல்' உண்டாகிறது.

உணவில் கலந்து செல்லும் ''கல்'' போய் அதில் அடைத்துக் கொள்வதாகக் கருதலாகாது. கால்சியம் பாஸ்பேட், கார்பனேட், காலிஸ்டிரால் போன்ற சில தசைப் பொருள்களும், நீரக அமிலமும் ஒன்று கலந்து ''கல்'' ஆகிறது. இதற்குச் சில வகை உணவுப் பண்டங்களும் பானங்களும், ''உடல் கொழுப்பு'' மாறுதல்களும் காரணமாகும்.

• • •

## காவலர் பயிற்சிக் கல்லூரி

**வே**லூரில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியைச் சென்னை அருகே உள்ள அலமாதிக்கு மாற்றுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. இக் கல்லூரியின் தரத்தை உயர்த்தி அதை அகாடமியாக மாற்றத் தமிழக அரசு விரும்புகிறது. காவலர் பயிற்சிக் கல்லூரியின் பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு, இப்போது நவீனக் குற்றக் கண்டுபிடிப்பு முறைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

• • •

## ஊர்திகள் உயர்ந்தது

**செ**ன்னை நகரத்தில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில் இருமடங்காக அதிகரித்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் 1965 முதல் 1971 வரையில் பொதுவாக எல்லா வாகனங்களும் அதிகரித்துள்ளன. 1965-ஆம் ஆண்டில் 5,597 என்ற எண்ணிக்கையில் இருந்த மோட்டார்கள் சைக்கிள்கள் ஸ்கூட்டர்கள், 1971-ஆம் ஆண்டில் 13,541 ஆக இருமடங்கிற்கு மேல் எண்ணிக்கையில் உயர்ந்துள்ளன. 1965-ல் டாக்சிகள் 1,710 ஆக இருந்தது. 1971-ல் 3,431 ஆகவும் 1965-ல் 198 ஆக இருந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் 1971-ல் 395 ஆகவும் அதிகரித்துள்ளன.

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனால் நகரத்தில் உள்ள முக்கியமான சாலைகளில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக விபத்துகள் நிகழ்ந்துள்ளன. 1965-ல் விபத்தினால் ஏற்பட்ட சாவுகள் 88 ஆக இருந்து, 1971-ல் 184 ஆக உயர்ந்துள்ளது.

—பி.வி.ஜி



# கதர் கைத்தொழில் அங்காடி

## குறளகம்
சென்னை-1











## கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

வெளிநாட்டார் போற்றும்
ஷயன் பொருள்
கலைக்கூடம்

20461
20462 20463
20464 20465





சந்தர்...

# உண்மையின் சந்நிதி

சோம.மகாதேவன்.

ஊர் மந்தையில் தனித்திருக்கும் லிங்கத்தின் வீட்டை நோக்கித் திரும்பியபோது நாட்டாமை திகைத்து நின்று விட்டார். எங்குத் திரும்பினாலும் வெளியூர் ஆட்களின் தலைகள். எங்காவது ஓரிடத்தில் புகைந்தால் அதுவே சூறாவளியாகி விடாதா?

நடப்பதையும், நடக்கப்போவதையும் நினைக்க நினைக்க, நெஞ்சு கனத்துக்கொண்டே இருக்கிறது நாட்டாமைக்கு.

பொன்னையாவைக் குற்றுயிராகத் தூக்கிவந்து, அவரிடமே வாக்குமூலம் கொடுத்ததும், அதை அவரே பதிவு செய்து அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டபோது உண்டாகிய நடுக்கம், அவருக்கு இன்னும் தெளியவில்லை:

சாகப் போகிறவன்—இல்லாததைச் சொல்லுவானா? அப்படியானால், பாண்டியனும், லிங்கமும் சேர்ந்தே அவனை அடித்தார்கள் என்பது உண்மையா? எதை நம்புவது?

ஊருக்குள்ளே நாட்டாமையை அப்பாவி என்பார்கள். எதிலும் தலையைக் கொடுத்துக் கொள்ளமாட்டார். பயந்த சுபாவம்.

இவ்வளவு நேரமும் வெளியே தலையைக் காட்டாது, குழப்பத்தோடு வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தவர், பொழுது சாயும் இந்த நேரத்தில் துணிச்சலோடு புறப்பட்டுவிட்டார். அடிப்படையில் அந்த இளவல்களின் மீது,

## 9. இடுக்கண் வருங்கால்...

இவருக்குத் தனிப்பட்ட பாசம் உண்டு. நல்லவை எனப்படுவதைத் துணிந்து செய்கிறார்களே.

''என்ன நாட்டாமை?'' என்றகுரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார் நாட்டாமை.

வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு நின்றான் குருவன். உள்ளூர்க்காரன்தான். பாண்டியன் சொன்னால் அந்த இடத்திலேயே உயிரைக் கொடுக்கக் கூடியவன்.

''அந்தப் பய கொடுத்தவாக்கு மூலத்தை அப்படியே பதிஞ்சு அனுப்பிச்சிட்டிங்களா? நடந்தது என்ன, ஏதுன்னு யோசிக்க வேணாமா?'' என்று கேட்டான் குருவன்.

நாட்டாமை எதுவும் சொல்லவில்லை. நின்று பேசினால் விவகாரம் வளராதோ? இங்கேயே பெருங்கூட்டம் சேர்ந்துவிடும்.

நாட்டாமை மெதுவாக நடந்தார்.

லிங்கத்தின் வீட்டின் முன்பாக பெரும் கும்பலே சேர்ந்திருக்கிறது. நின்றும், உட்கார்ந்தும், எங்குத் திரும்பினாலும் இந்தப் பேச்சுத்தான் நிலவுகிறது. அங்கே விழுந்தாலும், இங்கே விழுந்தாலும், தாங்கப் போவது ஊராகத் தானே இருக்கப்போகிறது.

பாண்டியன் அப்படிக் கை நீட்டக் கூடிய பையனும் அல்லவே. நடந்ததாகச் சொல்லப்படுவதை நம்பவும் முடியவில்லையே. பாண்டியன் இங்கேதான் இருக்கிறானா? இல்லையா?

வாசலில் நின்று கொண்டிருந்தவர்கள், நாட்டாமையைக் கண்டதும் ஒதுங்கி வழிவிட்டனர்.

முன்கூடத்திலே, உட்கார்ந்து, தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தவர்களையெல்லாம் கடந்து

சென்ற போது, கோடியில் மீனம்மா பாட்டி பலகையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

மீனம்மா பாட்டிக்கு, இன்றைக்குத்தான் குளிர்காய்ச்சல் வந்திருக்கிறது. தலையை மட்டும் விட்டு, உல்லன் போர்வையால் இழுத்து மூடியிருக்கிறாள்.

நாட்டாமை நெருங்கி வருவதைக் கண்ட போது ''வாங்க நாட்டமை'' என்று குரல் கொடுத்துக் கொண்டே எழுந்து வரவேற்ற மீனம்மா பாட்டி, ''தீவினை வீடு வந்து சேர்ந்திருச்சே, நான் என்ன செய்யப் போறேன்'' என்று தொடங்கினாள்.

நாட்டாமை தயங்கினார்.

அதற்குள்ளாக, நாட்டாமை ஏதோ செய்தி கொண்டு வந்திருப்பதாக நினைத்து, பலர் தொடர்ந்து வந்து கூடிவிட்டனர்.

''கச்சேரி வாசலை மிதிச்சிருப்போமா? எங்க தலையிலே இந்தப் பொல்லாங்கு வந்து சேரலாமா? இவனுக எதையோ சொல்றாங்க. எனக்கு எதுவும் புரியலையே'' என்றாள் மீனம்மா பாட்டி தலையில் கைவைத்தவாறு.

பக்கத்து அறையிலிருந்து, குரல் கேட்டுப், பாண்டியனும் லிங்கமும் அரசியும் வந்துவிட்டனர்.

''ஐயா வாங்க. உங்க வீட்டுக்குத்தான் புறப்பட்டோம். நீங்களே வந்திட்டீங்க உட்காருங்க'' என்று வரவேற்றவாறு முன்னால் வந்தான் பாண்டியன்.

நாட்டாமை, உட்கார்ந்துபேச மதியற்றவராக அவனது முகத்தை ஏறிட்டுப்பார்த்தார். பாண்டியனும், அவனுக்குப் பின்னால் லிங்கமும் நின்றதில், இருவர் முகங்களும் ஒன்றாகவே தெரிந்தது அவருக்கு.

இருவருக்குள்ளும் அப்படி எவ்விதக் கலக்கமும் தென்படவில்லையே.

''நாட்டாமை—அவன் என்னதான் சொல்லிட்டுப் போய்த் தொலைஞ்சிருக்கான்'' என்று இடையிலே அவசரத்தோடு கேட்டாள் மீனம்மா பாட்டி.

''ரெண்டு பேரும் சேர்ந்து அடிச்சதாகத்தான் சொல்லி இருக்கான் பொன்னையா. அதுக்கு மேலே சுய நினைவு இல்லாம வண்டியிலே தூக்கிப் போட்டுக்கிட்டுப் போனாங்க. நடந்தது இன்னதுன்னு புரியலையே'' என்றார் நாட்டாமை குழப்பத்துடன்.

''நடக்கிறது. இதை நடத்தி வச்சவங்களைத் தவிர, வேறே யாருக்குமே புரியாதுங்க'' என்று அமைதியாகவே சொன்னான் பாண்டியன்.

நாட்டாமைக்குத்தான் வேர்த்துப் போனது.

''நாளைக்கிப் பொன்னையா செத்துத் தொலைச்சா, இதுவே கொலை வழக்காகி, வாக்குமூலம் செம்மையா இருக்கிறப்ப, பெரிய சிக்கலாகிப் போகுமே பாண்டி. கரையடியிலே என்ன நடந்திச்சு' என்று பதட்டத்துடன் கேட்டார் நாட்டாமை.

பாண்டியன் லிங்கத்தைத் திரும்பிப் பார்த்தான்.

லிங்கம் சொன்னான்.

'' நாங்க அணைப்பட்டியிலிருந்து கரை வழியா வந்துக்கிட்டிருக்கோம். எதிர் முகமா பெரிய வீட்டு வண்டி வேகமா வந்திச்சு. வர்ற வேகத்தைப் பார்த்தே நாங்க சரிவிலே இறங்கி நின்னோம். வண்டி எங்க மேலே கொடை சாயிற மாதிரி வந்தப்ப மாட்டோட மூக்குக் கயித்தை எட்டிப் பிடிச்சு, ''மெதுவா வரலாமில்லன்னு கேட்டதுக்கு, பொன்னையா கிட்ட இருந்து முறை தவறிப் பேச்சு வந்திச்சு. அப்படி இருந்தும் மேலே வளத்துக்காமலே நாங்க திரும்பி வந்திருக்கோம்'' என்றான்.

''வண்டி தள்ளிப் போனதுக்குப் பிறகு, கூண்டுக்கு மேலே தலையைத் தூக்கி, நாளைக்கிக் களத்து மேட்டுக்கு வா பாத்துக்கலாம்னு ஏக வசனத்திலே சொல்லிட்டுப் போனான் பொன்னையா. அப்பவே நினைச்சேன்—புதுசா ஏதோ நாடகம் ஆரம்பமாகப் போகுதுன்னு. தொடர்ந்து திட்டம் போட்டே காரியம் நடந்திருக்கு'' என்றான் பாண்டியன் தொடர்ந்து.

''பிழைச்சுக்கிட்டா சரிதான். இல்லையின்னா வழக்கு கனத்துக்குமே. தெளிவா-சொல்லிப் போட்டுப் படுத்திருக்கானே பொன்னையா'' என்று கவலையோடு சொன்னார் நாட்டாமை.

நினைச்சா குலை நடுங்குதே. வீதி வழி போற சனியன் வீட்டுக்குள்ளே வந்திருக்கே என்று ஆத்திரத்தோடு பெருங்குரலெடுத்து இடையிலே நுழைந்தாள் மீனம்மா பாட்டி.

''நாங்க என்ன செய்தோம். என்ன வரப்போகுதுன்னு நீங்க இப்படிக் கலங்கிப் போறீங்க.'' என்று பாட்டியைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான் லிங்கம்.

''அடிபட்டவன் சொல்லி இருக்கானே. குறிவச்சிட்டானே எதைப் பாக்கி வைக்கப் போறானுக'' என்று கைகளை அகல விரித்து அழுகை தோய்ந்த குரலில் சொன்னாள் மீனம்மா பாட்டி.

பாண்டியன் பாட்டியின் பக்கமாக வந்து, அவளது கரங்களைப் பற்றிக் கொண்டு, ''பாட்டி முதல்லே நாங்க ஒரு தவறும் செய்யலைங்கிறதை நம்புங்க'' என்றான்.

பாட்டி ஒன்றும் பேசவில்லை. ஆனால், பொறுமலுடன்தான் பாண்டியனைப் பார்த்தாள்.

பாட்டியின் விழிகளைச் சந்தித்த பாண்டியன், திரும்பி வாசல் பக்கமாகப் பார்த்தான். சுற்றி இருந்தவர்கள் விலகத் தலைவாசல் பக்கமிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த கிழவன் மீது அவன் பார்வை தயங்கியது.



"எதிலோடு சூலன் நிக்கிறாரு. கூட்டியாங்க" என்று சொல்லி ஆளனுப்பினான்.

நரைத்துப் பழுத்துப் போனவன் சூலன். நேற்று இருந்த நிலை நினைவில் இருக்கும் போது, எங்கும், எந்தச் சூழ்நிலையிலும் உள்ளே நுழைய மனம் கூசத்தானே செய்கிறது. செய்தி காதில் விழுந்த போதிலிருந்து இங்கேதான், ஒன்றிலும் நிலை கொள்ளாமல் சுற்றிக்கொண்டிருக்கிறான் சூலன். ஊராட்சித் தலைவர் தன்னை அழைத்துவரச் சொன்னதில், தன்னிடம் அவருக்கு என்ன காரியம் இருக்கும் என்பது புரியாமல், பதட்டத்துடன், மேல்துண்டை கக்கத்தில் இடுக்கிக் கொண்டவனாகத் தட்டுத் தடுமாறி உள்ளே நுழைந்து, பாண்டியனுக்கு முன்னால் கும்பிட்ட கை நடுங்க நின்றான்.

சுருக்கங்கள் நிறைந்து, மிருதுவாகி, துவண்டு விட்ட அந்தக் கரங்களைப் பாசத்தோடு பிடித்துக் கொண்ட பாண்டியன், "தாத்தா உயிருக்கே ஆபத்து ஏற்படும்படியா நானே ஒருத்தனை அடிச்சதா சொல்றாங்க. நீங்க இதை நம்புறீங்களா?" என்று கேட்டான்.

நினைப்பதையெல்லாம் சொல்லத் துடிக்கும் வேகத்தில் கிழவனது தலை ஆடியது. பொங்கி வழியும் பாசத் துடிப்போடு கிழவன் சொன்னான்.

"எதையும் அமைதியா உக்காந்து பேசுங்க. எதுக்காகவும், கூட வாழ்றவங்களோட அடிச்சுக்காதீங்கன்னு அடிக்கடி சொல்லுவீங்களே ஐயா. நீங்களே இப்படிச் செய்தீங்கன்னு சொல்றதை நம்ப முடியுமுங்களா? தர்மம் செத்துப் போயிருமா? இது அடுக்காதுங்க" என்றபோது குழி விழுந்த கண்களில் தேங்கி நின்றிருந்த கண்ணீர், சொற சொறத்த கன்னங்களில் வழிந்தது.

"உலகமே எதுத்து நின்னாலும் நிக்கட்டும். உங்க நம்பிக்கை ஒண்ணு போதும் எனக்கு" என்று உணர்ச்சிப் பெருக்கோடு சொன்ன பாண்டியன், பாட்டியின் பக்கமாகத் திரும்பி, "பாட்டி, நானும் லிங்கமும் உங்க மடியிலே வளந்தவங்க. இவருக்கு என்மேலே நம்பிக்கை இருக்கிற அளவுக்கு, உங்களுக்கு ஏற்படலையா? நாங்க இந்தக் காரியத்தைச் செய்யலைங்கிற உறுதி இருக்கும் போது எதை நினைச்சும் எதுக்காகக் கலங்கணும்" என்று கேட்டான்.

பாட்டி ஒன்றும் பேசவில்லை.

'எந்த நேரத்தில் தான் சிவகாமி இந்த மகனைப் பெற்றெடுத்தாளோ!' என்பதை நினைத்து, நாளைக்கு முறைப்படி நடக்கப் போவதையும் எண்ணி மறுகியவாறு பக்கத்து அறைக்குள்ளே நுழைந்து விட்டாள் மீனம்மா பாட்டி.

பாட்டியின் தலை மறைந்ததும், "பொன்னையாவுக்கு அடி எங்கே விழுந்திருக்கு. வாக்குமூலம் கொடுக்கிறப்ப, பார்த்



திருப்பீங்க இல்லையா?'' என்று நாட்டாமையைப் பார்த்துக் கேட்டான் பாண்டியன்.

இவனே அடித்ததாக, அடி பட்டவன் சொல்லியிருக்கும் போது, இவனே இந்தக் கேள்வியை அமைதியாகக் கேட்பதை உணர்ந்த நாட்டாமையின் மெய் சிலிர்த்தது.

''நெஞ்சிலே ஊமையடியா விழுந்திருக்கு; அவனுக்கு எதுவுமே நேராமல் இருக்கணும். இப்ப இதுதான் முன்னாலே நிக்கிற சிக்கல். போலீசிலேயும் இங்கே சொன்னதை அப்படியே திருப்பிச் சொல்லி இருக்கான்'' என்று சொல்லி பாண்டியனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார் நாட்டாமை.

''மனப்பாடமே செய்து வச்சிருப்பாங்க'' என்று சொல்லிச் சிரிக்கத்தான் செய்தான் பாண்டியன்.

''உருட்டி முத்தையா திட்டம் போட்டே இறங்கி இருக்காரு. இதிலேதான் அவரு சாயம் வெளுக்கப் போகுது'' என்றான் லிங்கம்.

''உடனடியா அடுத்து ஆக வேண்டிய காரியத்தைப் பாக்கணும் தம்பி. எதையும் சுலபமா நினைக்கக்கூடாது'' என்றார் நாட்டாமை.

''செய்யாத,—அப்படிக் கனவிலே கூட நினைக்காத காரியத்தைச் செய்ததாகச் சொல்றாங்க. சிறு வயசிலேயிருந்து, ஒரு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்காம, ஊரெல்லாம் எனக்கு உற்றம் சுற்றம்ன்னு பழகினதுனாலே, இதை நினைச்சு எனக்குப் பயப்படவே தோணலே. என்ன நடக்கப் போகுது? எங்க ரெண்டு பேரையும் உடனே தூக்கிலே போட்டுடப் போறாங்களா? அதுக்கு மத்தியிலே எவ்வளவோ இருக்கு. உண்மையும் புதைஞ்சு கிடக்கு. எத்தனை ஆண்டுகளானாலும் அது மக்கிப் போகாது. தன்னாலே முன்னால் வரத்தான் செய்யும்'' என்று அமைதியாகவே சொன்னான் பாண்டியன்.

நாட்டாமை வாசல் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்.

சற்று எட்டி நின்றவரை ''அம்பலம்'' என்றழைத்தான் பாண்டியன்.

அம்பலம் ஊராட்சியில் உறுப்பினர். பாண்டியன் மீது உயிரையே வைத்திருப்பவன். இப்படியொரு போராட்டம் சூழ்ந்து வரும்போது, எல்லையைக் காணுமல் அம்பலத்துக்குக் கண்ணுறக்கம் வருமா?

அம்பலம் பாண்டியனுக்குப் பக்கமாக வந்தான்.

'' வந்த கூட்டம் அப்படியே விலகாம இருக்கு. பொழுதும் போயிருச்சு, எல்லாரையும் அப்படியே திரும்பச் சொல்லுங்க. எங்கேயும் எந்தப் புகைச்சலும் இருக்கக் கூடாதுன்னு சொல்லுங்க.'' என்றான் பாண்டியன் அம்பலத்தைப் பார்த்து.

'' மத்தவங்களை அனுப்பி வச்சிட்டு, நாங்க ஊருக்கு ரெண்டு பேரா இங்கே இருக்கோம். எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிட்டு உங்களை ஒரு பொழுதுக்கு உள்ள போய் உக்கார விடுவமா ? அப்புறம் இந்த ஆறு கிராமமும் ஒருமிக்க உள்ளே இருந்திட்டுப் போகுது.'' என்றான் அம்பலம் உணர்ச்சி பொங்க.

'' முதல்லே முன்னாலே நிக்கிறவங்க அமைதியா இருக்கணும். எதிலேயும் ஆத்திரமும், அதையொட்டி அவசரமும் இருக்கப் படாது. நடக்கப் போறது நல்லதுக்குன்னு நினைக்கணும்.'' என்று பாண்டியன் சொல்லி வந்தபோது, கும்பலை விலக்கிக் கொண்டு பரபரப்போடு முன்னால் வந்து நின்றான் ஊராட்சிக் கணக்கன் கன்னையா.

பாண்டியன் திரும்பினான்.

'' அம்மா வந்திருக்காங்க. உங்களைக் கூட்டியாராச் சொன்னாங்க.'' என்று அவசரத்துடனே தகவல் சொன்னான் கன்னையா.

இந்த நிலையிலும், எல்லை கடந்து அம்மா தன்னைக் காண வந்திருப்பது வியப்புக் குரியதாகவே இருந்தது. மகனைப் பார்க்கவும், பேசவும் அப்பாவே அனுமதி கொடுத்துவிட்டாரா ?

இடையில் தங்கையின் நினைவு வந்து திரும்பினான் பாண்டியன்.

' அம்மா ' என்ற சொல் காதில் விழுந்ததுமே இரண்டடி முன்னால் வந்து விட்டாள் அரசி.

அவள் விழிகளிலே நீர் கோத்திருந்தது.

இவளுக்குத் தாயைக் காண வேண்டுமென்ற துடிப்பு. என்ன செய்வது, அம்மாவுக்கும் மகனைக் காணும் ஆவல் இருந்தால் இங்கே யல்லவா வந்திருக்க வேண்டும். அந்த நிலை இந்த பரபரப்பான சூழ்நிலையிலும் ஏற்பட வில்லையே.

'' நானும் வரட்டுமா அண்ணா ?'' என்று குழந்தையை போல் கண்களைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் அரசி.

பாண்டியன் சிரித்தான்.

'' மகனை மட்டும் பார்க்கத்தான் அம்மாவுக்கு இப்பத் துணிவு வந்திருக்கு. ஒரு நாள் உன்னைப் பார்க்கவும் நிச்சயமா இங்கேயே வருவாங்க.'' என்று சொன்ன பாண்டியன், லிங்கத்தைத் திரும்பிப் பார்த்து '' நான் போயிட்டு வரேன் '' என்றான்.

'' நானும் வரேன் '' என்று சொல்லி லிங்கமும் புறப்பட்டான்.

'' எனக்கு ஆபத்து வந்தாலும் அது தனியா வராது. நீயும் இருக்கும் போதுதான் வரும் '' என்று சொல்லிவிட்டுப், பாண்டியன் தலைவாசலை நோக்கி நடந்தான். நாட்டாமையும், மற்றவர்களும் அவனைத் தொடர்ந்தனர்.

லிங்கம், தனித்து நின்ற அரசியைத் திரும்பிப் பார்த்தான்.

அவளும் திரும்பினாள். அவளது பிஞ்சு நெஞ்சில் தேங்கி நின்றிருக்கும் துயரத்தில் உதடுகள் துடித்தன.

'' நினைக்காத தெல்லாம் நடக்குது. என்னாலே உங்களுக்கு எவ்வளவு துன்பம்.'' என்றாள் கலங்கிய குரலில்.

லிங்கம் அவளுக்குப் பக்கமாக வந்தான்.

'' இது உன்னாலே மட்டும் வரலே அரசி. பின் தொடர்ச்சி தன்னாலேதான் வந்திருக்கு. இதுக்கும் ஒரு எல்லை இருந்து தானே ஆகணும். அது நல்லதாகவே இருக்கும். '' என்ற லிங்கம், அவளது புடவைத் தலைப்பை எடுத்து, புன்னகையுடன் அவள் கண்களைத் துடைத்து விட்டான்.

அவனது கரங்களைப் பற்றிக் கண்களிலே ஒற்றிக் கொண்டு, வியப்போடு அவன் முகத்தைப் பார்த்தாள் அரசி.

உள்ளத்திலே தாங்கொணுத சுமை நிறைந்து வரும்போது, அனைத்தையும் கடந்து, மறந்து, சிரிக்கும் அண்ணனைப் போலவே தான் இவருக்கும் சிரிப்பு வருகிறது.

'' என்ன அரசி ?'' என்றான் லிங்கம் குனிந்து பார்த்து.

அப்போது பக்கத்து அறைக்குள்ளிருந்து, மீனம்மா பாட்டி கூப்பிடும் கடுகப்பான குரல், இருவரையுமே திடுக்கிட வைத்தது.

(வளரும்)

# மகளிர் பகுதி



பெண்கள் உடலின் அழகைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அதனால் உணவு வகையில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் பரவலாகப் பெண்களிடத்தில் காணப்படுவது இயற்கை.

ஆண்களைவிடப் பெண்களுக்கு இரும்புச் சத்துக் கலந்துள்ள உணவு கூடுதலாகத் தேவைப் படுகிறது. இயற்கையின் நியதிப் படி இது அவசியமாகிறது என்று மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர்.

கருவுற்றிருக்கும் தாய்மார் களுக்கு உணவு கூடுதலாகத் தேவைப்படுகிறது.

எல்லாச் சத்துக்களும் நிரம்பிய உணவுகளையே உட்கொள்ள வேண்டும். கருவுற்றிருக்கும் தாய்மார்கள் உண்ண வேண்டிய உணவுகளின் அளவை மக்கன்சி என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். கருவுற்றிருக்கும் பெண்கள் நாளொன்றுக்கு உட்கொள்ள வேண்டிய உணவுச் சத்துக்களின் விவரம் :

மொத்த வெப்ப அளவு எண் : 2,500

| | | |
|---|---|---|
| புரதம் | .. | 900 கிராம். |
| சுண்ணும்புச்சத்து | - | 1.5 கிராம். |
| பாஸ்வரம் | .. | 2 கிராம். |
| இரும்பு | .. | 20 மி.கிராம். |

பால், பசுமை நிறக்கீரைகள், காய்கறிகள், பழங்கள், தானியங்கள் (அரிசி, கோதுமை), நெய், தயிர், மீன், முட்டை, பருப்பு ஆகியவைகளைச் சிறந்த முறையில் உண்பதால் உடல் நலம் சிறந்த நிலையில் இருக்கும்.

குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களுக்கு மேற் கூறிய உணவு பழக்கமே நல்லது; வைட்டமின்கள் ஏ.பி.சி. முதலிய வற்றின் அளவு கூடுதலாக இருக்க வேண்டும்.

**'' சாதாரண நாட்களில் உண்ணும் உணவைவிட அதிக அளவு சத்துள்ள உணவுகளையே குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்கள் உண்ண வேண்டும்'' என்று அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆராய்ச்சிக் குழுவினர் கருத்து அறிவித்துள்ளனர்.**

குழந்தை தாய்ப் பால் குடிக்கும் காலம் அதாவது பிறந்ததிலிருந்து ஒன்பது மாதம் வரை.

தாய்ப்பால் குடிப்பதைக் குறைக்கும் காலம் 7 முதல் 12 மாதம் வரை.

9 மாதம் முதல் 12 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கான உணவு :—

முதல் உணவு வேளை : காலை 7–30 மணி; குறுணைக் கஞ்சி, பாசிப் பருப்புக் கஞ்சியுடன் பால் சேர்த்துக் கொள்ளலாம்.

இரண்டாவது உணவு: 10–30—11 மணி : காய்ச்சிய பால்; ஒரு வாழைப்பழம்.

மூன்ருவது உணவு : பிற்பகல் 1–30 மணி : சிறிது சோறு, நன்ருகச் சமைத்த பருப்பு, இவற்றை நெய்யுடன் கலந்து பிசைந்து சிறிதளவு பசிய இலைக் காய்கறிகள் ஆகியவற்றுடன் கொடுக்கலாம் ; பாலும் கொடுக்கலாம்.

நான்காவது வேளை உணவு : மாலை 4–30—5—00 மணி; பால். தக்காளி அல்லது ஆரஞ்சுச்சாறு கொடுக்கலாம்.

ஐந்தாவது வேளை உணவு : இரவு 700—7–30 மணி; காய்ச்சிய பால் நாள் ஒன்றுக்கு 40 அவுன்ஸ் பாலுக்கு மேல் கொடுக்கக்கூடாது. தாகத்தைப் போக்க உணவு வேளைகளுக்கிடையில் தண்ணீர் கொடுக்கலாம். 8-ஆம் மாதத்திலிருந்து மெல்லும் பொருட்டு ரஸ்க், பிஸ்கட் போன்ற பொருள்களை இடையே கொடுப்பது நல்லது.

12 முதல் 18 மாதம் வரையிலுள்ள குழந்தைகளுக்கான உணவு :

முதல் வேளை : காலை 7–30 மணி : பாசிப்பருப்பு, குருணை ஆகியவற்ருலான கஞ்சியுடன் பால் சேர்த்துக் கொடுக்கலாம். இதனுடன் ரஸ்க், பிஸ்கட் ஆகியவற்றையும் கொடுக்கலாம்.

இரண்டாவது வேளை : 11 மணி : காய்ச்சிய பாலும் ஒரு வாழைப் பழமும் நன்கு சமைக்கப்பட்ட சிறிது சோறு, அல்லது கோதுமை, பருப்பு, நெய், உருளைக் கிழங்கு, கீரை கொடுக்கலாம். புலால் உணவு உண்பவர்களானல், முட்டையின் மஞ்சட்கரு, மீன்முதலியனவும் சிறிதளவு கொடுக்கலாம்.

மூன்ருவது வேளை உணவு : பிற்பகல் 1–30 மணி.

நான்காவது வேளை உணவு : மாலை 5 மணி : வாழைப்பழம் அல்லது பிஸ்கட், பால் கொடுக்கலாம்.

18 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரையில் :—

முதல் வேளை உணவு : காலை 8 மணி : இட்டலி அல்லது ரொட்டி.

இரண்டாவது வேளை உணவு: நடுப்பகல் 12-00—12-30 மணி : நன்கு சமைக்கப்பட்ட சோறு, அல்லது கோதுமைச் சோறு, பருப்பு, நெய்; காய்கறிகள், கீரைகள் முதலியன. காய்கறிகளையும், கீரைகளையும் நன்ருகச் சமைக்க வேண்டும். மோரும் சேர்த்துக் கொள்ளலாம். புலால் உண்பவர்கள் கொதித்த முட்டை, சிறிது நேரம் சமைக்கப்பட்ட மாமிசம் முதலியவற்றையும் கொடுக்கலாம்.

மூன்ருவது நேர உணவு : மாலை 4–30 மணி : பால் அல்லது ஓவல்டின், வாழைப் பழங்கள், ரொட்டி அல்லது பிஸ்கட், தக்காளி அல்லது ஆரஞ்சு சாறு.

நான்காவது நேர உணவு : இரவு 8 மணி : சிறிது சோறும் பாலும் ; சோற்றையும் பாலையும் கலந்து, சிறிது சர்க்கரை சேர்த்து ஊட்டலாம்.

நாள்தோறும் பாலுடன் சிறிதளவு காட்லிவர் எண்ணெய்யும் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

காலச் சூழ்நிலை, பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப உணவுப் பழக்கம் மாறினுலும், நல்ல வகையில் குழந்தைகளை வளர்க்க மேலே குறிப்பிட்டிருக்கும் உணவு வகைகளை ஒட்டி, நமது வசதி வாய்ப்புக்கு ஏற்பக் குழந்தைகளுக்கு உணவு அளித்தல் நலம்.

—' அஞ்சன '

# நான்கு நண்பர்கள்

'பூங்கொடி'

திருவிழா என்றால் கேட்கவா வேண்டும்? மக்கள் கூட்டங் கூட்டமாகச் செல்வார்கள்; பக்கத்து ஊர்களில் இருப்பவர்கள் நடந்து வருவார்கள்; வெளியூர்க்காரர்கள் காரிலும், பஸ்ஸிலும் வருவார்கள். சிலர் குடும்பமாக மாட்டு வண்டியில் போவார்கள்.

இரவு நேரத்தில், பால் போன்ற நிலவு வெளிச்சத்தில் மாட்டு வண்டியில் சலங்கை ஒலியுடன் செல்வதே தனி இன்பம் அல்லவா?

திருவிழா என்றால் கொண்டாட்டம் தானே? வழி நெடுக பேசிக் கொண்டும், பாடிக் கொண்டும் அன்று வருவதில் அவர்களுக்குக் கொள்ளை ஆசையல்லவா?

அன்று அந்த ஊரில் திருவிழா.

விதவிதமான விளையாட்டுச் சாமான் கடைகளும், மிட்டாய்க் கடைகளும், குடை ராட்டினமும், கண்ணைக் கவரும் வண்ண பலூன்களும் காட்சி அளித்தன. சின்னஞ்சிறு பிள்ளைகள் அவைகளை வாங்கித் தரும்படி தம் பெற்றோர்களை வற்புறுத்தினர்.

நான்கு நண்பர்கள் ஒரு மாட்டு வண்டியில் அமர்ந்து கொண்டு, திருவிழாக் காணச் சென்றார்கள். அவர்களில் ஒருவன் முறுக்கு மீசை வைத்திருந்தான். ஒருவன் தலைப்பாகைக் கட்டி இருந்தான். மற்றவன் மொட்டை அடித்து இருந்தான். இன்னொருவனோ பானை வயிற்றுடன் காட்சி அளித்தான்.

நால்வருக்கும் சொந்தமான நான்கு கோணி மூட்டைகள் வண்டியில் இருந்தன. மாட்டு வண்டி சலங்கை ஒலியுடன், 'கலகல'வென ஓடிக் கொண்டிருந்தது.

இரவு நேரம்.

பால்போன்று வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. சாலையின் இரு புறங்களிலும் அடர்ந்த மரஞ்செடி கொடிகள் இருந்தன. மரங்களுக்கு இடை இடையே வெள்ளித்தட்டு போல நிலவு தெரிந்தது. நான்கு நண்பர்களும் மிக்க இன்பமுடன் பயணம் செய்து கொண்டிருந்தனர். சில்லென்ற காற்றும், கலகலவென்ற இனிமையான சலங்கை ஒலியும் அவர்களை உறங்க வைத்தன. தாலாட்டுவது போல வண்டி அசைந்தாடிக்கொண்டுசென்றது. அவர்கள் நன்றாகத் தூங்கிவிட்டனர்.

அப்போது—

நிலவுகூட உறக்கங் கொள்ளச் சென்றதோ என்னவோ, எங்கும் இருள் மயம். வேகமாகச் சென்று கொண்டிருந்த மாட்டு வண்டி திடீரென நின்றது. மேலும் போக வழியில்லாமல் மாடு மிரள மிரள விழித்தது. வண்டிக்காரன் கீழே இறங்கிப் பார்த்தான். ஒரு பெரிய பனை மரத் துண்டு சாலையின் குறுக்கே கிடந்தது. உடனே வண்டிக்காரன் அதனை அகற்ற, வண்டியில் தூங்கிக் கொண்டிருந்த நால்வரையும் எழுப்பினான். அவர்கள் கண்களை கசக்கிக் கொண்டே கீழே இறங்கினார்கள்.

பனை மரத்துண்டை அவர்கள் ஐவரும் தூக்கக் கீழே குனிந்த போது, எங்கிருந்தோ பத்து முரடர்கள் அங்கு ஓடி வந்து, அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அந்த முரடர்கள் பார்க்கப் பயங்கரமாக இருந்தார்கள். முறுக்கிய மீசையுடன் கண்களை உருட்டிப் பார்த்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் குண்டாந்தடி இருந்தது.

''அப்படியே நில்லுங்கள்..... அசைந்தால் நொறுக்கி விடுவோம்'' என்று இவரையும் மிரட்டினார்கள்.

நான்கு நண்பர்களும், மாட்டு வண்டிக்காரனும் அப்படியே செயலற்று நின்றுவிட்டார்கள்.

''மரியாதையாக அந்த மூட்டைகளைக் கொடுத்துவிடுங்கள். இல்லையேல் நீங்கள் அனைவரும் பிணமாவீர்கள்'', என்று அந்த முரடர்கள் பயமுறுத்தினார்கள்.

நண்பர்கள் நால்வரும் அவர்களை நன்றாகப் பார்த்தார்கள். அவர்கள் ஒரு பயங்கரக் கொள்ளைக்காரர்கள் என்று புரிந்து கொண்டார்கள். கூப்பிட்டாலோ அல்லது கத்தினாலோ அக்கம் பக்கத்திலிருந்து ஓடிவர ஆட்களும் இல்லை. அருகில் வீடுகளும் இல்லை. நேரமோ நள்ளிரவு. அந்தச் சமயத்தில் என்ன செய்வதென்றே நண்பர்களுக்குத் தோன்றவில்லை. கூச்சல் போட்டாலோ அந்த முரடர்கள் கழுத்தை நெறித்துவிடுவார்களே!

அப்போது அவர்களில் ஒருவனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ஒருவன் அந்த முரடர்களை நோக்கி, ''ஐயா! உங்கள் போக்கே விசித்திரமாக இருக்கிறது. நாங்களும் உங்கள் இனத்தைச் சேர்ந்த திருடர்கள் தான். கொள்ளை அடித்த பொருட்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறோம். திருடர்களிடத்திலேயே நீங்கள் திருட வரலாமா? என்ன இருந்தாலும் நாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? வாருங்கள் வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள்!'' என்றான் நயமாக.

உடனே முரடர்களில் ஒருவன் ''அப்படியா? இதை முதலிலேயே சொல்லி இருக்கக்

நீதிக்கு ஒரு கதை

கூடாதா! அப்படியானால் எங்களுக்கும் அந்தப் பொருட்களில் கொஞ்சம் பங்கு தருவீர்களா! இன்றைக்கெல்லாம் ஒரு காசு கூட வருமானம் இல்லை'' என்றான் கரகரப்பான குரலில்.

அதற்குள் இன்னொருவன், ''ஆமாம், நாங்கள் பத்துப் பேர் இருக்கிறோமே வண்டி கொள்ளுமா?'' என்று கேட்டான் மீசையை முறுக்கியவாறே.

''இப்பொழுது நாங்கள் திருடுவதற்காக இன்னொரு இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அந்த இடம் ஒரு அரை பர்லாங் தூரம் தான் இருக்கும். நேரமோ ஆகிவிட்டது. பொழுது விடிவதற்குள் அங்குப் போயாக வேண்டும். பேசிக் கொண்டிருப்பதற்கு இது நேரமில்லை. ஆகையால் நீங்கள் எங்களைப் பின் தொடர்ந்து வாருங்கள். கொஞ்ச தூரமே இருப்பதால்உங்களுக்கும் சிரமம் இருக்காது'' என்றான் மொட்டைத் தலையன்.

அந்த முரடர்களும் இவர்கள் நயமான பேச்சில் மயங்கி, சரியென்று ஒப்புக்கொண்டு குறுக்கே கிடந்த பனை மரத் துண்டை அகற்றினார்கள். மாட்டு வண்டி 'மடமட' வெனச் சென்றது. முரடர்கள் மூச்சு வாங்கப் பின்னால் ஓடிவந்தார்கள்.

மாட்டு வண்டி ஒரு பெரிய மாடி வீட்டு முன்னால் வந்து நின்றது. நான்கு பேரும் சுவரைத்தாண்டி உள்ளே குதித்தார்கள்; அதேபோல பத்துப்பேரும் அவர்களைத் தொடர்ந்து குதித்தார்கள்.




''நீங்கள் அனைவரும் இந்தத் தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு மாடிக்குப் போங்கள். அங்குதான் பணப் பெட்டி இருக்கிறது. நாங்கள் கீழே உள்ள வெள்ளிச் சாமான்களைக் கொண்டு வருகிறோம்!'' என்றான் நால்வரில் ஒருவன் ரகசியமாக.

முரடர்கள் பத்துப் பேரும் ஒருவர் பின் ஒருவராகத் தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு மாடிக்குச் சென்றனர்.

கீழே தாழ்ப்பாள் போட்டிருந்த கதவை மெல்லத் தட்டினான் நால்வருள் ஒருவன்.

''ஐயா! ... ... ... ஐயா! ... ... ... கதவைத் திறவுங்கள்'' என்று சன்னலுக்கு வெளியே இருந்து மெல்லக் கூப்பிட்டான். உள்ளே தூங்கிக் கொண்டிருந்த ஒரு பருத்த ஆள் எழுந்து வந்து, ''யாரது? யார் நீங்கள்?'' என்று கேட்டார். உடனே அவர்கள் நால்வரும் அவருக்கு நன்றாகத் தெரியும்படி சன்னல் பக்கம் வந்து நின்றார்கள். உள்ளே இருந்தவர் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்துவிட்டு, ''ஓ, நீங்களா? என்ன இந்த இரவு நேரத்தில் ?'' என்று கேட்டுக் கொண்டு கதவைத் திறந்தார். நால்வரும் உள்ளே சென்று, அவரிடம் காதோடு காதாக ஏதோ பேசினார்கள்.

உடனே அந்தப் பருத்த ஆள், மாடியை நோக்கிப் பூனையைப் போலப் பதுங்கிப் பதுங்கிச் சென்றார். நால்வரும் வீட்டுக்கு வெளியே வந்து நின்று கொண்டனர்.

மேலே சென்றவர் எல்லா விளக்கையும் போட்டார். தனது கைத்துப்பாக்கியால் 'டுமீல் டுமீல்' என்று வானத்தை நோக்கிச் சுட்டார். துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்ட பத்துத் திருடர்களும் மிரண்டு போனார்கள். உடனே வெளியே ஓடித் தப்பிக்க முயன்றார்கள். ஆனால் அவர்களைக் குறிபார்த்தது அந்தக் கைத் துப்பாக்கி. அனைவரும் அப்படியே கைகளைத் தூக்கிக் கொண்டு ஒரு அறையினுள் பின்



வாங்கினார்கள். உடனே பருத்த ஆள் சட்டெனக் கதவைச் சாத்திப் பூட்டினார்.

'மடமட'வெனக் கீழே இறங்கி வந்து தொலை பேசியில் தகவல் சொன்னார். பிறகு வெளியே திருடர்கள் தப்பிப் போகாதவாறு காவல் காத்துக் கொண்டிருந்த நால்வரையும் அழைத்து, ''பலே ஆளய்யா நீங்கள்! பத்துத் திருடர்களையும் பத்திரமாகப் பிடித்துக் கொடுத்துவிட்டீர்களே ? உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம் ! ஆமாம்.. .. நீங்கள் வழக்கம் போல் திருவிழாவுக்குக் கடை வைக்க வந்தீர்களா ?'' என்று கேட்டார்.

'' ஆமாம் சார், நாங்க கடை வைக்கிறதுதான் வழக்கமாச் சுங்களே. இந்த ஆண்டும் நாங்க பித்தளைச் சாமான்களை எல்லாம் எடுத்துக்கிட்டு மாட்டு வண்டியிலே வரும்போது இந்தப் பத்து முரடர்களும் எங்களை வழி மறிச்சிப் பயமுறுத்தினாங்க. அப்போது தான் எங்களுக்கு இந்த யோசனை தோணுச்சி. நாங்களும் திருடர்களா நடிச்சோம்.. .. .. .. ..'' என்று முறுக்கு மீசைக்காரன் நடந்த கதையைத் தெளிவாகச் சொன்னான்.

அப்போது காற்று வேகத்தில் வந்த ஒரு போலீஸ் ஜீப் வாசல் முன் வந்து நின்றது. அதிலிருந்து போலீஸ் அதிகாரியும், போலீஸ்காரர்களும் 'தட-தட' வென்று உள்ளே வந்தார்கள்.

''என்ன சார்? உங்கள் வீட்டிலா திருட்டு நடந்தது?'' என்று கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

''ஆமாம். திருடிக் கொண்டு ஓடுவதற்குள்ளேயே அவர்களை மடக்கிப் பிடித்து விட்டேன்.

''அப்படியா? இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்.

''அதோ, மேல் மாடியில் உள்ள அறைக்குள்.

''சாமர்த்தியசாலி சார் நீங்கள்'' என்று பாராட்டிக் கொண்டே அனைவரும் மேல் மாடிக்குச் சென்றார்கள். அவர்களுடன் நான்கு நண்பர்களும் சென்றார்கள்.

''இந்த நால்வர் யார்?'' என்று அவர்களைச் சுட்டிக் காட்டிக் கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

''இவர்களால்தான் இந்தத் திருட்டுக் கூட்டமே அகப்பட்டது. இவர்களின் சமயோசிதப் புத்தியால், பல நாள் நமக்கு அகப்படாமலிருந்த ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தையே கடத்தி வந்து விட்டார்கள். எல்லாப் பாராட்டும் இவர்களைத் தான் சாரும். இவர்கள் பித்தளைச் சாமான் வியாபாரிகள்'' என்று சொன்னார் பருத்த ஆள்.

இந்தப் பருத்த ஆள் யார் தெரியுமா?

அவர்தான் இன்ஸ்பெக்டர், வேம்பு.

மறுநாள் செய்திப் பத்திரிகைகளில் கொள்ளையர் பிடிபட்ட செய்தியும், அவர்களைப் பிடிக்க உதவிய நால்வரின் பெயர்களும் வெளி வந்தன. அவர்களின் சமயோசிதப் புத்தியைப் பாராட்டிக் காவல் துறை சார்பில் அவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டது.



# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

செல்வி. கு. சுலோசனா,
பதினொன்றாம் வகுப்பு,
ம.இ.உ.பள்ளி, தேவத்தூர் அஞ்சல்
பழனி வட்டம்.

## 40. காவலரே நாட்டிற்குக் கண்

குண்டுபட்டுச் செங்குருதி கொட்டுகின்ற வேளையிலும்
சண்டையிட்டுத் தாய்நாட்டுச் சந்ததியார்—மண்டியிட்டுக்
கேவலமாய் வாழாமல் கேடறுத்துத் தான்மாளும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கு. சுலோசனா, தேவத்தூர்

குண்டோசை கேட்டவுடன் குன்றி உடல்முடக்கித்
திண்டாடும் கோழையினால் சீர்வெற்றி—உண்டாமோ!
பாவேந்தர் சொல்லைப்போல் பாய்ந்து பொடியாக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கு. தேவகி, மதுரை.

வெண்டைக்காய் வெட்டுவதும் வீரமென் றாகியபின்
சண்டைக்கா சென்று சமர்வெல்வான்?—பெண்டிர்காள்!
பாவேந்தர் சொல்லாய்ப் பதமாக்கி நீர்வளர்க்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் 'பொழிலன்', அயன் சித்தனேந்தல்

சட்டம் ஒழுங்கெல்லாம் சற்றுங் குறையாமல்
திட்டம் பலவற்றைத் தீட்டியே—இட்டமுடன்
யாவருக்கும் மேதினியில் ஏற்றமுடன் வாழ்வளிக்குங்
காவலரே நாட்டிற்குக் கண்.

—இராம. மறைமுதல்வன், வடபாதிமங்கலம்

கற்றாரும் மற்றாரும் கண்கெட்டுப் பெற்றாரும்
உற்ற தொழுநோயுற் றாரும்; தீப்—பற்றாது
காவலிடும் வீடதனைப் பெற்றாரும் போற்றும்நம்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பொன். இளங்கோவன், தடுமலை.

கட்டுக் கடங்காக் கயவர் திருக்கூட்டம்
முட்டுக் கொடுத்துவரும் வன்முறைவேர்—வெட்டிடாது
காவளர்க்கும் தோட்டக் களைஞராய்த் தொண்டுசெயும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், திருமங்கலம்

சிங்கமெனப் பாய்ந்து செருக்களத்தில் போராடி
அங்கம் முழுதும் அடிபட்டும்—தங்களின்
காவல் குறையாமல் ஆருயிரைத் தந்திடும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் ந. குஞ்சிதபாதம், வங்கனூர்

வன்முறையின் காலடியில் வாழுநிலை வாராமல்
நன்முறையாம் இன்முறையை நாடிநிற்கும்—மன்பதையில்
காவலினைத் தாங்கி அமைதியினைத் தூவிவரும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கோ. வே. இளங்கோவன், தென்னமநாடு

இன்னுயிரோ துச்சம் எதிர்ப்படையோ தூள்தூள்தூள்
பொன்னாடு காத்திடவே போர்போர்போர்—என்றார்த்துச்
சாவழங்கும் போர்புரிந்து தாயகத்தைக் காக்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் வள்ளிவேலன், நாய்க்கனூர்

உண்கண்ணார் கற்புக்கும் ஊரவரின் வாழ்வுக்கும்
கண்ணிமைபோல் காப்பளித்துக் காத்திடுவான்—புண்செ [யா
காவலிலான் தன்னலத்தில்! ஆதரவில் தாயொப்பான்!
காவலரே நாட்டிற்குக் கண்.

—சிவ. கிருட்டிணன்,

# வெண்பாப் போட்டி

மூவேந்தர் என்னும் முடிமன்னர் போற்றுதலில்,
பாவேந்தக் கற்றூர் பலருடைய—நாவிருந்தே
பூவிருக்கும் நாளும் புகழ்கொண்ட செந்தமிழின்
காவலரே நாட்டிற்குக் கண்.

—கணநாதன், சென்னை-14.

ஏற்றமிகு போர்வீரர் ஏர்பூட்டும் பேருழவர்
நாற்றிசையும் சுற்றிவரும் நல்வணிகர்—போற்றுமெழிற்
பாவலர்கள் ஆயிரம்பேர் பண்புடனே வாழினும்ஓர்
காவலரே நாட்டிற்குக் கண்.

—அ. காந்தி, பி.எஸ்சி.,பி.டி., தேவத்தூர்.

கண்ணில் மதியாரை மாற்றூராய் எண்ணுமல்
புண்ணில் எரிநுழைதல் போன்றுள்ள—எண்ணிறந்த
நாவலரும் பேச்சினையும் நல்லனவாய்க் காண்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்

—புலவர் இரா. கணபதிராசன், மதுரை.

குடும்பப் பொறுப்புணர்ந்து கூரறிவோர் போற்றக்
குடும்பப் பெருக்கைக் குறைக்கும்—வடுவில்லாப்
பாவலர்கள் பாராட்டும் பண்பார்ந்த உள்ளமுள
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் செல்வி வ. இராசரத்தினம், திருவேகம்பத்து.

ஆட்சிக் கனியாய் அருளுக் கொருநிலவாய்
நாட்டுக் கொளிசெய்யும் ஞாயிறாய்—மாட்சிசெயும்
தேவி உலகாளும் செந்தமிழ்த்தாய் தாள்நிற்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் எம். மண்ணு, உத்திரமேரூர்.

சுயநலம் சோர்வு தகாச்சொல் விடுத்து
நயமிகு நற்கருத்து நாடி—வியனுலகின்
சேவகனாய்ச் சீரடையுஞ் செம்மையுறு கட்டிளங்
காவலரே நாட்டிற்குக் கண்.

—ந. சதாசிவம், சென்னை-4.

பாவலரே நாட்டிற்குப் பைங்குரலாம் ; பாடுபடும்
ஏவலரே இந்நாட்டின் வன்கரங்கள்—ஆவலொடும்
ஈவதெனும் இன்செயலால் ஏற்பாரைக் காக்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—கோ. மெய்க்காம், விளாத்திகுளம்.

வீரம், திறன்செல்வம், வெற்றி, மொழிகளெல்லாம்
பாரில் உயர்வெனினும் பாரதத்தீர்—நேர்ந்திடும்நம்
சாவினிலும், பண்பாட்டைத் தாயகத்தைக் காத்திடும்நற்
காவலரே நாட்டிற்குக் கண்.

—அரங்க வேணுசாமி, சூரியநல்லூர்.

மக்கள் குறையறிந்து மாட்சியுறும் நன்முறைகள்
எக்காலும் பின்பற்றும் ஏற்றமுடன்—தக்கவரை
ஆவலுடன் பேணி அறங்காக்கும் ஆற்றல்சேர்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பசுமலை வீர. முருகேசன், களியமங்கை.

துணிவே துணையென்ற தூயநெஞ்சால் இன்சொல்
பணிவொடு குன்றனைய பண்பால்—அணியணியாய்
பாவலர் பாட்டில் புகழும் தகுதியுடை
காவலரே நாட்டிற்குக் கண்.

—செ. ஜெகபர் அலி, நாகப்பட்டினம்.

கன்றிழந்த ஆவின் கதறும் குரல்கேட்டுக்
கொன்றான் இளவரசைக் கோவேந்தன்—என்றென்றும்
பாவலரும் போற்றுமந்தப் பைம்புகார்ச் சோழனன்ன
காவலரே நாட்டிற்குக் கண்.

—இரத்தின மாணிக்கம், வேடசந்தூர்.

தெள்ளுதமிழ் வள்ளுவனின் தீஞ்சுவைச் சொல்லேற்று
எள்ளுதற் கில்லா இலக்கணமாய்—உள்ளுதொறும்
பாவலராய் நம்நாட்டைப் பக்குவமாய் ஆளுகின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—வே. செ, செபமணி, ஊத்தங்கரை.

இடுக்கண் வருங்கால் இதயந் தளரா
தெடுக்குஞ் செயலெல்லாம் எண்ணி—நடுக்கின்றி
நாவன்மை காட்டியே நாடாளும் நல்லரசில்
காவலரே நாட்டிற்குக் கண்.

—த. சுப்பிரமணியன், காரைக்குடி.

இடுக்கண் வரும்போ(து) இருகரங்கள் கொண்டு
தடுக்கும் எனதன்னை, தந்தை—துடுக்காக
ஏவலை மேற்கொள்ள இன்னொளிக்கண் ஈந்தநற்
காவலரே நாட்டிற்குக் கண்.

—விட்டல், கோவை-1.

கன்னித் தமிழெங்கள் கண்ணுக்கு நேரென்றே
உன்ன இனிக்கும் உயர்தமிழுக்—கின்னலெனில்
ஆவிதனை ஈந்தும் அருந்தமிழைக் காக்குமொழிக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—தெ. செல்லப்பன், கோவை.

நாடே குடும்பமாய் நல்லரசே வாழ்வியலாய்க்
காடு மலையுறைந்து கண்விழித்து—நாடிவரும்
சாவுக்கும் அஞ்சாச் சமர்புரியும் வீரப்போர்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் முத்து வேங்கடேசன், திருமயம்.

மொழியன்றோ நாடு மொழியிழந்த பின்னே
விழியிருந்தும் உண்டோ நல வீரம்—பழிவருமுன்
ஆவன செய்யும் அறிவாற்றல் மிக்கதமிழ்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பகவதி அப்பன், ஆ...

...ரைச் சுமந்திவனும் ஏற்றமுடன் செல்கின்றான்
யாரைவாழ் விக்க? உலகோரே—கூறிடுவீர்!
...வாது மற்றோர் ஒளிபெறவே யோர்பிடிக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—மெய். அருண்மொழியன், கலையூர்

...ராரும் கீழ்வங்க தேசச்சு தந்தரத்தைப
போராடிப் பெற்றதுடன் பொன்னான—பாரதத்தை
ஆவிதந்து நம்மவர்கள் காத்தார்கள் அததகுசீர்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-1

...ணிழந்த மாந்தாக்(கு)க் கண்கொடுத்தார் நெஞ்சத்தில்
புண்ணுழன்ற துன்பத்தைப் போக்கிவிட்டார்—கண்மூடி
சாவதெனினும் நான் சாற்றிடுவேன் இத்தகைய
காவலரே நாட்டிற்குக் கண்

—இரா. வெற்றிவேந்தன், மதுரை

வருவார் கணவரென்றும் வாராரோ வென்றுநீ
தெருமந்து தேய்வாளைச் சேர்ந்து—மருவுதற்கோர்
ஆவல் மனத்தடக்கி ஆங்கெல்லை காக்கின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—இரா. சு. முத்து, நெல்லை

குடிப்பதற்குக் கூழும், குடியிருக்க வீடும்
படிப்பதற்குப் பள்ளி பலவும்—குடியோம்பும்
ஏவலராய் வீட்டில் எழில்விளைய நாடாளும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—சீ. சங்கரகோமதி. சம்புகுட்டப்பட்டி

நடுக்கும் குளிர்வாடை! நள்ளிரவு வேளை!
விடுக்கும் துப், பாக்கி வெடிகள்—அடுத்தாலும்
சாவுதுரும் பென்றுபனிச் சாரல் மலைகாக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—நெற்றிக்கண்ணன், கோவை

விழியிழந் தோர்க்கு விழிநல்கி, நல்ல
வழியில் இரப்போரும் வாழ—உழைப்பதிலே
ஆவல் மிகக்கொண்ட அன்புக் கலைஞரெனும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பி. எஸ். ஆனந்தன், சமீன் ...த்துக்குடி

வெண்பாப் போட்டி

கோளர் குறும்பர் கொடுவினை யாளருடன்
வாளாய் வளருமுள வாளரும்—மீளாமல்
காவல் மதிலினுள் காத்திடும் செங்கோன்மைக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர். சாமி. வரதராசன், கல்...

தொண்டில் அசோகன்போல் தோழமையில் அக்பர்போல்
பண்பில் மனுநீதிச் சோழன்போல்—மண்ணகத்தில்
நோவார் பிணிதீர்க்கும் நன்மருந்தாய், நாடாளும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பி. சத்தியமூர்த்தி, ...த்து...

தங்கள் திருநாட்டைத் தங்களுயிர் மூச்சென்றே
அங்கம் குலைந்தாலும் அஞ்சாது—சிங்கம்போல்
சாவளவும் தாயகத்தைத் தாக்கும் பகையழிக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—என். சுந்தரேசன், சின்னச்சே...

நாட்டின் நிலையுயர நல்லோர் கலைவளர
வீட்டின் வளம்நிறைய வித்தகரின்—கூட்டுறவால்
மேலவரும் பாராட்ட மேன்மையுடன் கோலோச்சும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் த. ச. இலட்சுமணப்பிள்ளை, மதுராந்த...

செஞ்சாந்துப் பொட்டிட்டுச் சேல்விழியில் மைதீட்டிப்
பிஞ்சு மொழிபேசும் பெண்டிர்யார்?—மஞ்சுதவழ்க்
காவலரும் பூமலரின் காதலரே! கார்வண்டுக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—தா ஜீபால, ...

உயிருடமை சட்டம் ஒழுங்குமுறை காத்துச்
செயிர்நீக்கி மக்களெலாம் செம்மை—பயிலுதற்கே
தூவழியைக் காட்டித் துணைநிற்கும் பெற்றியதால்
காவலரே நாட்டிற்குக் கண்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு

மன்னுயிர் எல்லாம் மகிழ்வுறத் தொண்டாற்றித்
தன்னுயிர் வாழ்வினைத்தான் பேணாமல்—இன்னுயிர்
போவதே யானாலும் போகட்டும் என்றெண்ணும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் மதி, ...

எக்கேடு கெட்டாலென்! என்றே இருக்காமல்
மூக்காலும் மக்கள் முறையீட்டைத்—தக்கவணம்
ஆவலுடன் கேட்டறிந்து அல்லல்தனை நீக்கிவிடும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—அ. சுருளியாண்டிப்பாவலர், கோ...

# வெண்பாப் போட்டி

தண்ணொளி நல்கல் கடமை யெனக்கொண்ட
கண்ணியன் நன்மனம் காணீரோ !—தண்ணொளியே !
ஏவலராய் வாழ்கின்ற ஏழைக்(கு) ஒளிதரும்நற்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதி நகர்.

மண்மனையில் லார்'பட்டா' பெற்று மனமகிழ,
கண்ணிழந்தோர் பெற்றுக் கலகலக்கப்—புண்ணுடனே
யாவிடமும் சென்றேற்றோர் வாழ்வடைய நன்றாற்றும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—த. மு. அகமது, கடையநல்லூர்.

துப்பாக்கி ஏந்தித் துணிந்து பகைகெடுக்குந்
தப்பாத காவலர்க்குந் தாம்காவல்—இப்பாரில்
நாவலிமை யாலே நலஞ்சூழ்வார் நல்லாட்சிக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—இரா. இராசாராம் சுடலைமுத்து, பாளையங்கோட்டை.

பாவலர்கள் நாட்டின் பயன்மிக்க மூளையெனின்
நாவலர்கள் நாட்டிற்கு நாவாகும்—ஆவிதந்தே
மேவும் பகைநீக்கி மேன்மை தனைச்சேர்க்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர். கருப்பசாமி, அருப்புக்கோட்டை.

நல்வாழை போன்றென்றும் நன்மை மிகுசெய்யும்
எல்லார்க்கும் ஏவலனாய் ஏற்றமுடன்—நல்லதமிழ்ப்
பாவலரின் நாவில் புகழ்பாடி வாழும்செங்
காவலரே நாட்டிற்குக் கண்.

—இளந்தென்றல், அரக்கோணம்.

நாற்பண்பை, நாயகனை நல்லதமிழ்ப் பண்பாட்டைக்
காப்பவளே வீட்டிற்குக் கண்ஆவாள் ;—மாப்புகழ்சேர்
நாவலராய்ப் பாவலராய் நந்தாய் மொழிகாக்கும்
காவலரே நாட்டிற்குக் கண்.

—மு. சிவலிங்கம், பி எஸ்சி., வேடசந்தூர்.

ஞாயிறும் திங்களும் ஞாலத் திருகண்கள்
தாயிற் சிறந்த தமிழ்எங்கண்—சேயிழையே
பாவலர்க்கு ஞானக்கண் பாவையர்க்குக் காதலர்கண்
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் சொ. இராமச்சந்திரன், அம்பத்தூர்.

தன்னல எண்ணமின்றித் தன்குல வண்ணமின்றி
இன்னலிற் கார்மழையாய் யாவருக்கும்—முன்னுவன்
நாவன்மைச் சீரால் நடுநிலைமை காணுகின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

பரிதியன், சென்னை-82

வீதி விளக்குகள் மின்னுவதும் மற்றிங்கே
பூதவியல் விந்தை புரிவதும்—சோதிமதி
போவதும் யாரால் ? புதுயுகத்தின் விஞ்ஞானக்
காவலரே நாட்டிற்குக் கண்.

—ஜெயபால், சென்னை-

செங்குருதி சிந்திச் சிறைசென்று சீரிழந்து
மங்காத் தமிழ்க்காக்க மாய்ந்தோரே—இங்குநம்
ஆவியில் ஒன்றானார் அந்தப் பெருந்தமிழ்க்
காவலரே நாட்டிற்குக் கண்.

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

மக்களினம் சோர்வின்றி மாநிலத்தில் வாழ்ந்திடவே
தக்கநெறி காட்டித் தகைமையாய்—மிக்கான
காவலுடன் செங்கோலைக் கண்ணியமாய் ஓச்சிடும்
காவலரே நாட்டிற்குக் கண் .

—வெற்றிவேல் வேங்கடேசன், சேலம்.

நாவலர், பேராசிரியர், நல்லதமிழ்ப் பேரறிஞர்,
பாவலர்கள், பல்கலைஞர், பார்வாழ—ஏவலிடின்
ஆவலொடும் அப்பணியை ஆண்மையுடன் ஆற்றுகின்ற
காவலரே நாட்டிற்குக் கண்.

—புலவர் நா. தண்டபாணி,

செந்நெல் வயல்கள் செவ்வாழைத் தோட்டங்கள்
தென்னல் இளந்தெங்கு கனிமரங்கள்—இன்னும்
பாவலர் போற்றும் பயன்கள் தரச்செய்யும்
காவலரே நாட்டிற்குக் கண்

—கி. சம்பத், மடம்

இல்லிற்குக் கண்ணாகும் இல்லாளே ; அன்னவட்கு
எல்லாமுந் தன்கணவன் தானாகும்—மெல்லியலார்
பாவலரே பாக்களுக்குப் பண்ணவர் போலுமே
காவலரே நாட்டிற்குக் கண்

— இராசரத்தினம்,

மக்களுக்குக் கல்வியே ; மங்கைக்கு நற்கணவன்
சொக்க விலக்கணமே தாய்மொழிக்காம்—மிக்குபுகழ்
பாவலரே பைந்தமிழுக் காம்பாரில் கண்ணுடைக்
காவலரே நாட்டிற்குக் கண்

—புலவர் கா. நாச்சியப்பன்,

வீட்டை மறந்து வெயில்மழைபெனி நஞ்சாத
நாட்டுக்கு நலத்தினை நாடியே—வாட்டமின்றிச்
சேவை புரிகின்ற சிங்கங்க ளாமெல்லோர்
காவலரே நாட்டிற்குக் கண்.

பி. எஸ்.

தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து விரைவுபடுத்துவதற்காகவே தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நீர், மின்வசதி, போக்குவரத்து வசதி, சாலைகள் முதலிய வசதிகளுடன் கூடிய நன்கு திட்டமிடப்பட்ட இட வசதியைச் சிறு தொழில் அதிபர்களுக்கு அளிப்பதே, தொழிற்பேட்டைகளை நிறுவுவதன் முக்கியக் குறிக்கோளாகும். தற்பொழுது தமிழகத்தில் 4 வகையான தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அவைகளின் விவரம் வருமாறு :




(1) பல்வேறு வகையான தொழிற்சாலைகள் உள்ள பல தொழிற்பேட்டைகள். (Conventional Industrial Estates ).

(2) தோல், மின்சாரம், மின்னணுவியல், மட்பாண்டத் தொழிற்சாலை போன்ற சிறப்புத் தொழிற்சாலைகளின் தேவைகளை மட்டுமே வழங்குகின்ற சிறப்புவகைத் தொழிலுக்கான தொழிற் பேட்டைகள்(Functional Industrial Estates)

(3) பெருந்தொழில்களுக்கான துணைப் பிரிவுகளின் தேவையை ஈடுசெய்யும் துணைத் தொழிற்பேட்டைகள் (Ancillary Industrial Estates).

(4) கூட்டுறவு, தனியார் தொழிற்பேட்டைகள் (Co-operative and private Industrial Estates).

பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்

பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகளில், எல்லாவகையான சிறு தொழில்களும் இடம் பெற்றுள்ளன. ஆனல் சிறப்பாகத் தொழியியல் தொழிற்சாலைகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்பொழுது 27 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. ஆனல், 26 தொழிற்பேட்டைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. அவைகளில் 9 தொழிற்பேட்டைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலும், 11 தொழிற்பேட்டைகள் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலும், 6 தொழிற் பேட்டைகள் 1966-67, 1967-68, 1968-69-ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட ஆண்டுத்திட்ட (Annual plans) காலத்திலும் ஒப்பளிக்கப் பட்டதாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டான 1969–70-ஆம் ஆண்டில் நாமக்கல்லில் ரூபாய் 6.22 இலட்சம் செலவில், 6 பிரிவுகள் கொண்ட ஒரு தொழிற்பேட்டைத் துவங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்தொழிற்பேட்டைகளில் 31—3—1971 வரை 628 பிரிவுகள் இயங்க அரசு அனுமதித்துள்ளது. அதில் 31—3—1971 வரை 492 பிரிவுகள் கட்டி முடிக்கப்பெற்றுள்ளன. கீழ்க்கண்டவாறு 488 பிரிவுகளும் சிறுதொழில் அதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

| | தொழிற்பேட்டை அமைந்துள்ள இடம் | அரசால் அனுமதிக்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை | கட்டப் பெற்ற தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை | சிறு தொழிலதிபர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கிண்டி .. | 136 | 129 | 129 |
| 2 | மதுரை .. | 54 | 40 | 40 |
| 3 | விருதுநகர் .. | 15 | 15 | 13 |
| 4 | பேட்டை .. .. | 12 | 12 | 12 |
| 5 | ஈரோடு .. .. | 11 | 11 | 11 |
| 6 | காட்பாடி .. | 26 | 16 | 16 |
| 7 | தஞ்சாவூர் .. | 6 | 6 | 6 |
| 8 | திருச்சிராப்பள்ளி .. | 29 | 29 | 29 |
| 9 | மார்த்தாண்டம் | 5 | 5 | 5 |
| 10 | அம்பத்தூர் .. | 147 | 117 | 117 |
| 11 | தேனி .. | 12 | 7 | 7 |
| 12 | திண்டுக்கல் .. | 25 | 18 | 18 |
| 13 | காரைக்குடி .. | 18 | 12 | 11 |
| 14 | கோவில்பட்டி .. | 18 | 11 | 11 |
| 15 | கிருஷ்ணகிரி .. | 18 | 12 | 12 |
| 16 | புதுக்கோட்டை .. | 18 | 12 | 12 |
| 17 | அரக்கோணம் .. | 18 | 8 | 8 |
| 18 | சிவகங்கை .. | 6 | 6 | 6 |
| 19 | நாகர்கோவில் .. | 12 | 6 | 6 |
| 20 | கும்பகோணம் .. | 6 | 4 | 4 |
| 21 | மேட்டூர் .. | 4 | 4 | 4 |
| 22 | காஞ்சிபுரம் .. | 4 | 4 | 4 |
| 23 | கரூர் .. | 4 | 4 | 4 |
| 24 | நாகப்பட்டினம் .. | 6 | 4 | 3 |
| 25 | ஓசூர் .. .. | 6 | .. | .. |
| 26 | கடலூர் .. .. | 6 | .. | .. |
| 27 | நாமக்கல் .. | 6 | .. | .. |
| | மொத்தம் .. | 628 | 492 | 488 |

கடந்த ஆண்டில் (1971-72) மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் 68 பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அவைகளில் 40 பிரிவுகள் கட்டப்பெற்று ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே 31—3—1972 நிலவரப்படி மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் 696 பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, 536 பிரிவுகள் கட்டி முடிக்கப்பெற்று, 528 பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும், ஒரு தொழிற்பேட்டை இருக்க வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969—70 முதல் 1973—74 வரை 10 வருவாய்க் கோட்டங்களில் புதிதாக 10 தொழிற்பேட்டைகளைத் துவக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. குமாரபாளையம், தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய வருவாய்க் கோட்டம் ஒவ்வொன்றிலும், ஒரு தொழிற்பேட்டையை நிறுவ நடவடிக்கை துவக்கப்பட்டுள்ளது.

1970—71-ஆம் ஆண்டில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 30 கூடுதல் பிரிவுகளும் (Additional units) கிண்டி தொழிற்பேட்டையில் 7 கூடுதல் பிரிவுகளும் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பெற்றது. முன்பு உள்ள தொழிற்பேட்டைகளில், தேவையுள்ள இடங்களில் கூடுதல் பிரிவுகளைக் கட்டிக் கொடுக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

### ஊட்டச் சத்துணவுத் திட்டம்

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டமாகிய ஊட்டச் சத்துணவுச் சிறப்புத் திட்டத்தை, சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் வெளியூர்களுக்கும் நீட்டிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது வரை 3 வயதுத் தொகுதிச் சிறுர்கள் மட்டுமே இத் திட்டத்தினுல் பயனடைந்தனர். எனினும் இந்த ஆண்டு, கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் 3 முதல் 6 வயது வரை உள்ள சிறுர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறக் குடிசைப் பகுதியைச் சேர்ந்த 2,10,00 சிறுர்களும், 40,000 தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயனடைவர். இத்திட்டத்திற்கு ரூ. 83 இலட்சம் செலவாகும்.

(1972—73-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து)

### சிறப்புவகைத் தொழிலுக்கான தொழிற்பேட்டைகள்

சிறப்பு வசதிகள் வேண்டியுள்ள தோல்தொழில், மட்பாண்டத் தொழில், மின் தொழில், உணவு மற்றும் பழ அடிப்படையில் அமைந்த தொழில், கருவிகள் உற்பத்தி தொழில், மின்னணுத் தொழில் போன்ற மேம்பட்ட நுட்பத்திறம் வாய்ந்த சிறப்பு வகைத் தொழில்களை வளர்ப்பதற்காக, இத் தொழில்களுக்கென்றே சிறப்பான தொழிற்பேட்டைகளை நிறுவத் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்தகைய சிறப்புத் தொழில்களைத் தனித்தனியே ஒரே இடத்தில் தொகுதியாக அமைக்கத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது.

மூன்றாவது திட்டக்காலத்தில் விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழிலுக்காக ஒன்றும், மாதவரத்தில் தோல் தொழிலுக்காக ஒன்றும் ஆக 2 சிறப்புத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன. 1966—67, 1967—68 ஆண்டுத் திட்டக்காலத்தில் மேற்கொண்டு இத்தகைய 5 தொழிற்பேட்டைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

தற்பொழுது தமிழ்நாட்டில் 6 சிறப்புத் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அவைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகள், கட்டப்பெற்ற பிரிவுகள், ஒதுக்கப்பட்ட பிரிவுகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | தொழிற்பேட்டை அமைந்துள்ள இடமும், தொழிலும். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப்பெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | விருத்தாசலம் (மட்பாண்டதொழில்கள்) | 41 | 30 | 26 |
| 2 | மாதவரம் (தோல் தொழில்கள்) | 25 | 18 | 18 |
| 3 | காக்களூர் (மின் தொழில்கள்) | 16 | 10 | 10 |
| 4 | வத்தலகுண்டு (உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில்கள்) | 26 | 4 | 4 |
| 5 | அடையாறு (கருவிகள் தொழில்கள்) மின் அணுத் தொழில்கள். | 45 | 12 | 8 |
| 6 | அம்பத்தூர் (மருந்துக் கலவைத் தொழில்) | 25 | .. | ... |
| | | 178 | 74 | 66 |

இச்சிறப்புத் தொழில்களில் முனைவோருக்குத் தவணைக் கொள்முதல் முறையில் தொழிற்சாலைக் கொட்டகைகளை ஒதுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டில் (1972—73) மின்னணுக் கருவிகள், மின் கருவிகள் குறித்த 2 தொழிற்பேட்டைகளைக் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் நிறுவுவது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இராஜஸ்தானைச் சேர்ந்த 'பிலானி' என்ற இடத்திலுள்ள மைய மின்னணுவியல், பொறியியல், ஆராய்ச்சி நிறுவனம், 'விரிவுப் பணி நிலையங்களில் ஒன்றைச் சென்னையில் அமைக்க வேண்டும்' என்று தமிழ்நாடு அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்திய அரசு, தோல்—மிதியடித் தொழில் பணியாளர்களுக்கான தொடக்க வடிவ உற்பத்தி பயிற்சி நிலையங்கள் 5 நிறுவ முடிவு செய்துள்ளது. அவற்றில் ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்படும்; அதனை அமைப்பதற்காக, அம்பத்தூரில், பாதி விலையில் சுமார் 20 ஏக்கர்களை ஒதுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

### துணைத் தொழிற்பேட்டைகள்

தமிழ்நாட்டின் முக்கிய இடங்களில் பெருந் தொழிற்சாலைகள் பல அமைந்துள்ளன. அவற்றிற்கு வேண்டிய பொருள்களை வழங்குவதற்காக, அப்பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனை

காரணமாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூரில் ஒரு தொழிற் பேட்டையும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வடலூரில் மற்றொன்றுமாக 2 துணைத் தொழிற் பேட்டைகளைத் தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது.

திருச்சி மிகு அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு கூட்டு உறுப்புகள், உதிரிப் பகுதிகள் ஆகியவற்றைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்காகத் திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டும் பணிகள் முடிந்துவிட்டன. தகுந்த தொழில் முனைவர்களுக்கு, இத் தொழிற்பேட்டையில் பிரிவுகள் முன்பே ஒதுக்கப்பட்டுள்ளன.

மட்பாண்டத் தொழிலுக்கான பொருள்களைத் தயாரிப்பதற்காக வடலூரில் ஒரு துணைத் தொழிற் பேட்டையை அமைக்க, 1967–68-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அத் தொழிற்பேட்டை, பீங்கான், மற்றும் துப்புரவுச் சாதனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள இரு பெரும் நிறுவனங்களான திருவாளர்கள் சேஷஷாயி தொழிற்சாலைகள் நிறுவனம், நெய்வேலி பீங்கான் மற்றும் அதிகச் சூடு தாங்கும் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

இதேபோன்று, இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதகமண்டலத்தில் ஒரு துணைத் தொழிற் பேட்டையைத் துவங்க ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனம், தங்களது தேவைகளுக்காகவென்றே ஒரு துணைத் தொழிற்பேட்டை நிறுவத் தயங்குவதால், இத் திட்டத்தைச் செயல் படுத்த முடியவில்லை. தற்பொழுது உதகமண்டலத்தில் துணைத் தொழில் பேட்டைக்குப் பதிலாகப் பல தொழில்களுக்கான தொழிற்பேட்டை ஒன்றை நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## தனியார் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்

தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்குத் தமிழ்நாடு அரசு 1971-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் வரை பின்கண்டபடி ரூபாய் 108·79 இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது.

| | கடன் உதவி பெற்ற தொழிற்பேட்டையின் பெயர். | அளிக்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | கே. ஆர். சுந்தரம் தனியார் தொழிற் பேட்டை, திருவொற்றியூர். | 13·46 |
| 2 | கோயம்புத்தூர் தனியார் தொழிற்பேட்டை, கோயம்புத்தூர். | 32·00 |
| 3 | தூத்துக்குடி கூட்டுறவுப் பேட்டை, தூத்துக்குடி. | 12·61 |
| 4 | சக்தி கூட்டுறவுத் தொழிற் பேட்டை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை. | 16·00 |
| 5 | சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி. | 8·00 |
| 6 | வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, வியாசர்பாடி. | 24·50 |
| 7 | சேலம் கூட்டுறவுத் தொழிற் பேட்டை, சேலம். | 2·22 |
| | மொத்தம் .. | 108·79 |

மேற்கண்ட தொழிற்பேட்டைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகள், அவைகளில் கட்டி முடிக்கப்பட்ட பிரிவுகள், ஒதுக்கப்பட்ட பிரிவுகள் ஆகியவை 31—3—1971 நிலவரப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பிரிவுகள். | கட்டிமுடிக்கப்பெற்ற பிரிவுகள். | ஒதுக்கப்பட்ட பிரிவு கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| திருவொற்றியூர் .. | 22 | 20 | 20 |
| கோயம்புத்தூர் .. | 100 | 42 | 42 |
| தூத்துக்குடி .. | 40 | 20 | 20 |
| பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை. | 20 | 20 | 20 |
| சிவகாசி .. .. | 20 | 20 | 20 |
| வியாசர்பாடி .. | 100 | 53 | 53 |
| சேலம் .. .. | 35 | 12 | 12 |
| மொத்தம் .. | 337 | 187 | 187 |

தமிழ்நாடு அரசு அளித்த உத்தரவாதத்தின் பேரில், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக்கழகம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாகத் திட்டச் செலவில் 60 சதம் வரை கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. 1968–69-ஆம் ஆண்டில் சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூபாய் 6·66 இலட்சமும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூபாய் 8·69 இலட்சமும், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

.சென்ற ஆண்டில் (1971–72) மேற்கண்ட தொழிற் பேட்டைகளில் புதிதாக 22 பிரிவுகள் கட்டப்பெற்று, அவைகள் அனைத்தும் ஒதுக்கப் பட்டுள்ளன. எனவே 31—3—1972 நிலவரப்படி தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளில் 209 பிரிவுகள் கட்டப்பெற்று, அவை அனைத்தும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதுகாறும் கூறியவற்றால், தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க அதற்காகத் தமிழ்நாடு அரசு, பல்வேறு தொழிற்பேட்டைகளைத் துவக்கியுள்ளதுடன், மேலும் பல தொழிற் பேட்டைகள் விரைவில் துவக்கியுள்ளதுடன், மேலும் பல தொழிற்பேட்டைகள் விரைவில் துவக்கிடவும் முயன்றுவருகிறது என்பது தெள்ளிதின் தெரிகிறது.

—ஆர். எம்.

# முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

# TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இருமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை யேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாம்பாளங்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- மேலிற சரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| வழங்கியவர் பெயர். | தொகை ரூ. | காசு. |
|---|---|---|
| திரு கே. எஸ். சொக்கப்பர் | 101 | 00 |
| திரு அறிவுடைநம்பி | 101 | 00 |
| ஸ்ரீ வேதகிரீஸ்வரர் தேவஸ்தானம் | 250 | 00 |
| திரு எஸ். வெங்கடரமணன் | 101 | 00 |
| தமிழ்நாடு அரசிதழ் பதிவிலா ஊழியர் சங்கம். | 51 | 00 |
| பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் வழங்கியது. | 100 | 00 |
| திரு பி. சோமசுந்தரம், கதர்த் துறை இயக்குநர். | 101 | 00 |
| அண்ணு திரை அரங்கு | 1,001 | 00 |
| திரு டி. கே. ஓஸா. | 51 | 00 |
| ஹோட்டல் குரு | 104 | 00 |
| கம்மர்ஷியல் வயர் நெயில்ஸ் பாக்டரி. | 201 | 00 |
| குடிசை மாற்று வாரிய ஊழியர்கள் கணக்கு அலுவலர் மூலம். | 1,248 | 00 |
| த.நா.வீ.வ. வாரியம் தெற்கு டிவிஷன் நிருவாகப் பொறியாளர், சென்னை மூலம். | 1,000 | 00 |
| சக்தி அற நிறுவனங்கள் | 25,000 | 00 |
| சக்தி சர்க்கரை ஆலை | 25,000 | 00 |
| பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் வழங்கியது. | 10 | 00 |
| அம்பலவாண பண்டார சந்நிதி | 5,001 | 00 |
| தர்மபுரம் ஆதீன தேவஸ்தானம். | 5,001 | 00 |
| சென்னை ஆட்டோ—ரிக்ஷா ஓட்டுவோர் கூட்டுறவுச் சங்கம். | 101 | 00 |
| ஜுலியட் லாரனஸ் | 501 | 00 |
| ராமகிடம் ஸ்ரீ வெங்கடேஸ பெருமாள் தேவஸ்தானம். | 501 | 00 |
| பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் வழங்கியது (5-6-72). | 101 | 00 |
| இந்தியன் எக்ஸ்பிரஸ், மதுரை | 2,001 | 00 |
| அண்ணு திரை அரங்கம் | 1,001 | 00 |
| பெயர் அறிவிக்காத ஒருவர் முதல்வரிடம் 5-6-72-ல் வழங்கியது. | 100 | 00 |
| தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம். | 1,151 | 00 |
| சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை | 1,001 | 00 |
| பெயர் அறிவிக்காத ஒருவர் 5-6-72-ல் முதல்வரிடம்வழங்கியது. | 49,000 | 00 |
| ஸ்ரீமத் தெய்வசிகாமணி அருணுசல தேசிகர் மகாசந்நிதானம். | 101 | 00 |
| சென்னை இந்து அறநிலைய நிருவாக ஆணையர் 102 காசோலைகள் மூலம் (இந்து கோயில்கள் நன்கொடைகள்) | 2,11,550 | 00 |
| 5-6-72-ல் முதல்வர் பிறந்த நாளன்று அவரிடம் வழங்கப்பட்ட நன்கொடை. | 34,382 | 78 |
| திரு டி. எஸ். யூசுப், திருச்சி | 201 | 00 |
| வீனஸ் பிக்சர்ஸ் | 5,000 | 00 |
| திரு பி. நாகி ரெட்டி | 10,000 | 00 |
| அஞ்சுகம் பிக்சர்ஸ் | 25,000 | 00 |
| ஏ.வி.எம். அற நிறுவனங்கள். | 25,000 | 00 |
| சர். எம். சி. டி. முத்தையா செட்டியார், குடும்ப டிரஸ்ட். | 25,000 | 00 |
| திரு எம். ஏ. எம். ராமசாமி சென்னை, தென்னிந்தியா கார்ப்பரேஷன். | 25,000 | 00 |
| திரு தட்சிணுமூர்த்தி, குறிஞ்சிப்பாடி | 10 | 00 |
| திரு எஸ். கே. சிவனையா, ஆவுஇடயனூர். | 6 | 00 |
| திரு சிறைமீட்டான் எம்.எல்.ஏ., பரமக்குடி. | 50 | 00 |
| திரு சீனிவாசன், நெய்வேலி | 10 | 00 |
| திரு கே. எஸ். சீரங்க கோனர் மங்களூர், தெ.ஆ. | 10 | 00 |
| திரு எம். கே. குலாப் பாஷா திருவான்மியூர். | 10 | 00 |
| திரு டி. முனுசாமி, திருவான்மியூர். | 10 | 00 |
| திரு சி. வாசுதேவன், சின்ன சேலம். | 22 | 00 |
| திரு எம். பி. குப்புசாமி, குடியாத்தம். | 2 | 00 |
| தமிழ்நாடு வேளாண்மை அப்பர் சப்பார்டினேட் பணியாளர் சங்கம், தஞ்சாவூர். | 10 | 00 |
| | 10 | 00 |
| திரு கேசவ ரெட்டி, போளூர் | 10 | 00 |
| திரு கே. எஸ். மனேகரன், கடையநல்லூர். | 25 | 00 |
| திரு எம். சுந்தரம், திட்டக்குடி | 10 | 00 |
| எடமலை கூட்டுறவு பால்வழங்கு சங்க ஊழியர்கள்—வேளாண்மை அமைச்சர் மூலம். | 25 | 00 |
| | 25 | 00 |
| அருப்புக்கோட்டை ஜெயவிலாஸ். | 5,001 | 00 |
| திரு சங்கரலிங்கம், எம்.எல்.சி. நாகர்கோயில். | 25 | 00 |
| பார்வதி ராஜரத்தினம் நர்சரி பள்ளி, சென்னை-10. | 10 | 00 |
| பாலவிகார் குழந்தைகள், சென்னை-10. | 10 | 00 |
| திரு டி. கே. சீனிவாசன், எம்.பி. | 50 | 00 |
| பி. ஆர். தர்மிஜா டிரேடு லிங்க்ஸ், சென்னை-2. | 101 | 00 |

| | | |
|---|---|---|
| திரு சர்துல் சிங் சேத்தி ஏ. வி. எம். ஸ்டுடியோ. | 51 | 00 |
| மேட்டூர் கெமிகல் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன். | 25,000 | 00 |
| திரு வி. ஆறுமுகம், கலெக்டர், வட ஆர்க்காடு. | 202 | 00 |
| திரு டி. ஆர். வி. பாண்டுரங்கம். | 10 | 00 |
| பெத்தமபட்டி, தி.மு.க. கிளை | 10 | 00 |
| திரு எஸ். ராதாகிருஷ்ணன், குடந்தை. | 10 | 00 |
| திரு டிமடில்லஸ், புதுவை | 10 | 00 |
| திரு ஜே. தாமஸ், சென்னை-8 | 2,500 | 00 |
| ஷை | 2,500 | 00 |
| திரு ஜே. தாமஸ், நெல்லைம்பதி டீ பிராட்யூஸ் கம்பெனி. | 2,500 | 00 |
| ஷை | 2,500 | 00 |
| திரு எஸ். சொக்கலிங்கம், எடமலையூர். | 1,001 | 00 |
| திரு ஆர். எஸ். ராமலிங்கம், அனமலையம்பட்டி. | 25 | 00 |
| திரு வி. மலைக்கண்ணன், எம்.எல்.ஏ. வண்டல். | 100 | 00 |
| திரு எம். ராமச்சந்திரன், பிரான்மலை. | 101 | 00 |
| கூட்டுறவு ஆடு வளர்ப்புச் சங்கம், சிட்டாங்காடு. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கூட்டுறவு ஆடு வளர்ப்புச் சங்கம், கீழைச்சேரி. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கோழிப் பண்ணை, அறந்தாங்கி. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கூட்டுறவு ஆடு வளர்ப்பு நிலையம் நாட்டுமங்கலம். | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| சீமைப் பன்றிப் பண்ணை திருக்காட்டுப்பள்ளி. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கோழிப்பண்ணை, தஞ்சாவூர் | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கோழிப்பண்ணை, அறந்தாங்கி | 10 | 00 |
| கோழிப்பண்ணை, தஞ்சாவூர் | 10 | 00 |
| சீமைப் பன்றிப் பண்ணை, வேளாங்கண்ணி. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| மன்னார்குடி கோழிப் பண்ணை உறுப்பினர்கள். | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| மன்னார்குடி சீமைப் பன்றிப் பண்ணை உறுப்பினர்கள். | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| சீமைப் பன்றிப் பண்ணை, திருத்துறைப்பூண்டி. | 10 | 00 |
| கோழிப்பண்ணை, நாகப்பட்டினம் | 10 | 00 |
| சீமைப்பன்றிப் பண்ணை, பொறையார். | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கோழிப்பண்ணை, நாகப்பட்டினம் | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| சீமைப்பன்றிப் பண்ணை, பெரும்பண்ணையூர். | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| சீமைப்பன்றிப் பண்ணை திருத்துறைப்பூண்டி. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கோழிப்பண்ணை, குடந்தை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கூட்டுறவுக் கோழிப்பண்ணை, திருச்சி | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கூட்டுறவுக் கோழிப் பண்ணை, ஒரத்தநாடு. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கூட்டுறவுக் கோழிப் பண்ணை, பட்டுக்கோட்டை. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| கூட்டுறவு ஆட்டுப் பண்ணை, அழியா நிலை. | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| சீமைப் பன்றிப் பண்ணை, தஞ்சாவூர். | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஷை | 10 | 00 |
| ஊராட்சி ஒன்றியக் கிராம சேவக்குகள் சங்கம், நாகப்பட்டினம். | 51 | 00 |
| திரு ஏ. நடராசன், போஸ்டல் யூனிட். | 10 | 00 |
| திரு ஆர். கோவிந்தன், நாகபுரி-6. | 10 | 00 |
| திரு கே. சுப்பிரமணியன், திருகமணி, மதுரை மேயர் மூலம். | 5 | 00 |
| டாக்டர் சங்கரலிங்கம், கோபாலபுரம், சென்னை-6. | 11 | 00 |
| திரு ஏ. தண்டபாணி, ஈரோடு .. | 10 | 00 |
| திரு சின்னசாமி, காரமடை .. | 10 | 00 |
| திரு ஏ. ஆர். குலாம் காதர், பொன்னேரி. | 10 | 00 |
| திரு சாலுத்தீன் கீரனூர் .. .. | 5 | 00 |
| திரு எஸ். கே. ராஜாமணி, சிறுகடம்பூர். | 10 | 00 |
| சேத்துப்பட்டு பிருந்தாவன் ஹரிஜன கட்டடக் குழு சார்பில். | 601 | 00 |
| திரு வி. பி. ராமன், சென்னை-6 .. | 170 | 00 |
| திரு டி. எஸ். கலியாணசுந்தரம், திருத்துறைப்பூண்டி விவசாய பாங்க் ஊழியர்கள் சார்பில். | 101 | 00 |
| திரு தஞ்சாவூர் மாணிக்கவாசகம். .. | 100 | 00 |
| திரு எஸ். என். குருமூர்த்தி, மாயூரம். | 51 | 00 |
| மறைதிரு இரா. அருளப்பா, ஆர்ச் பிஷப், இல்லம், சென்னை-4. | 1,000 | 00 |
| திரு டி. வி. சம்பத், எம்.எல்.ஏ., திருவெண்காடு சுவதரணயேஸ்வரசாமி தேவஸ்தானம், டிரஸ்டிகள் சார்பில். | 1,000 | 00 |
| திரு ஆர். எஸ். தியாகராஜா, சென்னை-22. | 50 | 00 |
| ஏ.பி.என். நர்சிங்ஹோம், ஈரோடு. | 1,001 | 00 |
| திரு ஜெயராமன், சென்னை-17 | 101 | 00 |
| திரு கே. எம். இளங்குமரன், புதுக்கோட்டை. | 11 | 00 |

| | | |
|---|---|---|
| திரு ஓ. கே. அப்பாச்சி கவுண்டர், எல்லப்பாளையம். | 100 | 00 |
| எல்லம்பாளையம், கிராம மக்கள். | 302 | 00 |
| திரு டி.யு. மாணிக்கம், ஹோமியோபதி, யூனியன். | 51 | 00 |
| சித்தோடு மருத்துவமனை கட்டடக் குழு. | 125 | 00 |
| திரு ஆர். மாரியப்பன், தாரமங்கலம். | 25 | 00 |
| அமரர் அண்ணா மன்றம், தாரமங்கலம். | 10 | 00 |
| திரு எல். கணேசன், சென்னை-34. | 5 | 00 |
| திரு பொன். ராமசாமி, மேல் கொடையாறு. | 10 | 00 |
| திரு தம்பிராசன், தி. மு. கழகம் | 10 | 00 |
| திருமதி ஜி. கரோலின், சென்னை-1. | 10 | 00 |
| வாசன் தர்ம டிரஸ்ட். சென்னை-4. | 10,000 | 00 |
| திரு நாராயணசாமி, சின்னகல்லபாடி. | 10 | 00 |
| திரு ராமலிங்கம், திருவண்ணாமலை. | 1 | 00 |
| திரு கண்ணபிரான், பன்னித்திரம் | 10 | 00 |
| திரு பன்னீர் செல்வன், திருவண்ணாமலை. | 5 | 00 |
| போக்குவரத்து அமைச்சர் சுற்றுப் பயணத்தின் போது கிடைக்கப் பெற்ற நன்கொடைகள் (பெங்களூர் காந்தி நகரில் 1,049-49 கௌதம் நகர் கண்ணன் 5-00, திருநெல்வேலி கூட்டத்தில் 10-00). | 1,064 | 49 |
| திரு கே. ஆறுமுகம் பிள்ளை, அமரவிளை, நெய்யாட்டின்கரை. | 10 | 00 |
| திரு ஆர். எம். சிவராஜ், திருச்சி-1. | 20 | 00 |
| திரு ரத்தினபால குருசாமி .. | 10 | 00 |
| பளையகுப்பம், கிராமவாசிகள் .. | 10 | 00 |
| மரப்பூர் ஊராட்சி ஒன்றியம் .. ஆணையர் மூலம். | 3,000 | 00 |
| ஷை | 2,000 | 00 |
| வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம். | 1,050 | 00 |
| ஹரூர் ஊராட்சி ஒன்றியம் | 1,000 | 00 |
| நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் | 1,000 | 00 |
| காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம். | 3005 | 00 |
| பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியம். | 1,000 | 00 |
| பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம். | 3,005 | 00 |
| பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம். | 2,500 | 00 |
| தருமபுரி ஊராட்சி ஒன்றியம் .. | 1,000 | 00 |
| பர்கூர் ஊராட்சி ஒன்றியம் .. | 2,000 | 00 |
| கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் | 5,001 | 00 |
| கீழமங்கலம் ஊராட்சி ஒன்றியம். | 2,250 | 00 |
| தெங்கணிக்கோட்டை தாசில்தார் மூலம். | 5,000 | 00 |
| ஹோசூர் தாசில்தார் மூலம் | 2,500 | 00 |
| ஷை | 2,500 | 00 |
| பாலக்கோடு தாசில்தார் மூலம் | 4,510 | 00 |
| ஊத்தங்கரை தாசில்தார் மூலம் | 3,500 | 00 |
| தருமபுரி தாசில்தார் மூலம் | 1,571 | 00 |
| ஷை | 1,929 | 00 |
| ஹரூர் தாசில்தார் மூலம் .. | 5,000 | 00 |
| கிருஷ்ணகி தாசில்தார் மூலம் | 6,031 | 00 |
| நந்திவரம் திரு நாராயணசாமி. | 11 | 00 |
| கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றம், வண்ணையம்பதி, சென்னை | 101 | 00 |

| | | |
|---|---|---|
| கிராம சேவக்குகள் சங்கம், திருத்துறைப்பூண்டி. | 51 | 00 |
| தமிழ்நாடு கிராம சேவக்குகள் சங்கம், தருமபுரி மாவட்டக்கிளை. | 101 | 00 |
| திரு டி. பி. செல்வம், பர்கூர் .. | 101 | 00 |
| திரு கமலநாதன், எம்.பி. | 500 | 00 |
| திருத்துறைப்பூண்டி டவுன் பாங்க் செயலாளர் திரு வாசுதேவ கணபதி மூலம். | 123 | 00 |
| பர்கூர், விழியற்றோர் பள்ளி .. | 12 | 00 |
| திரு கே. யு. ராமையா, காட்டூர். | 2,000 | 00 |
| பர்கூர், அரசினர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மூலம். | 150 | 00 |
| என்.ஜி.ஓ. சங்கம், தருமபுரி மாவட்டம். | 50 | 00 |
| திரு சேலம் நடராஜன் .. .. | 51 | 00 |
| திருமதி கமலம் மாணிக்கம் .. | 10 | 00 |
| தருமபுரி தி.மு.க. மாநாட்டில் .. | 2 | 00 |
| தருமபுரி தி.மு.க. மாநாட்டில் திரு எம்.ஜி.ஆர். மூலம் .. | 38 | 00 |
| தருமபுரியில் ஊர்வலத்தின்போது | 40 | 01 |
| முதலமைச்சர் அவர்களின் சுற்றுப் பயணத்தின் போது வழங்கப்பட்டது. | 5 | 01 |
| சென்னை மாவட்ட மருத்துவ ராஜ குல சங்கம், சென்னை-28 .. | 10 | 00 |
| எச். சி. கோத்தாரி, சென்னை-34. | 10,000 | 00 |
| டப்ள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை-2. | 5,000 | 00 |
| மாங்காடு பேரூராட்சி.. .. | 101 | 00 |
| குன்றத்தூர் பேரூராட்சி .. | 501 | 00 |
| திருத்துறைப்பூண்டி அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள். | 267 | 00 |
| போரூர் ஊராட்சி .. | 301 | 00 |
| குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை. | 1,001 | 00 |
| கலைஞர் கருணாநிதி மன்றம், பூவை. | 101 | 00 |
| கலைஞர் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், குன்றத்தூர். | 25 | 00 |
| திரு எம். டி. சுப்பிரமணியன், சென்னை-15. | 100 | 00 |
| சிக்கராயபுரம் ஊராட்சி .. | 101 | 00 |
| குன்றத்தூர் மகளிர் மன்றம் | 10 | 00 |
| குன்றத்தூர் மகளிர் நலக்குழு... | 10 | 00 |
| திரு கரிகாலன், தி.மு.க. பூந்தமல்லி. | 51 | 00 |
| குன்றத்தூர் பொதுக்கூட்டத்தின் போது வசூல். | 2 | 00 |
| கோவூர் ஊராட்சி ஒன்றியம் .. | 101 | 00 |
| மணப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம். | 50 | 00 |
| திருமுடிவாக்கம் ஊராட்சி ஒன்றியம். | 100 | 00 |
| பொதுக்கூட்ட வசூல் .. | 5 | 00 |
| கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம். | 200 | 00 |
| அச்சரப்பாக்கம் ஆரம்பச் சுகாதார நிலைய ஊழியர்கள். | 201 | 00 |
| ஒசூர் ஊராட்சி ஒன்றியம் .. | 501 | 00 |
| சூலகிரி ஊராட்சி ஒன்றியம் ... | 550 | 00 |
| தருமபுரி தாசில்தார் மூலமாக வசூல். | 500 | 00 |
| சங்கராபுரம், வடஆர்க்காடு மாவட்டம். | 10 | 00 |

| | | |
|---|---|---|
| அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள். | 101 | 00 |
| வீரமங்கலம் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள். | 100 | 00 |
| பொதுக்கூட்ட வசூல் .. .. | 26 | 05 |
| திரு காமாலுதீன், கடைநிலை ஊழியர் சங்கம். | 5 | 03 |
| துறைமுகக் கூட்டத்தில் வசூல். | 10 | 00 |
| திரு தங்கராஜ், விளாம்பட்டி உயர்நிலைப்பள்ளி. | 25 | 00 |
| ஒலிம்பிக் பொழுதுபோக்கு சங்கம், சென்னை-17. | 101 | 00 |
| தென்னார்க்காடு கூட்டுறவு நூற்பாலை, வேலூர். | 1,001 | 00 |
| உரிமையாளர் திரு வெங்கடேஸ்வரா நிறுவனம், திருப்பத்தூர். | 505 | 00 |
| திருப்பத்தூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம். | 1,001 | 00 |
| திருப்பத்தூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம். | 1,001 | 00 |
| தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய ஊழியர் சங்க முன்னணி, வேலூர். | 1,001 | 00 |
| குடியாத்தத்தில் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டிய வகையில். | 6 | 00 |
| தாரணம்பேட்டை வணிகர்கள். | 51 | 00 |
| திரு அப்துல்சுக்கூர் அண் கோ., ஆம்பூர். | 1,001 | 00 |
| திரு டி. அமீர்பாட்சா, திரு டி. அப்சல் பாட்சா, நரியாம்பட்டி. | 101 | 00 |
| ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 1,001 | 00 |
| திரு கிருஷ்ணன் எம். எல். ஏ., நரியாம்பட்டி. | 101 | 00 |
| திரு ரவிச்சந்திரன், முனிசாமி லாட்ஜ், திருப்பத்தூர். | 15 | 00 |
| முதல்வர் சுற்றுப் பயணத்தின் போது. | 382 | 00 |
| உரிமையாளர், பாக்கியலட்சுமி பேருந்து நிறுவனம், திருப்பத்தூர். | 101 | 00 |
| திரு குப்புசாமி .. .. | 30 | 00 |
| திரு எம். அய்சத்நஜியா, சென்னை-6. | 10 | 00 |
| இராமநாதபுரம் சமஸ்தானம் .. | 5000 | 00 |
| பட்டுக்கோட்டை என். சாமிநாதன். | 100 | 00 |
| இஸ்லாமியா நற்பணி மன்றம், தாம்பரம். | 301 | 00 |
| காதர்பாட்சா .. .. | 10 | 00 |
| முதலமைச்சர் இல்லத்தில் வழங்கப்பட்டது. | 10 | 00 |
| திரு பங்காரப்பா, எம். எல். ஏ., பெங்களூர். | 10 | 00 |
| திரு டி. கே. கோவிந்தசாமி அரிசுந்தையார், தஞ்சை. | 101 | 00 |
| டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, சென்னை. | 500 | 00 |
| 'சிட்கோ' தொழிற்பேட்டை, தொழிற்கூட அதிபர்கள் சார்பில் திரு பழனியப்பன். | 1,001 | 00 |
| திரு ஆர். வெங்கடசாமி நாயுடு, தென்னிந்திய விஸ்கோஸ், கோவை. | 15,000 | 00 |
| திரு சிவரத்தன் கோயங்கா கல்கத்தா. | 1,000 | 00 |
| திரு அன்பானந்தம், சென்னை-6. | 102 | 00 |
| திரு என். கோதண்டபாணி, மின்வாரியத் தலைமைப் பொறியாளர். | 101 | 00 |
| டால்மியா சிமெண்ட், டால்மியாபுரம். | 15,000 | 00 |
| புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்கள். | 702 | 51 |
| புதுக்கோட்டை மத்தியக் கூட்டுறவு வங்கி. | 35,000 | 00 |
| புதுக்கோட்டை தேவஸ்தானம். | 1,001 | 00 |
| திரு வி. ஏ. வைரவன் செட்டியார் விசாலம், திருச்சி. | 1,001 | 00 |
| புதுக்கோட்டை பகுதி இசை வேளாளர் முன்னேற்ற சங்கம், புதுக்கோட்டை. | 101 | 00 |
| புதுக்கோட்டை பொதுக்கூட்ட வசூல் (12–7–72). | 37 | 55 |
| தென்னேரி பூண்டி கிராமங்களில் பொதுப்பணித்துறை அமைச்சரிடம் வழங்கியது. | 20 | 00 |
| இளைஞர் அணித் தொண்டர்கள் மன்னடைக்காடு குடுந்தன் கோடு வட்டாரம். | 73 | 00 |
| திரு மாணிக்கவாசகம், தேவராயபுரம். | 55 | 00 |
| திரு எம். ரோச், தி. மு. கழகம், கள்ளிகுளம். | 51 | 00 |
| காஞ்சி, அழகிரி நினைவு மன்மன்றம். | 10 | 00 |
| காஞ்சி கல்யாணசுந்தரம், எம். பி. | 100 | 00 |
| திரு முத்துசுப்பிரமணியம்., மேட்டூர் அணை. | 5 | 00 |
| தமிழ்நாடு ஹோமியோபதிமன்ற உறுப்பினர்கள், சென்னை. | 1,201 | 00 |
| திரு ஆர். கோவிந்தன், இளநிலைப்பொறியாளர், நாகபுரி-6. | 10 | 00 |
| 27–7–72 அன்று திண்டிவனம் பொதுக்கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சரிடம் நகர தி.மு.க. உறுப்பினர்கள் வழங்கியது | 80 | 13 |
| திரு வேம்லத்தூர் சா. பழ. வி. கிருஷ்ணன். | 5 | 00 |
| திரு கருணாநிதி .. .. | 10 | 00 |
| திருமதி எஸ். எஸ். வேதவல்லி. | 10 | 00 |
| நாமக்கல் கலைஞர் கருணாநிதி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவியர் | 300 | 00 |
| இராசிபுரம் வி. ஆர். சின்னச்சாமி, அண் கோ. | 101 | 00 |
| நாமக்கல் வட்டம் வட்டிக் கடைக்காரர் சங்கம். | 500 | 00 |
| முதல்வரிடம் வழங்கப்பெற்றது. | 21 | 00 |
| ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர். | 1,97,577 | 50 |
| பல்லக்காப்பாளையம் ஊராட்சி ஒன்றியம். | 5 | 00 |
| குமாரபாளையம், ஒன்றியப்பள்ளி தலைமை ஆசிரியர். | 25 | 00 |
| திரு நமசிவாயம், ஊராட்சி ஒன்றியத் துணைத்தலைவர், குமாரபாளையம். | 50 | 00 |
| குமாரபாளையம் தி. மு. க. | 12 | 00 |
| மொத்தம் — | 9,08,989 | 57 |

(தொடரும்)



ஆராய்ச்சி மணி 10
கதை: 'இளவல்'
நடுக்காட்டில் யாருமே செல்ல முடியாத இடத்தில்
அந்தப் பையன் மணியை வைத்துக் கொண்டு போலீசார் நம்மை எப்படி எப்படி விரட்டிப் பிடிக்கிறாங்க.... அந்தப் பயலை என்ன செய்யணும் தெரியுமா?
பொன்மலை! ஆபத்து வரும் பொழுதுதான் நம்முடைய அறிவு கூர்மையா வேலை செய்யணும் இருந்து இருந்து அந்தப் பொடியனா நமக்கு எதிரி?
நம்முடைய ஆட்கள் பிடிபட இந்தப் பொடியன் காரணமில்லையா? போலீஸ்காரர்கள் அவனுக்குப் பெரிய துப்பறியும் மேதை என்று விளம்பரம் தருகிறார்களே... இரண்டு நாட்களுக்கு முன்னர் கூட கள்ளக் கடத்தல் வைரத்தைக் கண்டுபிடித்ததுமே அந்த மணிதான் நம் ஆட்கள் பிடிபட்டதிற்கு முழுக் காரணமும்
பொன்மலை இன்னும் புரியாமே பேசறீங்க. அந்தப் பொடியனை 'துப்பறியும் சாம்பு'வாக காட்டி ஊரை ஏமாத்துறாங்க போலீசார். சாட்டை இல்லாமே பம்பரம் சுழலுமா? நம்மைக் காட்டிக் கொடுத்தது மணி இல்லை. அவன் அப்பா திருஞானம்
அதுதான் நமது போலீசார் திறமை... முள்ளை முள்ளால் எடுப்பதுபோல் சூழ்ச்சியை சூழ்ச்சியால் வெல்ல நினைக்கிறார்கள், நாம் நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாதுன்னு நிரூபிக்கணும். அதற்கான திட்டத்தோடுதான் இங்கு வந்தேன்.
மதுரை விருந்தினர் வீட்டில்...
கயல்விழி என்னைப் பார்க்கிறவங்க எல்லாம் நம்ப மணியைப் பற்றி என்னமாய்ப் புகழுறாங்க தெரியுமா?
மணிக்குக் கிடைக்கிற புகழ் எல்லாம் நாளைக்கே போய்விடும்னு பயமா இருக்கு அப்பா! அந்த அளவுக்கு அவன் நடந்துக்கிறான்...
நீ எதற்கும் பயப்பட வேண்டாம் கயல்விழி! மணி எவ்வளவு முரடனாக இருந்தாலும் அவ்வளவுக்கு அவ்வளவு கெட்டிக்காரனாக இருக்கான். அவன் புத்திசாலித்தனத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையா?
அப்பா.. மணி என் தம்பிதான். குருட்டுத்தனமான செய்கைகளால் எப்படியோ அவனுக்குப் புகழ் கிடைக்கிறது... இதை உண்மை என்று நம்பினால் நாம்தான் முட்டாள்களாகி விடுவோம்! இந்தக் கடிதத்தைப் பாருங்கள்!
'கடிதத்தைப் படித்த திருஞானத்தின் முகம் பெரிதும் மாறுதலடைந்தது'...
கயல்விழி நாம் உடனே ஊருக்குப் புறப்பட வேண்டும். இந்தக் கடிதத்தை உன்னிடம் யார் கொடுத்தார்?
ரொம்ப ரகசியமா சேகர் சார் கொடுத்தார் வேறு யாருக்கும் தெரிய வேண்டாம் என்று சொன்னார்.
சேகருக்கு யார் கொடுத்தார்கள் சேகர் கூடத்தானே மணியையும் மாணிக்கத்தையும் அனுப்பி



சேகருடைய சிநேகிதர் ஒருத்தர் இரவலா கார் கொடுத்தாராம். அந்தக் காரில் ஏறிக்கொண்டு அழகர் கோவிலைப் பார்த்துவிட்டு வர்றேம்னு போறாங்க.....
...ரையிலிருந்து அழகர் கோவிலுக்குச் செல்லும் சாலையில்...
மணி, பயணம் எப்படி இருக்கு?
சினிமாவிலே வர்றமாதிரி எழுந்து நின்னு பாடிக்கிட்டு வரணும்னு தோணுது. அவ்வளவு ஜாலியா இருக்குது.
டேய் மணி! நீ வேறே பாடா தேடா. இந்தக் கார் போற சத்தமே பயமா இருக்கு. நீ வேறே ஏண்டா
ரொம்ப வேடிக்கையாகப் பேசிக்கிட்டு வர்றீங்களே நான் முதல்லே சொன்ன மாதிரி கள்வர்கள் குகையை முதலில் பார்த்துவிட்டு வருவோம்...
இங்கே என்னென்ன சார் பார்க்கணும்?
நேரே போனால் அழகர் கோவில் பழமுதிர் சோலை முதலிய இடங்களுக்குப் போகலாம். முதலில் கள்வர் குகைப் பார்க்கணும். அங்கே பார்த்தவுடனே உங்களுக்கு அதிசயமா இருக்கும்.
என்ன சார் அதிசயம்?
என்ன சார் அதிசயம்....
நேரே போனால் அழகர் கோவில் பழமுதிர் சோலை முதலிய இடங்களுக்குப் போகலாம். முதலில் கள்வர் குகைப் பார்க்கணும் அங்கே பார்த்தவுடனே உங்களுக்கு அதிசயமா இருக்கும்...
என்ன சார் அதிசயம்...
ஹாஹா ஹா.... டேய் வாசு! இந்த லெட்டரைப் பாருடா. கன்னு முன்னுனு எழுதியிருக்கிறார். சினிமா டயலாக் நிறைய எழுதியிருக்கிறார் ஒரே தமாஷா இருக்கு....

# உணவுப் பழக்கம் உடலைக் காக்கும்

"பெப்டிக் அல்சர்" என்று நாம் பொதுவாகச் சொல்லும் குடற்புண், உலகத்திலேயே நமது நாட்டில்தான் அதிகமாக ஏற்படுகிறது. அதுவும் குறிப்பாகத் தென்னிந்தியாவில்தான் அதிகம். இந்த நோய் அவ்வளவு கடுமையானது அல்ல. புண் இயற்கையிலேயே ஆறும் தன்மை உள்ளது. மருத்துவத்தாலும் ஆற்றலாம்.

புரதச் சத்து அதிகம் இல்லாத உணவை உட்கொள்ளுவது, சூடாகச் சாப்பிடுவது, நிறையக் காரப் பொருட்கள் சேர்த்துக்கொள்வது, வேளை தவறிச் சாப்பிடுவது இவை எல்லாம் இந்நோய் ஏற்படக் காரணமான உணவுப் பழக்கங்கள்.

புகை பிடிப்பது, மது அருந்துவது, அதிகமாகக் காப்பி, தேநீர் அருந்துவது, பசித்த வயிற்றில் புகையிலை போட்டுக் கொண்டோ, தேநீர் அல்லது காப்பி அருந்தியோ பசியை அடக்க முயல்வது ஆகியவை முக்கியமாக இந்தப் புண்ணை ஏற்படுத்தும்.

இந்தக் காரணங்களால், ஆண்களுக்குக் குறிப்பாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, இது அதிகம் நேருகிறது. தலைமுறை வழியாக வருவதில்லை. இருபது முதல் நாற்பது வயதுவரை வழக்கமாக ஏற்படுகிறது. இரத்தத்தில் 'ஓ' பிரிவு உள்ளவர்களுக்கு இது ஏற்படக் கூடிய வாய்ப்பு அதிகம் உண்டு. மரக்கறி உணவு சாப்பிடுபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே தனியான வித்தியாசம் எதுவும் இல்லை. மனக்கவலை இதை அதிகரிக்கச் செய்யும்.

வயிற்றின் மேற்பகுதியில், குடைவது போன்ற வலியை உணரலாம். சிறிது உணவு உட்கொண்டால் அந்த வலி குறைகிறது. இந்த வயிற்று வலி முதுகுவரை பரவும். இது ஆரம்ப அடையாளம். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, இந்த வலி இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தொடங்குகிறது. எந்த உணவை உட்கொண்டாலும் வாந்தி எடுக்கிறது.

இந்த நிலையில்தான் பெரும்பாலும் நோயாளிகள் டாக்டரிடம் வருகிறார்கள். வலி ஏற்படும் இடம், வலியின் தன்மை, இடைவெளி, இரவில் வலி ஏற்படுதல், வலி பரவுதல், உணவு உட்கொண்டதும் அல்லது பசி ஏற்படும் போது வலி, அமிலமாற்று மாத்திரைகள் உட்கொண்டால் வலிகுறைவது, மலம் கழிப்பது, மார்பு எரிச்சல் ஏற்படுவது ஆகியவற்றைப் பற்றியும் டாக்டர் விசாரிக்கிறார்.

சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் இரைப்பை குடல்நோய் பிரிவின் முதல்வராக இருக்கும் டாக்டர் திரு என். ரங்கபாஷ்யம், எம்.பி.பி.எஸ்., எப்.ஆர்.சி.எஸ்., எப்.ஏ.சி.எஸ்., எப்.ஐ.சி.எஸ்., புகழ்மிக்க அறுவை மருத்துவராவார். ஜப்பானுக்குக் கௌரவப் பேராசிரியராகச் சென்று மருத்துவத்தில் மேலும் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளார். வயிற்றில் ஏற்படும் புற்று நோயைத் தொடக்கத்திலேயே கண்டு பிடிக்கும் ஆய்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

டாக்டர் ரங்கபாஷ்யம் அவர்களின் தலைமையில் இயங்கும் மருத்துவ ஆய்வு நிலையத்தில் டாக்டர் கிருஷ்ணராஜ், எம்.எஸ்., டாக்டர் இராமகிருஷ்ணன், எம்.டி., ஆகியோரும் மேலும் பல அறுவை மருத்துவர்களும், பயிற்சி பெறும் இள மருத்துவர்களும் உள்ளனர். இதுவரை 1,000 நோயாளிகளை ஆய்ந்து சிகிச்சை அளித்துள்ளனர். அவர்களில் 600 பேருக்கு அறுவைச் சிகிச்சை இல்லாமலே குணப்படுத்தியுள்ளனர். தேவைப்பட்டால், தவிர்க்க முடியாத நிலையில் மட்டுமே அறுவை செய்கின்றனர். அறுவைச் சிகிச்சை வியக்கத்தக்க வகையில் வெற்றியாகவே முடிகிறது.

குடல் அறுவை, உணவுக் குழாயின் நீளத்தைக் குறுக்குதல், இரைப்பையை இடத்தை விட்டு மேலே தூக்கி வைப்பது போன்ற செயல்களைச் செய்து சாதனை புரிகின்றனர்; சாகக் கிடப்போரையும் காப்பாற்றுகின்றனர்.

வயிற்று நோய் இந்தியாவில்தான் அதிகமாக உள்ளது; ஏழைகளிடமே அதிகம் காணப்படுகிறது; போதிய அளவு சத்துணவு பெறமுடியாத ஏழ்மையே அதற்குக் காரணம் என்கிறார், டாக்டர் ரங்கபாஷ்யம்.

மலம், சிறு நீர், இரத்தம், சர்க்கரைப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. எக்ஸ்-ரேயும் எடுக்கப்படுகிறது. குடற்புண் ஏற்பட்டிருப்பதுதான் நோய்க்குக் காரணமா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள இவை உதவுகின்றன. புற்றுநோய் இருந்தாலும் இவற்றில் சில அடையாளங்கள் இருக்கலாம். 'அமீபியாசிஸ்' போன்ற குடல்நோய், உருக்கி நோயின் தொடக்கம், மூலவியாதி ஆகியவை இருக்கிறதா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். பித்த நீர்ப் பையில் கற்கள் சேர்ந்து அடைத்துக் கொண்டாலும் இது போன்ற சில அடையாளங்கள் இருக்கும். கூடவே சில சமயம் காமாலை நோயும் உண்டாகும்.

ஆரம்ப நிலையில் மருந்துகள் உட்கொள்வதும் உணவுப்

பழக்கங்களைச் சரி செய்து கொள்வதும் மிகுந்த பலன் அளிக்கும். மருந்துகள் மாத்திரையாகவோ, பொடியாகவோ, கலவை நீராகவோ இருக்கும். அதிக நோய் வரும்போது அவற்றைப் பயன்படுத்துவது நல்லது. இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்குஒரு தடவை உணவு உட்கொள்ளும் இடை வேளைகளிலும், இரவிலும் மருந்தை உட்கொள்ளலாம். மாத்திரையாக இருந்தால் மென்று தின்பது நல்லது. வேறு சில மருந்துகளையும் மருத்துவர் உங்களுக்குக் கொடுப்பார். இவை சிறிதளவு கசப்பாக இருக்கும். அவற்றை இரவில் உட்கொள்வது நல்லது. மேலும் அம்மருந்துகளை உபயோகிக்கும் முறைகளை மருத்துவர் சொல்வார். காலையில் எழுந்திருக்கும்போது, நாக்கு வறட்சியாக ஆகும் வரை, அம்மருந்தின் அளவை அதிக்ரிக்க வேண்டும். அந்த நிலை வந்தபின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம்.

இப்படி மருந்துகளினால் குணமாகாவிட்டாலும், புண் முற்றிப் போய் அதனால் இரத்த வாந்தி அல்லது இரத்த பேதி ஏற்பட்டாலும், அறுவைச் சிகிச்சை அவசியமாகிறது. குடற் பகுதியில் சில அணுக்கள் அமிலங்களை உற்பத்தி செய்பவை. இந்த அணுக்கள் அதிகமாகலாம். அல்லது அவற்றின் அமில உற்பத்தித் திறன் கூடுதல் ஆகலாம். புகை பிடித்தல், வாசனைப் பொருட்கள் இவற்றினால் அமில உற்பத்தி அதிகப்படுகிறது. இந்த அமில உற்பத்தியை மருந்தால் குறைக்கலாம். அல்லது அறுவை மூலம் இரைப்பையின் இறுதிப் பகுதியை எடுத்து விடலாம். உரிய மருந்துகளைச் சாப்பிட்டு, நல்ல உணவு உட்கொண்டால் அறுவைச் சிகிச்சை தேவைப் படாமற் போகலாம்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு சரியான பழக்கங்களை அமைத்துக் கொண்டால், நலமாக வாழ முடியும். பெண்களுக்குக் கருவுற்ற காலத்தில் குடற் புண்ணின் வலி குறையும். இந்த அறுவைச் சிகிச்சையால், அவர்களுடைய தாய்மையை ஏற்கும் தகுதிக்கு எந்தக் கெடுதலும் நேர்வதில்லை.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு வயிற்றில் செரிப்பு, மலப்போக்கு ஆகியவற்றை எக்ஸ்ரே மூலம் ஆராய்கிறார்கள். நூற்றுக்கு எண்பது பங்கு திருப்திகரமான பலன்கள் கிடைக்கின்றன. அப்படிச் சரியாகாதவர்களுக்கு மறுபடி அறுவை சிகிச்சை செய்ய வேண்டி நேரலாம். சிகிச்சைக்குப் பிறகு அமில அளவு, உடல் நிறை ஆகியவற்றைச் சோதித்துக் கொள்ள வேண்டும். மருத்துவரிடம் ஆலோசனை பெற, கொஞ்ச நாட்களுக்குத் தொடர்ந்து மருத்துவமனைக்கு வந்து போவது நல்லது. உட்கொள்ள வேண்டிய உணவு, டானிக் ஆகியவற்றைப் பற்றியும் மருத்துவர் எடுத்துச் சொல்ல இது வசதி செய்யும்.

எந்த வகை உணவையும் நீங்கள் உட்கொள்ளலாம். ஆனால் எது உங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை என்பது அனுபவத்தில் தெரியும். அவற்றை விலக்கி விடுங்கள். காரமான உணவு, கடினமாகச் சீரணமாகும் உணவு, காபி போன்ற பானங்கள் ஆகியவை நோய்க்குக் காரணமாகச் சிலருக்கு இருப்பது உண்டு. அவற்றை அவர்கள் தவிர்க்க வேண்டும். புகைபிடிப்பதும், மது அருந்துவதும் கெடுதி செய்பவை. அவற்றை முழுவதும் நீக்கிவிட வேண்டும். மனக் கவலையும் பதட்டமும் இருக்கக் கூடாது. இதனால் புண் ஏற்படுவதும் அதிகரிப்பதும் நேருகிறது.

உணவைச் சிறு அளவில் எத்தனை தடவை உட்கொள்ள முடியுமோ அத்தனை தடவை உட்கொள்ள வேண்டும். அரிசிச் சாதம், கஞ்சி, வாழைப்பழம், ரொட்டி போன்றவற்றுடன் பால் போன்ற பானங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்கு ஒரு தடவை சிறு அளவில், உணவு உட்கொள்வதில் நிதானம் காட்டி, நன்றாக மென்று மென்று சாப்பிட வேண்டும். இரவில் நல்ல தூக்கமும், பகலில் சாப்பிட்ட பின் சிறிது ஓய்வும் அவசியம். பருப்பு, முட்டை, உடைத்த கடலை, பால் போன்ற புரதச் சத்துள்ள உணவு நன்மை தருவதாகும்.

சென்னையில் ஸ்டான்லி மருத்துவ மனையில் இதற்கான சிறப்புச் சிகிச்சைப் பகுதி இருக்கிறது. அங்கே இதற்கான ஆராய்ச்சிகளையும், மருத்துவ முறைகளையும் செய்வதோடு, ஆறு ஆண்டுகளுக்கு மேலாகக் கண்டறிந்த நோயாளிகளின் விவரங்களையும் தொகுத்து வைத்திருக்கிறார்கள். பிற நோயாளிகளின் மருத்துவத்துக்கு உதவுவதோடு, சிகிச்சை செய்து கொண்டவர்களைப் பின்பு தொடர்ந்து கவனிக்கவும் இம்முறை மிகவும் பயன்படுகிறது.

நல்ல உணவு, நிதானமாக உட்கொள்ளும் உணவு, வேளா வேளைக்குச் சாப்பிடும் உணவு உங்களைக் குடல் புண்ணிலிருந்து காப்பாற்றும். மனக்கவலை, புகை, பிடிப்பது, பசி வேளையில் காபி, தேநீர் போன்ற பானங்களை அருந்துவது ஆகியவற்றைத் தவிர்ப்பது பெரிதும் உதவும். எதற்கும், ஆரம்ப நிலையிலேயே மருத்துவரை அணுகுங்கள்.

டாக்டர் ரங்கபாஷ்யம் குழுவினர் இந்த நோயாளியின் இரைப் பையை மேலே தூக்கி வைத்து அவரைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.



ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக